புஸ்தகம் 1.] ஸௌம்ய௵ ஐப்பசி௴ [ஸஞ்சிகை உ.

# வித்யாவிஹாரிணி








பத்திராதிபர்:
ஸி. என். கிருஷ்ணஸ்வாமி அய்யர் அவர்கள் எம். ஏ., எல். டி.,

## பொருளடக்கம்

1. பிரபஞ்சவர்த்தமானம் ... ... ... ... 41
2. காவியகாண்டம்:—
 1 ரஸப்பிரகாசம் (தொடர்ச்சி) உ.வே. என்.வி. தேசிகாசாரியர்கள். ... 46
 2. பிள்ளைத்தமிழ். ஸ்ரீமான்-பண்டிதர் வெங்கடரமண அய்யரவர்கள். ... 48
 3. தேசிய பாஷைகளில் வசனநடை குதிரைக் குரடா. ... ... ... 53
3. சாரித்திரகாண்டம்:—
 1. மகாராஜச் சக்கரவர்த்தியின் மஹா சாஸனம். ... ... ... ... 55
 2 மாதருடைமையும், அதைத்தொலைக்கும் உபாயமும். ஸ்ரீமதி-மீனாக்ஷியம்மாள் ... 58
 3. விசுவாமித்திர மகாரிஷி. ... ... ... ... ... ... 62
 4. விஜய தசமி ஸ்ரீமான் ஸ. அனந்தய்யர், அவர்கள். ... ... ... 65
4. கலைவகைக்காண்டம்:—
 1. தேசிய ஔஷதங்கள். எட்டிகொட்டை. .. ... ... ... 68
 2. வாகனவகைகள். ஸ்ரீமான்-டி.எஸ். வெங்கடரமண அய்யரவர்கள், பி.ஏ., எல்.டி., 71
5. விநோதகாண்டம்:—
 வாமதேவன். ஸ்ரீமான், வி. ஏ. கோபால கிருஷ்ணய்யரவர்கள். ... ... 75
6. சமாசாரக் குறிப்புகள்.—
 1. ஸ்ரீமான், ஜனரேபில வி. கிருஷ்ணசுவாமி அய்யரவர்கள். ஹைகோர்ட்டு ஜட்ஜியானது ஸ்ரீமான் செங்கல்வராய பிள்ளையவர்கள். எம். ஏ. ... 78
 2. மற்றகுறிப்புகள். ... ... ... ... ... ... ... 80

கணேஷ் கம்பெனி சென்னை

# VIDYA VIHARINI

## An Illustrated Tamil Monthly

EDITED BY

### Mr. C. N. KRISHNASWAMY AIYAR, M.A., L.T.

## OPINIONS

**The Madras Mail :—**

"THE VIDYA VIHARINI".—This is a new Illustrated Tamil Monthly issued by Messrs. Ganesh and Co, Madras, and edited by Mr. C. N. Krishnaswamy Iyer, M.A., L.T., of Coimbatore. The place of honour among the literary contributions is given to one on "The Vernaculars and Education through their means" by Rao Bahadur C. Nagoji Rao. Mr. V. Desikachari, M.A., B.L., writes on the Science of Emotions. The historical portion of the journal consists of two articles, one on the Queen's Proclamation of 1858 and the other on Buddha's Relics. This is followed by a description of the College of Agriculture, Coimbatore. Besides notes and news, reviews of books and the progress of the world which forms a special feature of the journal, this number contains four half-tone illustrations printed on Art paper. Judging from the standard which the publishers have set before themselves, the *Vidya Viharini* is likely to prove a good medium for the education of the Tamil public. The subscription per annum inclusive of postage is Rs. 5.

**The Indian Patriot :—**

THE VIDYA VIHARINI is sure to become a good medium for the Education of the Tamil public especially of Women and Children. We hope the new monthly will meet with the encouragement which it so richly deserves.

**The Hindu :—**

This is a very useful and neatly got-up new Illustrated Tamil Monthly issued by Messrs. GANESH & Co., Madras, and edited by Mr. C. N. Krishnaswamy Aiyar, M. A., L. T. THE VIDYA VIHARINI we are sure will become popular.

**The Madras Standard :—**

An illustrated journal of this kind, with half-tone illustrations is a desideratum and is calculated to promote the best interests of the tamil land.

**The Educationist :—**

From a hasty perusal of its contents we are inclined to think that the Magazine bids fair to do well.

## GANESH & CO., MADRAS

# Vidya Viharini

## An Illustrated Tamil Monthly

## ORDER FORM

ANNUAL SUBSCRIPTION

| | |
|---|---|
| India, Burma & Ceylon . Rs. | 5 0 |
| Foreign . . . . . „ | 6 8 |

Dated_____________19

To

**Messrs. GANESH & Co.**

**Publishers, The 'Vidya Viharini,' Madras**

Dear Sirs

Please send me the **'Vidya Viharini'** for Twelve Months / Six Months

beginning with the________number for which I have remitted Rs________ / by V P P

Name_______________________________

Address_____________________________

Postal Town__________________________

Signature_____________________

# VIDYA VIHARINI

## AN ILLUSTRATED TAMIL MONTHLY

Edited by Mr. C. N. KRISHNASWAMY AIYAR, M.A., L.T.

Vol. I] October 1909 [No. 2

## CONTENTS

1. THE PROGRESS OF THE WORLD:— PAGE

The air-ship—Its use to the Indians—The Messages of the King Emperor 1901-2-3. Co-operative News—Bridegroom Price—The efforts of the Madras Government to preserve old records—The attempt in London to make civilians acquainted with the Indian Vernaculars. ... 41

2. LITERARY:—

(1) On the Science of Emotions, by N. V Desikachariar, M.A., B.L. ... 46
(2) Pillai Thamil, by Pandit Venkataramana Aiyar ... 48
(3) Vernacular composition, by Horse-Whip ... 53

3. HISTORICAL:—

(1) Messages of the King Emperor 1901-2-3 ... 55
(2) Bridegroom Price and How to kill it, by Srimati Minakshiammal ... 58
(3) Viswamitra ... 62
(4) Vijayadasami (Dasra Festival) by L. Ananta Aiyar, Editor, *The Hindu Nesan* ... 65

4. SCIENCE AND ART:—

1. Indigenous Medicines, by Nux Vomica ... 68
2. Means of Communication on land, by T. S. Venkataramana Aiyar, B.A., L.T. ... 71

5. LIGHT READING:—

Vamadevan (a novel) by V. A. Gopalakrishna Aiyar ... 75

6. NEWS AND NOTES:—

The Hon. Mr. Justice V. Krishnaswami Aiyar, by V. S Chengalvaraya Pillai, M.A. ... 78
Other Notes ... 80

### LIST OF ILLUSTRATIONS

1. King Emperor Edward VII
2. Sri Raja Rajeswari
3. Viswamitra at the Court of Dasaratha
4. Rajamani before his parents
5. The Hon. Mr. Justice V. Krishnaswami Aiyar

☞ *N. B.*—Annual subscription Rs. 5 Inland & Rs. 6-8 Foreign.

For rates of advertisement apply to Ganesh & Co., Madras, to whom all business correspondence should be addressed and remittances made payable.

All literary contributions, books for review, etc., should be sent to Mr C. N. KRISHNASWAMY AIYAR, M.A., L.T., Editor, The "Vidya Viharini," Coimbatore.

# வித்யா விஹாரிணி

## சில பத்திரிகைகளின் அபிப்பிராயங்கள்

சுதேச மித்திரன்

வித்யா விஹாரிணி:—இப்பெயர் கொண்ட நூதனமான தமிழ்ப் பத்திரிகையின் முதற் சஞ்சிகையொன்று நமது பார்வைக்காக வந்திருக்கிறது. ராவ்பகதூர் C. நாகோஜிராயரவர்கள் 'தேசபாஷைகளும் வித்தியாப்பியாசமும்' என்று தலைக்குறிகொடுத்து ஒரு அரியவியாசம் எழுதியிருக்கிறார்கள். மிஸ்டர் உ. வே வி. தேசிகாசாரியாரவர்கள், எம். ஏ. பி. எல். 'காவியவிமர்சனம்' என்னும ஓர் சிறந்த விஷயத்தை இதில எழுதியிருக்கின்றார். இவைகளேயன்றி 'வரன்முறை' 'பிரபஞ்சவர்த்தமானம்' என்ற தொடக்கத்தினடியாகப பல சிறந்த விஷயங்களும் இதன்கண் காணப்படுகின்றன. வெண்மையான நலல காகிதததில கண்ணைக் கவரும்படியாக இப்பததிரிகை அச்சிடப்பட்டிருக்கிறது. சேர்த்தியான நான்கு சித்திரப் படங்களும இதில் காணப்படுகின்றன. தமிழ்ப் பாஷை விருத்தியடைவதற்கும, தமிழ் மக்கள் நலம் பெறுவதற்கும் இப்பததிரிகை ஓர் சிறந்த சாதனமாக இருக்கிறது என்பதிற் சிறிதும் ஐயமில்லை. தமிழ் அறிந்தார் ஒவ்வொருவர் கையிலும் இந்தப் பத்திரிகை இருக்கவேண்டுவது மிகவும் அவசியம. இதன் வருஷ சந்தா ரூபா ஐந்து. வேண்டுவோர், சென்னை தம்புசெட்டித் தெருவில் இருக்கும் கணேஷ் கம்பெனியாருக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

லோகோபகாரி

இது ஒரு சிறந்த தமிழ்ப்பத்திரிகை யென்பதில்லையமில்லை. நம்மவர் ஒவ்வொருவரும் பார்க்கத் தகுந்ததே. வருஷசந்தா ரூபாய் ஐந்தாக வைக்கப்பட்டிருக்கிறது. இந்த சந்தா இப்பத்திரிகைக்கு கொடுக்கக்கூடியதே. சந்தா அதிகமென அநேகர் நினைப்பார்கள். உழைப்புக்குத் தக்க கூலிவேண்டுமல்லவா? ஆகையால் இப்பத்திரிகை நம் தமிழர்களுடைய ஆதரவை பெறுமென்றே நம்புகிறோம்.

லோகானுகூலன்

இதில், வரன்முறை, பிரபஞ்சவர்த்தமானம், காவியகாண்டம், காவியவிமர்சனம், சாரித்திர காண்டம், விநோத காண்டம், கலைவளைக் காண்டம், புஸ்தகவிமர்சனம், சமாசார குறிப்புகள், அநேக விஷயங்கள் அடங்கியுள்ளன. விஷயங்களும் மிக்க அரியபெரிய விஷயங்களாகவே யிருக்கின்றன. நமமவர்களுக்கு மேற்காட்டியுள்ள விஷயங்கள் அனைத்தும் மிக்க பயன்படுமென்பது நாம் சொல்லாமலே விளங்கும். இம்மாதிரி திருவுருவபபடங்களுடன் தமிழ்ப்பததிரிகை இக்காலத்திற்றான் நடந்து வருகின்றதெனச் சொலலலாம.

நாகைநீலலோசனி

"விளையும் பயிர்முளையிலே தெரியும்" என்றபடி இதன்முதற்சஞ்சிகை யாலேயே உலகத்துக்குப் பெரும்பயன் விளைக்கும் என்பது நன்கு தெரிகிறது.

திராவிடாபிமானி

இதில் பலவரிய விஷயங்கள் அடங்கியுள்ளன. அநேக கல்விமான்களால் எழுதப்பட்டுள்ள அரிய வியாஸங்கள காணப்படுகின்றன.

உயர்ந்த கிளேஸ் காகிதத்தில் கண்ணைக்கவரும் விதமாக இப்பத்திரிகை அச்சிடப்பட்டிருக்கிறது. அழகு வாய்ந்த நான்கு சித்திரப்படங்களும் இதில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. தமிழ் பாஷை விருத்தியடைவதற்கு இப்பத்திரிகை ஓர் சிறந்த சாதனமாகும். தமிழபிமானிகள் யாவரும் இதை ஆதரித்து வருவது அவசியம்.

**கணேஷ் கம்பெனி, தம்புசெட்டி தெருவு, சென்னை.**



ஏழாவது எட்வார்ட் மகாராஜ சக்கரவர்த்தியவர்கள்

# வித்யாவிஹாரிணி

காவியம், சரித்திரம், கலைக்கியானம், தொழின்முறை, வேடிக்கைக்கதைகள்,
முதலியன விளக்கிச் சித்திரசகிதமாய் நடைபெறும்

ஓர்மாதாந்தரத் தமிழ்ப்பத்திரிகை

ஸி. என். கிருஷ்ணஸ்வாமி அய்யர், எம். ஏ., எல். டி., பத்திராதிபர்

| புஸ்தகம் I. Vol I. | சௌம்ய௵ அற்பிசிமாதம் October 1909 | சஞ்சிகை 2 No. 2 |
|---|---|---|

## பிரபஞ்சவர்த்தமானம்

"பழையன கழிதலும், புதியன புகுதலும்,
வழுவல, கால வகையினானே."

**பறக்கும் யந்திரம்**

ஆதிகால முதல் வெகுநாளாக மனிதரிலனேகருக்கு உயரப்பறக்க வேண்டுமென்னுமாசை யிருந்தே யிருக்கிறது. 'ஓ, கழுகு கருடன் மாதிரி ஆகாயத்தி லுயரப்பறந்து, வாயு வேகமாய்ப் போனாலெத்தனை யின்பமா யிருக்கவேண்டு' மென்று நம்மிலனேகர் தூங்காமற்றூங்கிக் கனவு கண்டுகொண்டு மனங்குறைந்திருக்கிறார்கள். ராமாயணத்தில் புஷ்பகமும், பாரதத்தில் துரியோதனனேறிவந்த ரூத்திர அன்னப் பறவையும், சிந்தாமணியில் ராணி விசையையூர்ந்த மயிலும், சித்தர் வாயிற் போட்டுக்கொண்டு செல்லுங் கமனகுளிகையு மெல்லாம் இம்மனோரதத்தையே குறிப்பிடுவதாம். இவைகளிருந்தனவா, இல்லையா வென்பதை நாம் வியவகரிப்பது அனாவசியம். நமக்கிப்போது தெரிந்தது, புத்திமான்கள் எத்தனையோ பிரயத்தனஞ்செய்து கடைசியாக நமது காலத்தில், நவீன கலைக்கியானங்களில் வல்ல 'சாஸ்திரிகளாகிய' யந்திர ஜாலிகர்கள், 'எயிரோபிளேன்' என்றும், 'எயர்ஷிப்' (என்றால், 'ஆகாயக்கப்பல்') என்றும் பெயரிட்டுச் சிலயந்திரங்களை யுண்டாக்கி விட்டார்களென்பதே. இவை சில வருஷங்களாகக் கொஞ்சங் கொஞ்சமாகச் சிறந்து, சென்ற ஒரு வருஷத்திற்குள் மணிக்கு நாற்பதுமுதல் எண்பது மைல் ஓட்டத்தில், சுமார் 300-அடி உயரத்திலோ, அதிகமாகவோ ஆகாயத்தில் பறப்பது சாத்தியமாகிவிட்டது. இரண்டொரு மாசத்திற்குமுன், பிரான்சுக் கரையிலிருந்து கடலைக்கடந்து முப்பந்தாறுமைல் தூரத்தை அரைமணி காலத்தில் ஒருவர்பறந்துவந்து சுகமாய்ச்சேர்ந்து, இங்கிலாந்தில் தமது நண்பருடன் போஜனம் செய்தார்.

இனி இது சாத்தியமென்றாகி விட்டபடியா லிச்சந்தர்ப்பத்தில் பழைய காலத்திற்கும், இக்காலத்திற்கும் போக்கு வரவு விஷயத்திலிருக்குந் தாரதம்மியங்களை யறிவது வேடிக்கையாக

வும், உபயோககரமாகவு மிருக்குமென்று நம்பி, நிலம், நீர், ஆகாயமென்னு மூவகைப்பொருள்களில் முறையே போக்குவரவிற்குரிய சாதனங்களைக் காலக்கிரமத்தை யனுசரித்தொரு நண்பரெழுதிவருவார். அந்தச் சித்திரங்களைக் கொண்டு விளக்குவோம்.

நம்மிலனேகரின்றும் புகைவண்டியைக் கண்ணிற்காணுமலும ரோவிப்புகைக்கப்பலைப்பற்றிக்காதிற்கேளாமலுமிருக்கலாம். ஆனல் சமீப காலத்தில் புகைக்கப்பல் தலைக்குமேற் பறந்து போவதைப் பார்க்கச் சந்தர்ப்பமேற்படுமாதலாலவைகளைப்பற்றி யொன்றுந் தெரியாமலிருப்பது நல்லதென்றெண்ணி நினைத்தே யிவ்விஷயத்தில முயற்சியெனவறிதல் வேண்டும். இந்தாகசியந் தெரிந்த வித்துவானொருவர் இனிப் பத்துவருஷத்திற்குள்ளாக ஆகாயக் கப்பல்கள் யாத்திரைக்குபயோகப்படு மென்றும, தபால் சாமான்னியமாய்ப் போகுமென்றுஞ் சொல்லுகிறா.

இந்த யந்திரம் எவ்வளவு சீக்கிரத்திலிந்த நாட்டுக்கு வந்தாலும் நல்லது. ஏனெனில் ஐரோப்பியர்கள் அதை யாத்திரை விஷயத்திற்கே அனுகூலமாக்கிக் கொள்ளவேண்டுமென்று ஆக்கிரகப்படுகிறார்கள். நாமோ அதனால் வேறு உபகாரங்களை யடையவேண்டுகிறோம். ஐரோப்பியருக்கு "நிமிஷங்களே பவுன்கள்" ஆகின்றன. என்றால், முற்காலத்தில் குதிரைகளைக்கொண்டு எட்டு மைல் சராசரி போய்க் கொண்டிருந்தவர்கள், இக்காலம் மணிக்கு நூறுமைல் போகும் ரயில் வண்டிகளைக்கூட வேகம் போதாதென்கிறார்கள். மோட்டார் வண்டிகள் முதலியஸாதனங்கள் தினம் பிரதி வேகம் அதிகரித்து வருகின்றன. கப்பல்களு மப்படியே. ஆதலால் ஐரோப்பியர்களுக்கு வேகத்தை இன்னுமெப்படி அதிகரிக்கச் செய்யலாமென்கிற நோக்கமே முக்கியமாம்.

இதனால் இந்தியர்களுக்கு உபகாரம்

நமக்கோ அது லக்ஷியமேயில்லை. ரயில் வண்டி ஒரு ஸ்டேஷனுக்கு 2-மணிக்கு வருவதானல், 12-மணிமுதல் ஸ்டேஷனில் வெய்யிலநன்றாக அடிக்குமிடத்தில் வந்து நின்று வண்டிவருவதை எதிர்பார்த்திருக்கிறோம். அது 10-மைல் வீதம் போனாலும் சரி, 20-மைல் போனாலும் சரி, அதைப்பற்றிக் கவனமேயில்லை. இப்புறம் ஏதோ உத்தியோகஸ்தர் சிலரும், வக்கீல்கள் சிலரும், வியாபாரிகளில் சிலரும் கொஞ்சம் கவனிக்கிறார்கள். என்றாலும் மொத்தத்தில் நாம் சொல்லுவது நிசமாதலால், 'வானக்கப்பல்' இங்கு வருவதில், அது வாயு வேகமாகிப்போய் நம்மை யோரிடமிருந்து மற்றோரிடம் சேர்த்து விடுகிறதென்று அதற்காக நம்மில் பெரும்பாலார் பிரமிக்கப்போகிறதில்லை.

ஆனல் நமக்குத் தெரிந்தமட்டில் இருவகை உத்தியோகஸ்தருக்கு அது வெகு உபகாரியாவது நிச்சயம். முதலாவது, தபால் கொண்டோடும் ஜனங்கள், ரயில் முதலிய சௌகரியமில்லாத அனேக இடங்களில் இப்போது தலைமேல் 500 ரூ. பாரத்தையோ அல்லது சற்றேறக்குறையவோ வைத்துக்கொண்டு தொள் கோட்டமாக ஓடுபவர்களை நாம் பார்த்திருக்கிறோமல்லவா? அவர்கள் முழங்கால்சதைகளைக் கவனித்திருக்கிறீர்களா? கத்திவெட்டுகூடக்காயப்படுத்துவது சுலபமல்ல. ஆனல அந்தச் சதை அப்படியாகவேண்டுமென்பது ஈசுவர சங்கற்பமல்ல. ஆதலாலதைப் பரிகரிக்கவேண்டும். வானக்கப்பல் சாமான்னியமாக உபயோகப்பட்டால் இவர் கஷ்டம் விடியும். ஆனால் இவருக்குக் கதியென்னவென்றால், எத்தனையோ மார்க்கமிருக்கிறது.

இரண்டாவது, பாரஸ்டுரேஞ்சர் முதலிய உத்தியோகஸதர்கள். இவர்கள் இப்போது அனேகமாய் விஷச்சுரததால் உபத்திரவப்படாமலிருப்பது அபூர்வம். பாரஸ்டுகளில் உட்புகுந்து பரீக்ஷிப்பதில், வியாதிமட்டுமல்லாமல்

துஷ்ட மிருகங்களாலும் உபத்திரவப்படுகிறார்கள். இம்மாதிரிவாகனம் கிடைத்தால், பாரஸ்டுகளிலுள்ள விருக்ஷங்கள், கொடிகள், செடிகள், முதலியனவற்றை இதுவரைபோல் அரைகுறையாயில்லாமல், செம்மையாய்ப் பரீக்ஷித்து வரலாம். பாரஸ்டுகளிலுள்ள நீரைக்குடித்தோ, கொசு முதலிய விஷஜந்துக்களால் கடிபட்டோ அவஸ்தைப்படவேண்டியதில்லை. சர்க்காருக்கும் இப்போது தக்க மனிதர்கப்படாமல்படும் உபத்திரவம நீங்கும்.

மகா ராஜச் சக்கரவர்த்தியவர்களுடைய மகா சாசனம்

சென்ற நெம்பரில 1858-ம்ளு தத்திய மகா சாஸனத்தைப்பற்றிச் சில ஷாரத்துசளும், அந்த மகா ஸாசன மொழிபெயர்ப்பும், வெளிப்படுத்தினோம். அதற்கடுத்து வருவது நமது மகாராஜச் சக்கரவர்த்தியவர்களுடைய திருவாக்காம். அவர்கள் பட்டத்திற்கு வந்ததும் ஒருமுறையும், பிறகு சில மாசங்கள் கழிந்தபின் டில்லியில் பெரிய தர்பார் ஒன்றுகூட்டி அச்சமயத்தில் ஒருமுறையுமாக,இரண்டுதடவைகளில் தன்னுடைய ராச்சிய தருமத்தை விளக்கியிருக்கிறார். படிப்பவர்களுக்கு, இதற்கும், முந்தி மொழிபெயர்த்த மகாசாஸனத்திற்கும் வித்தியாசம் சொற்சுவை முதலிய லக்ஷணங்களில வெகுவாயிருப்பதாகக் காணும். ஆனால் தாற்பரியத்தைக் கவனிப்பவருக்குஅப்படிக்காணுதென்றுநம்புகிறோம். சொல்ல வேண்டியவைகளை யெல்லாம் வெகு நேர்த்தியாக மகாராணியவர்களே சொல்லியிருக்கிறபடியால, இனியதை மறுபடியும் ஒப்புவிப்பதில் விசேஷப் பிரயோஜனமில்லை யென்பது பற்றிச் சுருக்கமாக ஒரேவாக்கியத்தில், "என் அருமைத்தாயாரான மகாராணியவாகள் சொல்லியதையும், நடந்ததையும், எனக்கு வேதமாக வைத்துக்கொண்டிருக்கிறேன்," என்று சொல்லி முடித்திருக்கிறார். ஆராய்ந்தறிதல் வேண்டும்.

கோ ஆபரேடிவ் துண்டு வர்த்தமானம்

இந்த விஷயமாய் ரிஜிஸ்டிரார், ஸ்ரீமான் ராம சந்திரராயரவர்கள் சிரமப்பட்டு இயற்றிய முதல்நெம்பர் வெளியாகி யிருப்பதைக்கண்டு சந்தோஷிக்கிறோம். இந்த முறையை விளக்கி அப்போதப்போது 'வித்யாவிஹாரிணியில்' எழுதி வருவதாக உத்தேசமிருப்பதால், விஸ்தரிக்க இது சந்தர்ப்பமல்லவென்று இரண்டொரு சங்கதிமட்டுங் குறிப்பிட்டு விட்டுவிடுகிறோம். சென்ற நாலு வருஷமாக இந்தியா கவர்ன்மெண்டாருடைய பிரேரேபணையின் பேரில் இத்தேசமெங்கும் இந்த முறையை யனுசரித்துக் காரியம் நடந்து வருவதில் நம்மவர்கள் அதன் உபயோகத்தையறிந்து குதூகலித்து அங்கங்கே ரிஜிஸ்டிராரவர்களுடைய சொற்படி நடந்து சுகப்பட்டுத்தான் வருகிறார்கள். என்றாலும், இதுவரை நடந்தது வெகு சொற்பமேயாதலாலும், இப்போதிருக்கும் சங்கங்களில் ஒன்றில் நடப்பது வேற்றூர்களிலிருப்பவைகளுக்குத் தாக்கல் இல்லாமலிருப்பதாலும், இந்தத் தோஷங்கள் பரிகாரமாக வேண்டிச்சங்கதி விளங்குவதற்காக இப்பிரயத்தினம் நடந்துவருகிறது. இங்கிலீஷில் மட்டும் ஆரம்பமாவதில் பிரயோஜனம் விசேஷமாயில்லையென்று, இரண்டு தேசியபாஷைகளிலும் இத்துண்டு சமாசாரங்கள் வெளியாகின்றன. அவைகளில் சாமான்னியருக்கு உபயோகபபடுபவைகளைக் கூடிய சீக்கிரத்தில் நாம் வேறு சில வர்க்கங்களுடன் 'வித்யாவிஹாரிணி' அபிமானிகளுககாகச் சேகரித்துப் பிரசுரஞ் செய்வதாயிருக்கிறோம்.

வரசுல்கம்

'வர சுல்கம்' என்பது 'கன்னியா சுல்கம்' என்னும் பெண்ணை விற்கும் துர்வழக்கத்தின் திரியாக இக்காலத்தில் பெண்ணைப பெற்றோருக்கெல்லாம் மிருத்தியுவாகி வாட்டுவது. இதற்குப் பிள்ளைக்கிரயம் என்று தாராளமாகச் சொல்லலாம். பெண்ணைப்பெற்றவாகளுக்கு எக்காலத்திலும்,எத்

தேசத்திலும் உபத்திரவங்கள் பலவிதமாக இருந்து வந்தேயிருக்கின்றன. பெண்ணை விவாகஞ் செய்து கொடுப்பதென்றால், தம்மைவிட உயர்ந்த குலமாகவாவது, தமக்குச் சமதையான குலமாகவாவது பார்த்து வரன் தேடவேண்டும். இது எச்சாதியாரிலும் காணக்கூடிய லக்ஷணம். ராஜஸ்தானத்தில் இப்படித்தேடிக்கொடுப்பதற்குக் குடும்பங்கள் யதேஷ்டமாயில்லாததுகொண்டும், உயர்குலத்தாரென்று சொல்லிக்கொள்ளும் சிலர் வரசுல்கம் அதிகமாகவேண்டுவதாலும், பெண்குழந்தைகளைப் பிறந்தவுடன் கழுத்தைப் பிசைந்து அநேகர் கொன்றுவிடுவதாக வதந்தி.

இப்படியிருப்பதில் இப்போது பலவருஷங்களாய் எமது பிராந்தத்திலும இந்தத் துர்வழக்கமதிகரித்து வருவதை நம்மில் பலர் அனுபவித்துத் துக்கப்பட்டு வருவதைக் கண்டு விவேகிகள் பரிகாரம் தேடி வருகிறார்கள். ஆகையால் இச்சஞ்சிகையில், ஸ்ரீமதி-மீனாக்ஷியம்மாள் இது விஷயமாய் எழுதியிருப்பதை வெகு சந்தோஷத்துடன் பதிப்பிக்கிறோம். வயது சிறிதானாலும், அந்த அம்மாள் எழுதுவது வெகு அழகாயிருப்பதில், இப்படியே ஆங்காங்குள்ள ஸ்ரீமதிகள் எழுதியும், பேசியும், மனனஞ் செய்தும் வருவாராகில், நம்மிலுள்ள அனேக துராசாரங்கள் காலக்கிரமத்தில் அகன்றுபோம் என்பதில் தடையில்லை. ஐந்தாறு வருஷங்களுக்குமுன், இவ்விஷயமாய் நல்ல வியாசமெழுதுபவருக்கு இனாம் கொடுப்பதாயோர் பெரியவர் விளம்பரம் பிரசுரப்படுத்தினார். ஒரே வாக்கியத்தில் அவருக்கு மறுமொழியெழுதலாமென்று நமக்குக்காணுகிறது. அதாவது, உங்கள் பெண்களுக்கு நல்ல கல்வி பயிற்றுங்கள், என்பதேயாம். அதுமட்டும நேராக நடந்தால், எல்லா மங்களங்களும் வழியோடுவருகின்றனவென்பதில் தடையில்லை.

**ஓர் ஆக்ஷேபம்.**

இப்படி நமது ஜனங்கள் தமக்குள்ளிருக்கும் பைத்தியகாரப் பேதங்களைத் தொலைக்கப் பிரயத்தனப்படுகையில் இந்தத் தருமகாரியத்திற்கும் விரோதிகளேற்பட்டிருக்கிறார்கள். அவர்களிருவகையார்., பழைய ஸ்மிருதியின்பேரிலும் சிஷ்டாசாரத்தின் பேரிலும் பழிபோட்டுத் தங்களுடைய பிடிவாதத்திற்கும, முட்டாள்தனத்திற்கும் அவைகளை யாளாக்குபவரை நாம என்னவென்று வர்ணிப்பது? இவர்கள்நிற்க, நாகரீகமுதிர்ந்து, மேனாட்டுக் கல்வியிலும் லௌகிகப் பிரவிருத்திகளிலுஞ் சிறந்துநிற்கும் விவேகிகளும் தாங்கள்கற்ற கல்வியைப்பாழாக்கி வேண்டாதவாதத்தில் யுக்தியையும் புத்தியையுஞ் செலுத்தி வருவதைப் பார்க்குமிடத்துத்தான் நமக்கு மனம் பலவிதமாகவும நொந்து பிரமிக்கும்படியாகிறது. இவர் கூறும் நியாயங்களில் சாஸ்திரீயம்போலக் காணுபவைகள் சில. அவற்றில் முக்கியமாயுள்ளது, வர்க்கநியாயமென்பது. அதாவது எருது, மாடு, எருமை, ஆடு முதலிய பசுவர்க்கங்களை வளர்ப்பவர், அவைகளில் அங்கலக்ஷணங்களோ, வேறு லக்ஷணங்களோ அதிகரிக்க வேண்டினால், அதற்காகச் சதை சரியாகச் சேர்ப்பதும், அவ்வாறே யொவ்வொரு தலைமுறையிலும் அவலக்ஷணங்கள் குறைந்து சுபலக்ஷணங்கள் வர்த்திக்குமாறு வெகு ஜாக்கிரதையாய்ப் பார்த்துவருவதும் வழக்கம். ஆதலால் மனித ஜாதிகளிலும் இவ்வாறு ஜாக்கிரதையாயிருப்பது நலந்தானென்பது.

இது சரியான நியாயந்தானென்று இச்சந்தர்ப்பத்தில் விசாரிக்கப் புகின் பெருகும். ஆதலால் சொல்லக்கூடியதெல்லாம் இதுதான். நியாயம் எப்படியிருந்தாலும், ஒரு நல்ல நியாயத்தை முன்னிட்டு அனேக அக்கிரமங்களேறபடுவது நமது ஆசாரகாண்டத்தில் வெகு சாதாரணமென்பதேயாம். அவைகளில் இது பெரிய அக்கிரமமாகியிருப்பது பிரத்தியக்ஷம். கைப்புண்ணுக்குக் கண்ணாடி யனாவசியம்.

**மதிராசு ஏட்டுப் பிரதிப் புஸ்தக சாலை**

நமது கவர்ன்மெண்டார் இந்நாட்டில் பிராசீனமாயுள்ள கிரந்தங்கள் வீணாகிக் கிடப்பதையும், செதில் முதலிய பூச்சிகளுக் கிரையாவதையுங் கண்டு, அவைகள் உருப்படியாயிருப்பதற்காக சென்னை நுங்கம் பாக்கத்தில் ஒருசாலை யேற்படுத்தி ராஜதானியில் ஆங்காங்குள்ள ஏட்டுப் புஸ்தகங்களைக் கிரயத்திற்கு வாங்கியோ, நகல் செய்தோ, அல்லது தானமாக வாங்கியோ, சேகரித்து வைத்து வேண்டியவர்கள் பார்த்துபயோகச் சௌகரியஞ் செய்திருக்கிறார்கள். இது மெத்தவும் சிலாகிக்கத்தக்கதே. ஆனாலும் இதுவரை நடந்து வந்ததுபோல நடப்பதில் விசேஷப்பிரயோஜனமாக மாட்டாதென்பது நமது அபிப்பிராயம். வேறு அலுவலிலிருக்கும் ஒரு பெரிய உத்தியோகஸ்தருக்கு இதையும் பார்த்துக்கொள்ளும்படிக் கொஞ்சம் சமபளமேற்படுத்திவிட்டு விடுவதில், அவருக்கு ஒழிவு கிடைக்கும்போதுதான் அவர் இதுவிஷயத்தில் உழைக்கமுடியும். இதனால் காரியம் சாவதானமாக நடப்பதுடன், நடந்ததைப பரிசீலனை செய்து இங்கிலீஷ் தெரியாவிட்டாலும், வித்தை, புத்தி முதலியவற்றிற் சிறந்திருக்கும நம்மவர்களுக்குத்தெரியும்படி யேதாகிலும் பிரசங்க முறைகளோ, சஞ்சிகை முறைகளோ ஏற்படுத்த முடியாமலுமிருக்கிறது. ஆதலாலினியாகிலும் இம்மாதிரியிராமல் காரியம் சீராக நடக்கவேண்டிப் புஸ்தகசாலைக்கதிபரான ஸ்ரீமான்-பண்டிதர் எம. ரங்காசாரியாரவர்கள் தமக்கு உதவியாக வொரு உத்தியோகஸ்தர் வேண்டுமென்று சர்க்காரைக கேட்டுக்கொண்டிருப்பதாகக் கேட்டுச் சந்தோஷப்படுகிறோம். அவருக்கிசைந்த உத்தியோகஸ்தர் ஒருவரேற்பட்டாலினி யிந்தத் தோஷங்கள் சீக்கிரங் குறைந்துவிடுமென்பதிற் சந்தேகமேயில்லை.

**லந்தனில் பிராசீன பாஷைக்கல்வி விஷயமாகப் பிரயத்தனம்**

சுமார் 30-வருஷங்களுக்கு மேலாகவே இந்தியாவில் உத்தியோகஞ் செய்வதற்கென்று இங்கிலாந்தில் சிவில் உத்தியோகப் பரீக்ஷைக்காகப் படித்துத் தேறிக் கலெக்டர் முதலிய அலுவல்களில் அமரும்ஐரோப்பியருக்கு ஒரு பெருங்குறைவு இருப்பதாக ஆங்கிலேயரும், நம்மவர்களில் பழைய உத்தியோகஸ்தரும சொல்லிவருவதைக் கேட்டிருக்கிறோம். அதாவது, இவர்கள் முன்னிருந்தமாதிரித் தேசிய பாஷைகளில், இந்நாட்டுக் குடித்தனக் காரருடன் பேசப் பழகுவதில்லை யென்பதேயாம். இதனாலுண்டாகும் உபத்திரவங்கள் பல. எதாகிலும் காரியமாக வேண்டுமானால் துபாசிகள் வேண்டியிருக்கிறது. இவர்கள் எப்போதும் நேராக நடப்பதில்லை, திருவனந்தபுரம் ஊட்டுப் பிறையில் போடும் சாப்பாடு வெகுவாய்ச் சீர்கெட்டேவந்திருக்கிறது. ஏதோ ஒரு காலததில் ஒரு திவான் பந்திவிசாரணைக்காகப் போனதில் சாப்பிடும் பிராம்மணரிலொருவர், "இம்மாதிரிச் சாப்பாடு போடுவதைவிட இதைத்தொலைத்துவிடுவது நலம்" என்று உரத்துக்கூவ, அது திவானுக்குத் தெரியாமல் பக்கத்திலிருந்தவரை அவரென்ன சொல்லுகிறார் என்று கேட்க, அதற்கு அவர் கூசாமல், "இப்படியே இந்தத் தருமம் என்னும் நடந்து வரவேண்டும், என்று வாழ்த்துகிறார்," என்றாராம்.

இதுபோலவே இந்நாட்டில் பல விபரீதங்கள் நடக்கின்றன. சர்க்கார், குடிகளுடைய நலத்தையெண்ணி யெத்தனையோ காரியங்களை யாரம்பிக்கிறார்கள். அவைகளெல்லாம், நடவடிக்கையில் தவறிப்போகின்றன சில சமயங்களில் உத்தியோகஸ்தருக்கு ஜனங்களுடைய நடை, உடை, பாவனையும், பேச்சும் தெரியாமல், விபரீத உத்தரவுகளும் அதனால் மனச்

கசப்பும் உண்டாகின்றன. இத்தோஷங்களைப் பரிகரிக்கவேண்டி நமது கவர்ன்மெண்டார் தேசிய பாஷைகளில் பரீக்ஷைகள் இரண்டு மூன்று தரமில் வைத்து தேறும் உத்தியோகஸ்தருக்கு ஆயிரக்கணக்காய் இனாம் கொடுத்து வருகிறார்கள். என்றாலும் ஏதோ காரணங்களால் அது திருப்தியாயில்லை.

ஆனதுகொண்டு சில மாசங்களுக்குமுன், மதராசு கண்காக்ஷி சபை சூப்பரின்டாண்டு ஸ்ரீமான்-தர்ஸ்டன் துரையவர்கள், இந்தியாவிற்குவரும் உத்தியோகஸ்தருக்கு, இந்நாட்டு ஜனங்களுடைய, நடை, உடை, பாவனை, ஆசாரம், மதம், முதலிய சங்கதிகளைத் தெரிவித்துப் பயிற்சி செய்விக்க வேண்டுமென்றார். தற்காலம் லண்டனில் இத்தேசத்தியவும், ஆசியாவிலுள்ள இதரதேசங்களுடையவும், பாஷைகளைக்கற்பிக்க உத்தேசங்கொண்டு ஒரு வித்தியாலய மேற்பட்டு வருகிறது. இதற்குத் திரவிய சகாயம் வேண்டுமென்று காரியஸ்தர்கள் நமது செக்ரெடரியவர்களைக் கேட்டதில், இவ்விஷயமாய் முன்னமே சகாயம் செய்திருப்பதால் அதைக்கொண்டே நடத்துவதுதான் நியாயமென்றும், ஆனால் அவர்களெடுத்த காரியத்தில தனசகுப் பக்நயதிகமென்றும் பதில் சொல்லிமுடித்தார். தேசியபாஷைகளை யந்தந்தத்தேசங்களிலேயே ஜனங்கள் மத்தியிலிருந்து கொண்டு கற்பதுதான் இவ்விஷயத்திற்கெடுத்ததென்று நமக்கும் காணுகிறது. பழைய நாளில், மன்ரோ, தாமஸ், முதலியோர் எப்படிக்கற்றார்களோ அப்படிக் கற்பதற்கு உபாயமும் ..ருல் தேடவேண்டும். அதனாலேயேதான் உத்தமபலன் கிடைக்கும்.

# காவிய காண்டம்

## 1. ரஸப்பிரகரணம்

உ. வே. நடாதூர்-வி. தேசிகாசாரியாரவர்கள்
எம்.ஏ., பி.எல்.

(22-வது பக்கத்திலிருந்து தொடர்ச்சி)

கிரந்தங்களில் ஒரே ரஸம்தானிருக்கவேண்டுமென்பதில்லை. அது சாத்தியமுமன்று. ஏதேனும் ஒன்று பிரபலித்திருப்பதும், மற்றுள்ளவைகளிற் சில அங்கங்களாகி யிருப்பதும் சகஜமாம். தவிர ஒவ்வொரு ரஸத்தையும் விளக்கவேண்டி வருகையில் அதற்குமட்டுமே அங்கங்களாகிச் சில சில்லரை லக்ஷணங்கள் காணுதல்வேண்டும். காவியம், வர்ணனை மூலமாகச் சித்தியடைய வேண்டியதாதலால், அனுபவத்தை யனுசரித்து மனதைப் படிப்படியாக வொரு ரஸத்திலழுத்துவது நியாயம் ஆதலால், காசிக்குப்போனதும் காவடிகொண்டு வந்ததுமாகச் சொல்லுவதில் ரஸம் பிரபலிப்பது அசாத்தியம்.

உதாரணமாக, உத்தரராம சரிதத்திற் பார்ப்போம். அதில் சோக ரஸம் முக்கியம் ஆனாலும், முதலங்கத்தில், எடுத்தவுடன் ஸ்ரீராமன் லக்ஷ்மணனைக் கூவிச் சீதையைக் காட்டுக்குக் கொண்டுபோய்விடு, என்பதில்லை. முதலில், சீதை கடோரகர்ப்பிணியாயிருப்பதால், லாலனை செய்துவைத்துக் கொண்டிருக்கும்படி யாகத்திற்குப் போயிருக்கும் பெரியோர் சொல்லியனுப்புவதும், அப்படியே ஸ்ரீராமன் தன் சரிதங்களைச் சித்திரங்களாக வெழுதித் தேவிக்குக் காட்டி விநோதமாகக் காலங்கழிப்பதும், இது முதலிய சில்லரைகளை முன்னிட்டுப்பிறகு, வண்ணான் திட்டிய சங்கதியைக் கொண்டுவந்து, மறுபடி வனம்போகிற சங்கதி பிரபலிப்பது, யுக்திக்கும் அனுபவத்திற்கு மொத்திருப்பது. அப்படியே தமிழில் சிலப்பதிகாரத்திலும், கோவலன் மதுரை சேர்ந்து, பிறகு கள்வனென வெட்டுண்டு போகவேண்டிய சந்தர்ப்பத்தில்,

சிலம்பை விற்றுவருகிறேனென்று மனைவிக்கு உபசாரஞ்சொல்லிப் போகுங்காலத்தில், தான் பழைபகாளிலவள் விஷயத்தி லபசாரப்பட்டதை யெல்லாங்கிழே காணுமாறு வர்ணித்துப்போவது, காவியலக்ஷணந் தெரிந்தவர்களெல்லோரும் ரஸா வகிக்க வேண்டிய ரத்னமாம். அதாவது :—

"குடிமுதற் சுற்றமுங் குற்றிளை யோரு
மடியோர் பாங்கு மாயமு நீங்கி,
நாணமு மடனு நல்லோ ரேத்தும்,
பேணிய கற்பும் பெருந்துணை யாக,
வென்னொடு போந்தீங் கென்றுயர் களைந்த
பொன்னே, கொடியே, புனைபூங் கோதாய்,
நாணின் பாவாய், நீணில விளக்கே,
கற்பின் கொழுந்தே, பொற்பின் செல்வி,
சிறடிச் சிலம்பினொன் றுகொண்டி யான்போய்,
மாறி வருவன் மயங்கா தொழிகென."

மேல்வரும் பிரமாணத்தை யறிந்த வொவ்வொருவரு மித்தருணத்தில் இம்மொழிகளைக் கேட்டு விம்மி யழாமலிருந்தா லவர் ஹிருதயங் கல்லேயாம்.

ஆதலால் ரஸங்கள் ஒவ்வொன்றிற்கும் தனித்துப் பெயரிட்டிருந்தாலு மவையொன்றுக்கொன்று சகாயஞ் செய்வதும், ஒரு ரஸத்திற்கே பல சில்லரை லக்ஷணங்கள் வேண்டியிருப்பதும், இப்படி யெல்லா முறைகளும் உத்தமகவிகள் கையில் அபாரமாகச் சோபித்திருப்பதை நாம செம்மையாயறியவேண்டும். தவிர ரஸமென்பது, சப்த ஸ்பரிச முதலியவற்றிற்கெல்லாம் பொதுவாகி, மேலேநாம்குறித்தபடி காவியத்திற்கு மட்டுமேயல்லாமல், நாடகம், சங்கீதம், சித்திர முதலியவற்றிற்கும் லக்ஷணமாவதால், தின்பண்டங்களி லொருதாரண மிவ்விஷயத்தை இன்னும் நன்றாய் விளக்கும். காரமிட்டாயென்று ஒருபக்ஷியத்திற்குப் பெயரிடுகிறோம். ஆனாலதை யுண்டாக்கும் விதத்தைக் கவனிக்கையில், பருப்பு வகைகளிலுள்ள ருசியும், உப்பும், மிளகாய்க் காரமும், எண்ணெய் அல்லது நெய்ச் சுவையுஞ் சேர்ந்தே யப்பண்டமாவது பிரத்தியக்ஷம். காவியத்திலு மப்படியே. ஏனெனில் பிரபஞ்ச சரிதம் சத்துவரஜஸ்தமோ குணங்களாகிய மூன்றுஞ் சேர்ந்தவிறே வுண்டாவது. ஆதலா லொவ்வொரு சரிதமும் பல ரஸங்களை லக்ஷணமாக வுடையனவென்று காளிதாஸ சுவாமி சொல்லுகிறார். இப்படி முக்குணங்கள் பலவாறுகச் சேர்ந்துண்டாகிற பிரபஞ்ச வியவகாரத்தைக் கண்ணாடிபோல் விளக்குவது காவியத்திலுடைய லக்ஷியம். ஆகவே யதை ரஸ பூர்வகமாயறிந்துதான் ஆனந்த மடைய வேண்டும்.

இதிப்படியிருக்க இந்த மகா ரகசியத்தை மறந்து, யமக முதலிய கழைக்கூத்துகளைச் சிலாகித்தும், அதையே நெடுங்காலம்பயின்றும், தேகத்தையுங் கிலேசப்படுத்திக்கொண்டு, காலத்தையும் வீணுக்குவதில் ஒரு பலனுமில்லையென்பது புத்திமான்களுக்கு நன்றாக விளங்கும். காவியத்திற்கு இன்னது லக்ஷியமென்பதை வித்துவான் மம்மட (மன்மத) சுவாமியிவ்வாறு கூறுகிறார் :—

"காவிய மென்பது, காளிதாஸாதிகள்போலக்கீர்த்தியை வேண்டியும், வேறுசிலர் போலப் பணம் வேண்டியும், பிரபஞ்ச வியவகாரங்களை விளக்கவேண்டியும், அமங்களங்களைப் பரிகரிக்கவேண்டியும், கேட்குங்கால் பிறருக்கு இன்பமுண்டாக்கவேண்டியும், நாயகிபாவமாக மனத்தைக் கவர்ந்து (மருந்துமாகிப் பாலுமாகி,) ஹிதத்தைச் செய்யவேண்டியுமுண்டாவதாம். ஆதலால் அது வேதத்தில் ஆக்ஞாபனஞ்செய்வது போல, அதிகார தோரணியுடன், "சத்தியத்தைச் சொல், தருமத்தை யனுஷ்டி," யென்று கேட்போர் மறுமொழிகூற வசமில்லாமல் நடுங்கும்படி, சாஸன ரூபமாகவாவது, முரட்டு வழியிலாகிலும் நம்மைப் பலவந்தப்படுத்தி நன்மை செய்யும் இஷ்டருடைய கரோரூப மாகவாவது காணுமல், நாயகியானவள்,

நடக்கும் மனம்போகும் வழியிலேயே நம்மைப் போகவிட்டு, நம்மையறியாமல் நேர்வழிகொண்டு சேர்ப்பதுபோல, ஆனந்தமும் பிரயோஜனமும் சேர்ந்தமைந்திருப்பதாம். ஆதலாலிதற்கு, உலகத்திறகேற்பட்ட கால தேசவர்த்தமானங்கள், நிமித்தம், கிரியை, பலன், முதலிய நியமங்க ளிலக்ஷ்வேயில்லை. கேட்போருக்கு இனிமையையே லக்ஷியமாகக் கொண்டு லோகோத்தரமாகப்போவது இதன் போக்காம். கேட்போரும், படிப்போரும், ராமாதிகள் போல நடக்க வேண்டுமென்றும், ராவணாதிகள்போல நடப்பது கூடாதென்றும் ஆசனையாக மொத்தத்தில் தாற்பரியம்.

இங்கிலீஷில் ஷேக்ஸ்பியர், ஷெல்லி, முதலிய உத்தமகவிகளு மிப்படியேதான சொல்லியிருக்கிறார்கள். ஆதலால் உத்தமகவி லக்ஷண மெக்காலத்திற்கு மெந்நாட்டிற்கு மொருவகைப் பட்டதே யென்னலாம். அதுகொண்டு இச் சாஸ்திரத்திற்கு மகிமை அபாரமாயிருப்பதை யிஷ்டா கிரகிக்கவேண்டும்.

---

### அன்றுயோசனை ஒன்றேபோதும்

காலைமுதல் மாலைவரையில் நமக்கு நமது ஜாதி தொழில் குலாசாரங்களை யொட்டி ஏற்பட்டிருக்கும் காரியங்களை அவ்வவைகளுக்குக் குறித்த காலத்தில் முடித்து சந்தோஷமாய் இருப்போமேயானல் அதற்கு மிஞ்சின சுகம் வேறில்லை; தினந்தோறும் நாம் செய்யவேண்டிய காரியம் வெகு அதிகமாகவிருக்கும். மனவருத்தமில்லாமல் சந்தோஷமாகத்தான் அதைச் செய்யவேண்டும். நமது தொழிலை நாம் செய்வதில் நமக்கு எவ்வளவோ துக்கமும் சங்கடமும் ஒவ்வொருவேளை சம்பவிக்கும். அவைகளை நாம் சந்தோஷமாக வகித்துக்கொள்ளவேண்டும். மனப்பூர்வமாய நாம் ஒப்புக்கொள்ளும் ஒவ்வொரு காரியத்தையும் பாபமான எண்ணங்களைத் தவிர்த்து கடவுளுக்குப் பயந்து நாம் அன்றாடம் செய்யவேண்டிய நமது கருமங்களையும் செய்துவருவோமேயானல் ஒருநாளும் நாம் அவமானப்பட்டு வருந்தமாட்டோம். எப்பொழுதும் ஈசுவரன் ஒருவனே நம்மை எல்லாவித சங்கடங்களிலிருந்தும் ரக்ஷிப்பார் என்று அவனுடைய கருணைக்குப் பாத்திரர்களாய் அவன் மேல் எல்லாபாரத்தையும் போட்டுப் பயபக்தியுடன் பயந்து நடக்கவேண்டும்.

## 2. பிள்ளைத் தமிழ்

ஸ்ரீமான்-பண்டித வெங்கடரமண
அய்யரவர்கள் கோயம்புத்தூர் காலேஜ்

தமிழைப் புகழ்பவர்களும், தமிழின் பெருமையை விவரிப்பவர்களும், பலவிதமாக ஆரம்பம் செய்வது சகஜம். அவரவர் மனோதருமத்தை யனுசரித்து அவரவர் ருசி பலப்படும். ஆகவே தமிழில் காவிய விஷயமாக ஏதாகிலும் எழுதவேண்டுமென்று இஷ்டராகிய இப்பத்திராதிபர் பலவந்தப்படுத்தியதில், அவருடைய பலவந்தத்திற்காக என்னசெய்வதென்று யோசிக்குமிடத்து, 'பிள்ளைத் தமிழ்' என்பது தமிழ்க் காவியங்களுக்குமட்டுஞ் சில விஷயங்களில சிறந்திருப்பதாக எனக்குத் தோன்றுவதால் அதைப்பற்றிக் கொஞ்சம் பிரஸ்தாபித்துவிடுவது யுக்தமாகக் காணுகிறது.

காவியத்திற்கு விஷயமாகவுள்ள சகலத்தையும் தமிழாசிரியர் 'பொருள்' என்பர். இப்பொழுது சாமான்னியமாய்ப் 'பொருள்' என்பது தொட்டறியக் கூடியவைகளுக்குமட்டுமே உபயோகப்பட்டு வருகிறது. ஆனல் நாம் இவ்விடத்தில் 'பொருள்' என்பது அறிவிற் கெட்டுவதாகிய யாவற்றையுமெனக் கொள்ளல் வேண்டும். ஆகவே யது இருவகைப்படும். அவை யாவன, கண் முதலிய இந்திரியங்களாலறியக் கூடிய வெளிவிஷயங்களும், மனத்தின் கண்ணே யாராய்ச்சி செய்தறியவேண்டிய உள்ளடங்கிய விஷயங்களுமாம். இவற்றிற்கு முறையே 'புறப்பொருள்' 'அகப்பொருள்' எனப் பெயர் தொன்றுதொட்டு வழங்கி வருகின்றன. தொல்காப்பிய விலக்கணப்படி இவைகள் விசேஷமாகச் சிங்காரம், வீரம், என்னும் இரண்டு ரஸங்களையே முக்கியமாகக் கொண்டிருக்கின்றன. ஏனெனில அதற்கு முற்பட்ட காலத்திய அனுபவத்தில், இவ்விரண்டு ரஸங்களுக்கு உரிய விஷயங்களே பிரபலித்திருந்தனவென்று ஊகிக்க இடமுண்டு.

இதைக் குற்றமாகக்கொள்வது பிசகு. கால தருமத்தை யனுசரித்தே காவிய முதலியவை பிரபலிக்கின்றன. புத்தமதம் வடஇந்தியாவில் பிரபலித்ததற்கு அடையாளமாக 'நாகானந்தம்,' இன்னும் விளங்குகிறது. இந்து மதத்தில் பக்திமார்க்கம் பிரபலித்ததற்கு அடையாளமாகப் புராணங்கள் பிரபலித்து வந்தன. ஐரோப்பா முதலிய வேறு கண்டங்களிலும் இதே யனுபவம் கைகூடிவந்திருக்கிறது. ஆகையால் கால தருமத்தை யனுசரித்தே ரஸங்கள் பிரபலிப்பது சித்தம்.

ஆனால் நாம் இப்போ தெடுத்திருப்பது 'பிள்ளைத்தமிழ்' ஆதலால், அதற்கு வேண்டியதைமட்டும் பேசி நிறுத்தவேண்டியது நமது கடமை. ஆதலால் அதை யின்னதென்று முதலில் சொல்லிவிட்டுப் பிறகு அதற்குள்ள லக்ஷணங்களில் முக்கியமான வற்றையும் அவற்றிற்குள்ள நியாயங்களையும் குறிப்பிடுகிறோம். இவற்றை யுதகரித்து உத்தம கவிகள் செய்திருப்பதைச் சிறிதெடுத்து விளக்கி விட்டுப் பிறகு இம்மாதிரி வேறு பாஷைகளிலிருப்பதையும் சிறிது கவனித்து முடித்துவிடுகிறோம்.

'தமிழ்ப் பேரகராதி'யை யெடுத்துப் "பிள்ளைக்கவி" என்பதைப் பரீக்ஷித்தால், அதில் இவ்வாறு லக்ஷணமதற்குக் காணுகிறது. "பிள்ளைக்கவி—இதனிலக்கணத்தைக் கூறுங்கால், ஆண்பாற் பிள்ளைத்தமிழ், பெண்பாற்பிள்ளைத்தமிழ், என இருவகைத்து. இவற்றுள், இரண்டாமாதத்திற் காப்புக் கூறுதலும், ஐந்தாமாதத்திற் செங்கீரை கூறுதலும்............ எழாமாதத்திலமுதூட்டலும், எட்டாமாதத்திற்றாலாட்டு கூறுதலும்............பதினெட்டாமாதத்திற் சந்திரனை யழைத்தலும்," ...... ............இவைபோன்ற பாலிய அவஸ்தைகளைப பன்னிரண்டாண்டளவும் விஸ்தரித்துக் கூறுவதாகும். சந்திரனை யழைப்பதிருகவுள்ள லக்ஷணங்கள் இருவகைக்கும் பொதுவாகும். பிறகு ஆண்பாலுக்குச் சிறபபறை கொட்டல, சிறுதேருருட்டல், உடைவாள் தரித்தல், முதலிய அவஸ்தைகளையும், பெண்பாலுக்குப் பாவைக்கு மணம்பேசுதல, நல்ல புருஷனைப்பெறத்தவஞ்செய்தல், அம்மானையாடல், ஊசலாடல், முதலிய அவஸ்தைகளையுஞ் சிறப்பித்துக்கூறுவது சம்பிரதாயமாம்.

தவிர இவ்வவஸ்தைகளைச் செம்மையாய் விளக்குவது கவிகளுடைய மனோதருமத்திற்கியைந்தபடியாயிருப்பினும், விருத்தங்களில் சில நிபந்தனைகளுமுண்டு—சில வெண்பாவிலும், சில அகவற்பாவிலு மிருக்கவேண்டு மென்பதும், ஒவ்வொரு பருவமும் பத்துப் பாசுரங்களில் வர்ணிக்கப்பட வேண்டு மென்பதும் போன்றனவாம்.

இந்த லக்ஷணங்களுடன் இம்மாதிரிக் காவியத்தை யியற்றி யடையவேண்டிய பலனென்னவென்று நமது குமார நண்பர் ஆக்ஷேபிக்கலாம். இபபோது தமிழ் வல்லோரெல்லோரும் சரியென்று ஒப்பியிருக்குமஐந்தாறு நூல்களைக் கவனித்தால் இதற்குள்ள நியாயங்களும், அடையக்கூடிய பலனும் வெளியாகுமென்று நமபுகிறோம. அகராதியில் உதாரணமாகக் கூறியிருபபது, முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ், ஞானசம்பந்தர் பிள்ளைத்தமிழ், சேக்கிழார் பிள்ளைத்தமிழ், போன்றன ஆண்பாலுக்கும், மீனாக்ஷியம்மை பிள்ளைததமிழ், அமுதாம்பிகை யம்மை பிள்ளைத்தமிழ், வடிவுடையம்மை பிள்ளைத்தமிழ், போன்றன பெண்பாலுக்கும் காணுவன. ஆனால மத வைராக்கியத்தை யொழித்து நோக்குமிடத்து, இவற்றிற்கெல்லாம் முற்பட்டதும், பிள்ளைத்தமிழின் இலக்கணத்திற்கே ஆதாரமாகக்கூடியதுமான பெரியாழ்வார் திருமொழிப்பாசுரங்களை வெகு சிலாக்கியமானவையாகக்கொள்ளல்வேண்டும்.

இந்நூற்பெயர்களை ஜாக்கிரதையாகக் கவனிக்குமிடத்து, பிள்ளைத் தமிழுக்கு மூலகாரணம் எளிதில விளங்கும். அவையெல்லாம் வழிபடு தெய்வங்களை ஸ்தோத்திரஞ் செய்வதற்

காக ஏற்பட்டனவாதலால், பக்திரஸத்தை விளக்க வந்தனவாம். அவைகளில் வெகு புராதனமாகியது, நமக்குத் தெரிந்தவரை பெரிய திருமொழியென்று காணுவதால், ஸ்ரீ பாகவதத்தில் ஸ்ரீ கிருஷ்ணனுடைய பாலிய சேஷ்டைகளை நன்கு விளக்கும், பத்தாவது ஸ்கந்தம் நமது தமிழ் நாட்டில் பிரவசனமாகிய பின்தான் இம்முறையாகப் பக்திசெய்து ஆனந்தமடைய நமது புலவர்கள் பிரவிருத்தி யெடுத்தார்களென்று காணுகிறது.

வழிபடு தெய்வத்தைத் துதிப்பது பலவிதமென்பது பிரத்தியக்ஷம். க்ஷேத்திரபுராணமும் முறையிடுகிறது. அர்ச்சனை முதலிய முறைகளிருக்கின்றன. ஞான மார்க்கமாக வேதாந்த ரகசியங்களை யமைத்துப்பாமாலை சூட்டலாம். இன்னும் வேறெந்த விதமாகிலும வழிபடலாம். ஆனாலிம் முறைகளிலெல்லாம் கவிதைச் சாதுரியத்திற்கு விசேஷமா யிடமில்லை. பிள்ளைத்தமிழிலோ வென்றால், பக்தி முற்றுமளவிற்குக் கவிதையும் சுவைகூடிப் பரிமளிக்கும். இதுகேவலம் பாசுரங்களில் மட்டுமல்ல. பரமபாகவதர்களான சங்கீத வித்துவான்கள், விதுஷிகள், முதலியோர் வாயைத்திறந்தால, பிள்ளைத்தமிழ்ச் சுவை யில்லாமல் கிருதிகளிழைப்பது அபூர்வம.

ஆனாலிப்படிச் செய்வதில், இதரதேசிய பாஷைகளிலும், சமஸ்கிருதத்திலும், வழிபடு தெய்வத்தையேனும், பரப்பிர்மத்தையேனும், நாயக நாயகிபாவமாகப் பாடுவதே வெகு சாமான்னியமாம். ஆதலின் அவைகளைத் “கருணைத்தமிழ்” என்னல் தகும். உதாரணமாகப் பங்காளவைஷ்ணவ குருவாகிய ஸ்ரீசைதன்னிய சுவாமிகளுடையவும், அவருக்கு முந்திய ராஜபுத்திரினியாகிய மீராபாய் அம்மையுடையவும் கிருதிகளைக கவனித்தால, “பரமாத்துமாவாகிய ஸ்ரீகிருஷ்ணனொருவனே புருஷன். மற்றையரெல்லோரும் ஸ்திரீகளே,” என்கிற ஒரு ரகசிய மெங்கும் காணக்கூடியது இதையாதாரமாகக்கொண்டு அனேகமாயிரம் கிருதிகளும் பிரபந்தங்களும் அவரவர் மனோதருமத்தை யனுசரித்துப் பலவிதமாக வுண்டாகியிருக்கின்றன. சில சுமாராகவும், அனேக மிக்காலத்திற்குச் சபைகளில் விவரிக்கக் கொஞ்சமனுகூலங் குன்றியுமிருக்கின்றன. ஸ்ரீ ஜயதேவஸ்வாமி கிருதமாகிய அஷ்டபதி முற்றிலுமிவ்வாறே யமைந்ததாகும். ஆனால் அதில் சபைக்குதவாததாக விசேஷமாயில்லை.

பிள்ளைத் தமிழுக்கோவென்றால், இந்த அவகுணங்கள்சிறிதுமில்லை. ஏனெனில் அதற்கு விஷயமாவது பாலிய சேஷ்டைகள். ஆதலால் அவற்றில் சபைக்கு யோக்கியமாகாத விஷயமே கிடையாது. பாகவதத்தை யனுசரித்துண்டாகிய பெரிய திருமொழியிலிருந்து வெகு சிரேஷ்டமான பாசுரங்களை யெடுத்து இதை விளக்கலாம். பிற்பட்டுவந்த மற்றைய கவிகளிலும் கற்பனை யனேக சந்தர்ப்பங்களில நன்றாய் அமைந்திருக்கின்றன வென்றாலும, இவையெல்லாம் பிள்ளைத் தமிழிலக்கண முற்றிய பிறகு உண்டானவை யாதலால, கைகால்களைப் பலமாகக் கட்டிக்கொண்டு நடப்பவர் படுஞ்சிரமமிவற்றிற்கு வெகு அதிகமாயுண்டு. இலக்கணவிதிகள் சற்றிளகிநிற்கும் வரும்வரை ‘யிலக்கியங் கண்டதற் கிலக்கண மியம்பல’ முறையாகவும, சாத்தியமாகவுஞ் சொலலலாம. இலககணவிதிகள கைகால்களுக்கு விலங்குகளாக வேற்பட்ட பின்னேவென்றால், இலக்கியஞ் சற்றுத் தத்தளிப்பதே யெல்லாத் தேசத்தாருடையவும் அனுபவமாம். ஆகவே பெரிய திருமொழி யாசிரியருக்கு இம்மாதிரி விலங்குகளேற்படாததுடன், அவர் மனோதருமமும், பக்தியும், சக்தியும், அபாரமானதுகொண்டு, அவா பிள்ளைததமிழும் அவ்வளவிற்குச் சோபித்துக்காணுவது அதிசயமன்று. அதிகமாய் வளர்த்துவதற்கு இது சமயமல்லவாதலால், இரண்டொரு பருவங்களைமட்டும் இவ்வாசிரியர் விளக்கியிருக்கும்முறையைக் குறிப்பிட்டு,

மற்றைய பருவங்களை நல்லறிவுடையோர் அந் நூலிற் படித்துணருமாறு விட்டுவிடுவோம். இப்போது பிரசுரமாகி யிருக்கும் பெரியாழ்வார் திருமொழிப் பாசுரக்கிரமங்களை நோக்குங்கால், பின்னிட்டு வந்திருக்கும் 'பிள்ளைத்தமிழ்' கிரமத்திறமும், இதற்குமுள்ள பேதங்கள் எளிதில் விளங்கும்.

பக்தி ரஸத்தை நாயகநாயகி பாவமாய்ச் சிறப்பித்தல சுலபமென்றும், அது சர்வசாதாரணமென்றும் மேலே குறிப்பிட்டோம். பிள்ளைத் தமிழிலோ அந்த ரஸம் தாய் மகவிடத்திற் செய்யும் அன்பை விளக்குவதே. உலகத்தில் பிராணிவர்க்கங்களிலெல்லாம் காணக்கூடியதும் அன்புவர்க்கங்களில் முதலாயதும் இதுவேயாம். ஆனதுகொண்டு இவ்வன்பை யாழ்வார் விளக்கியிருப்பதைச் சற்று கவனிப்போம.

ஸ்ரீ கிருஷ்ணனாகிய குழந்தையின் அவயவங்களைப்பாதாதிகேச பரியந்தம் யசோதை உற்று நோக்கி மகிழ்ந்ததாக வருணிக்கும் பாசுரங்களில் எதை யெடுத்தாலும சுவை நிறைந்திருப்பதைத் தமிழ் சிறிதேனுங் கற்ற யாரும்படித்து ஆனந்திக்கக்கூடும்.

"என் தொண்டைவாய்ச சிங்கம் வா
வென்றெடுத்துக் கொண்டு,
அந்தொண்டைவா யமுதாதரித்து,
ஆய்ச்சியர்,
தந்தொண்டைவாயால் தருக்கிப்
பருகும் இச
செந்தொண்டை வாய்வந்து காணீரே,
சேயிழையீர் வந்துகாணீரே."

இந்தப் பாசுரத்தில் ஸ்திரீகள் அழகு வாய்ந்த குழந்தைகளை யெங்கு காணினுமெடுத்து முத்தமிடுவது முதலிய சகஜகுணங்களை நன்கு விளக்கியது காண்க. இதுபோலவே திருத்தாலாட்டில்,

"சங்கின் வலம் புரியும் சேவடிக்கிண்கிணியும்,
அங்கைச் சரிவளையும் நாணும்
அரைத்தொடரும
அங்கண் விசும்பிலமரர்கள் போத
ந்தார்,
செங்கட் கருமுகிலே தாலேலோ,
தேவகி சிங்கமே தாலேலோ."

என அவரை, குழந்தைகளுக்குத் தமிழ்நாட்டுப் பழையவழக்க மாறுயிருக்கு மிடங்களில், இவ்வாபரணங்களை யெங்குங் காணலாம். அம்புலிப் பருவத்தில, எந்தபாசுரம் சிறந்தது, எது தாழ்ந்ததென்று சொல்லுவது சுலபமன்று. ஆயினு மிவ்விரண்டும் போதுமானது:—

"என்சிறு குட்டனெ னக்கோரின்
னமுதெம் பிரான
தன்சிறுகைகளால் காட்டிக்காட்டியழைக்கின்றான்,
அஞ்ச வண்ண னோடாட
லாடவுறுதியேல்,
மஞ்சில் மறையாதே மாமதீ, மகிழ்ந்தோடிவா.
சக்கரக் கையன் தடங்கண்ணால்
மலர விழித்து,
ஒக்கலைமே லிருந்துன்னை யேசுட்டிக்காட்டுங் காண்
தக்க தறிதியேல், சந்திரா, சலம்
செய்யாதே,
மக்கள் பெறாத மலட னல்லையேல்,
வா, கண்டாய்."

இப்பாசுரங்களில் சுவபாவோக்தி யமைந் திருப்பதினழகை விவரிக்கப்புகின் பெருகும். பாவிற்குரிய நிர்ப்பந்தங்கள் எவ்வளவுகுறையக் கூடுமோ அவ்வளவுங் குறைந்து, கேட்போர் யாரும் ஆனந்தித்துக் கூத்தாடக்கூடிய பாடல்களில் இவை முதல்தரமானவை யென்பதில் தடையேயில்லை.

அம்புலிப்பருவம் 'பிள்ளைக்கவியில்' வெகு சிறந்ததாக வித்துவான்கள் சம்மதித் திருப்பதற்கு, இம்மாதிரி யமைந்துவாய்ந்த பாசுரங்களே காரணமாயிருப்பினு மிருக்கலாம். ஆகவே யிப்பாசுரங்களை யெல்லாம் படிப்பவருக்கு, எல்லாச்சுகிர்தமும் கிடைக்குமென்பது சித்தம்.

இவ்விரண்டோருதாரணங்களைக் கொண்டு மற்றுள்ள பருவங்களிற் காணுமதிசயங்களை நல்லறிவுடையோர் உய்த்துணர்வாராக.

இவ்வாறு பக்திரஸம் பொங்கிச் சந்தி முதலிய தோஷங்களும், அரும்பதங்களும் காணாமல், யாருக்கும் ஆனந்தத்தையே கொடுக்கும்படி யேற்பட்ட இம்முறைக்காவியம், மற்ற காவியங்களைப் போலவே காலக்கிரமத்தில் பக்தி குறைந்து இலக்கண நிர்ப்பந்தங்கள் அதிகரித்து, நிகண்டு பிரபலித்து, முரட்டு மார்க்கங்கள் மலிந்துவிட, அர்த்த கௌரவங்குறைந்து பதப்பிரயோகமுஞ் சந்தவின்பமுமதிகரித்துப்போனது நிச்சயம். ஆகவே பிற்பட்டு வந்தவர்கள் பலவிடங்களில், 'பிள்ளைவாய்த் தமிழைப்' 'பேழ்வாய்த் தமிழ்' ஆக்கிச் சிறுமிகள் கூடிப் பேசுவதைத் திமிங்கலயோக்கியமான பெரும்பதங்களைக் கொண்டு விளக்கி, யின்னு மனேக விதங்களில் நவம நவமாக அணிகளைப்பிரபலப்படுத்தி வந்துவிட்டார்கள். ஆதலால் இவ்விஷயத்தில தமிழ் வித்துவான் களுக்கும் தமிழ் அபிமானிகளுக்கும் இருதிறத்தாருக்கும் பக்திகுறைந்திருப்பது நியாயமேயாம்.

ஒரு தோஷமட்டும் ஆதி முதலேற்பட்டதாகையால், அதைப்பற்றி யிரண்டொரு வார்த்தைகள் சொல்லி யிதை நிறுத்திவிடுகிறோம். வழிபடு தெய்வத்தை யுத்தேசித்தே பிள்ளைக் கவி யேற்பட்டதில், காவியத்திற்குள்ள பலலக்ஷணங்களில் இரண்டொன்று தானிதற்குக் கூடியதாயிற்று. காவியத்திற்கு நோக்கம் அகப்பொருள், புறப்பொருள், இரண்டையும் கண்ணாடிபோல் உள்ளபடி விளக்கவேண்டியதென்று சாதுக்கள் ஒப்பியிருப்பதால், தேவதைகளை வழிபடுவதையே முக்கியமாகக் கொள்ளவே, யவ்வளவிற்குக் காவியத்திற்கும் கவிகளுக்கு மிருக்கவேண்டிய நிரங்கு சத்துவமும் யதேச்சையும் குறைந்துவிட்டது. ஆதலால், மற்றைய காவிய வகைகளிலிருக்கும் விஸ்தீரணம இதற்கு இல்லையென்றுதான் சொல்லவேண்டும்.

இதர பாஷைகளில் 'பிள்ளைத் தமிழ்' முறை யபூர்வமென்றோ, இல்லையென்றோ சொன்னோம். ஆனால் ஆங்கிலேய பாஷையில் ஆங்காங்கு சிறிது காணுவது நமக்குத் தெரியவருகிறது. என்றாலும் அதற்கு லக்ஷணமேற்படவுமில்லை. லக்ஷணத்திற்குக் கட்டுப்பட்டுக் கவிகள் எழுதியதாகவும காணவில்லை. அதிற் காணும் முறையைக் கவனித்துப் புத்திமான்கள் அதைத்தமிழில் விருத்திக்குக் கொண்டு வருவாராகில், காலக்கிரமத்தில் எந்தப் பாஷையுமிதனுல் சிறப்படையலாமென்றும், யாராகிலும் மகாபுருஷன் இந்த நவீனமுறையில் பக்தியதிகரித்து, முதல்தரமாகப் பாடி, நல்லறிவுடையோர்க்குத் திருப்தியுண்டு செய்யலாமென்று நம்பி, அதை விளக்கவேண்டி எமது கைக்கெட்டிய சிறு பிரகாணததை யேதோ ஒருவாறு மொழிபெயர்ததுப் பின்னெப்பொழுதாவது உதகரிக்கிறோம்.

---

### பரிகாசமான பட்டப்பேர்

உலைவாயை மூடலாம், ஊர்வாயை ஒருபோதும் மூடலாகாது. நம்மிடம் ஏதாவது துற்குணமிருந்தால் அந்தத் துற்குணத்தைக்கொண்டு ஜனங்கள் நமக்குப் பெயரிட்டு விடுவார்கள். "சுடுகாட்டுச்சொக்கன்" "பழையத்துப் பஞ்சை" என்ற பெயர்கள்போன்ற பரிகாசமான பட்டப்பெயருள்ள ஜனங்களை நாம் எத்தனையோ இடங்களில் கண்டும் கேட்டும் இருக்கிறோமல்லவா? நமது பெயருக்கு இவைகள் மிகவும் இழிவானவைகள். ஆகையால் நாம் நடப்பதில் அப்படிப்பட்ட சுட்டுப்பெயர்கள வராதபடி நடந்துகொள்ளவேண்டும்.

## 3. தேசீயபாஷைகளில் வசன நடை

குதிரைக்குறடா

சென்னமாதத்தில், ராவ்பஹதூர், வி, நாகோஜீராயரவர்கள், தேசீயபாஷைகள் விஷயமா யெழுதியதைப் படித்து நமக்கு மெத்தவும் சந்தோஷம. ஆனாலவா 'லோயர் செகண்டரி' தரபுடன் நிறுத்திவிட்டதால, அதற்கு வெகுமேற்பட்டுள்ள 'காலேஜ தரபில்' தற்காலம் காணும் இரண்டொரு விசித்திரஙகளையும் எடுத்துக்காட்டுவது நலமென்று நமக்குக்காணுவதால அவதாரிகை யில்லாமல சங்கதியை மட்டும் சுருக்கிச்சொல்லிவிடுகிறோம.

இப்பொழுது நமது பள்ளிக்கூடங்களில் தேசீயபாஷைகளுக்கு வந்திருககும் தசை வெகு குரூரமானதென்றே சொல்லவேண்டும. இதுவரையில் அவைகளுக்கு ஏதோ பதவியொன்றிருந்தது. ஆதிமுதல் பீ. ஏ, வரையிலும் தேசீய பாஷைகளில் பாடப் புஸ்தகங்களும், அவற்றில் பரீக்ஷையும், அப்பரீக்ஷையில தேறவேண்டிய அகத்தியமுமிருந்து வந்தன. இவைகளிலெல்லாம் பெருங் குறைவுகளிருந்து வந்தனவென்பதில் சந்தேகமேயில்லை. சில சமயங்களில் பாடப்புஸ்தகங்கள் விசித்திரமாயமைவதுண்டு. சாமான்னியமாய்ப் பாடஞ்சொல்லுபவரிடம் காணும் குறைவுகளோ பிரசித்தமாய்த் தெரிந்தவைகள். பரீக்ஷைக் கிரமங்களும் விசித்திரமானவைகளென்பதில் ஆக்ஷேபமில்லை.

ஆனால் தலைவலி வந்தால அதற்கு ஏதாகிலும் பற்று முதலிய பரிகாரந் தேடுவதுதான் உலகத்தாருடைய வழக்கமேயல்லாது, தலையைக் கிள்ளியெறிந்துவைப்பதலல. என்றாலும் நமது யூனிவர்ஸிட்டியாரும், அவர்களை யடுத்தவாழும் வேறிரண்டொரு கக்ஷியாரும் சமீபத்தில் நடததிவருங் காரியங்களையாராய்ந்து பார்க்குமிடத்து இம்மாதிரிப பரிகாரமே தான் அவர்களுடைய நோக்கமெனக் காணுகிறது!

'மெட்ரிகுலேஷன்' என்பதற்குப் பதிலாக 'ஸ்கூல் பைனல்' என்னும் பரீக்ஷையேற்படப் போகிறது. அதில் இனித்தேறியவாகளென்றும், தேருதவாகளென்றும், இரண்டுவகுப்பு இதுவரை யிருந்தமாதிரி கண்டிதமாயிருப்பதில்லை. ஆனால் இந்த விமர்சனம படித்துவரும் விஷயங்களெல்லாவற்றிற்குமே யாதலால், தேசீய பாஷைகளுக்குத் தனிப்பதவி வேண்டுவது அக்கிரமமென்று வைத்துக்கொள்ளலாம்.

காலேஜ் வகுப்பிலோவென்றால் சங்கதியே வேறாகியிருக்கிறது. பழையபடித் தேசீய பாஷைகளில் படிக்கவேண்டிய புஸ்தகஙகள வருஷாவருஷம் யூனிவர்ஸிட்டிப் பஞ்சாஙகத்தில் பிரசுரமாகித்தான் வருகின்றன. ஆனால் அவைகளைப் படிப்பிப்போரும், படிப்போருமட்டும் எங்கேயோ மாயமாயோடி யொளிந்துவிட்டார்கள்.

இப்படி முழுமோசமாய்ப் போவதுதெரிந்து யூனிவர்ஸிட்டியாருடைய கிரமங்களுக்கு மதிராசு கவர்ன்மெண்டார் ஒரு சிட்டை சேர்த்துவிட்டிருக்கிறார்கள். அதைத்தான் இபபோது நாம் கொஞ்சம் விசாரிக்கவேண்டுவது.

அந்தச் சிட்டையிதுதான். புதிதாக ஏற்பட்டிருக்கும எப். ஏ, பரீக்ஷைக்குத் தேசீய பாஷைகளைக் கொண்டு பழையபடி யாகவேண்டியவை யொன்றும் இல்லாததால், அந்தப் பரீக்ஷைக்குப் படிக்கும் நமது குமாரர்களுக்கு அது க்ஷேமகரமலலவென்றும், அதனால்தேசீய பாஷைகளுக்கே மஹிமை வந்துவிடுமெனறும் யோசித்துக் கவர்ன்மெண்டார், இக்குமாரர்கள் தேசீய பாஷைகளில் அவரவருக்குரியதில் 'வசன நடைப' பரீக்ஷைகொடுக்கவேண்டுமென்றும், அதில் நூற்றுக்கைம்பது மார்க்கு வாஙகவேண்டுமென்றும், ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

இதை யுத்தேசித்துக் கக்ஷியிரண்டு ஏற்பட்டுக் கொஞ்சகாலமாக வாதம் பலப்பட்டு வந்

திருக்கிறது. தினவர்த்தமானிகளாகிய இங்கிலீஷ் பத்திரிகைகளைப்படித்து வருபவருக்கு, இந்தக் கக்ஷிகளில் 'வசன நடைக்' காகப் பேசி வருபவர் அனேகமாய்த் 'தமிழா' என்று காணுகிறது. இதர பாஷைகள் மூன்றிலும் ஏதோ சங்கதியிருக்கவேண்டும். ஏனெனில் அப்பாஷைக்கு வார்சுதாரர் இம்மாதிரி வியாச்சியத்தில் விசேஷமாகப் பிரவேசிப்பதேயில்லை. ஆதலால் இந்தப்பரீக்ஷைக்கு வசன நடையிருப்பதனால், தமிழுக்குத்தான் விசேஷ உபகாரமிருப்பதாகச் சிலர் நம்புவதுபோலக்காணுகிறது. அது சரிதானா, அல்லவா வென்று நாம் விசாரிக்கப் புகுவதில்லை. காலேஜ் வகுப்புகளில் இந்த வசன நடையைக் கற்பிக்க என்ன சாதனங்களிருக்கின்றன? பரீக்ஷகருக்கு மார்க்குப் போடுவதற்கு என்னமுறைகளேற்பட்டிருக்கின்றன? இந்த இரண்டைமட்டுஞ் சற்று விசாரித்து விடுவது யுக்தமாகக் காணுகிறது.

வசனநடையை வெகுநாளாக இங்கிலீஷில் கற்பித்து வருபவரனுபவத்தைக் கேட்டால், அவர்சொல்லுவது இந்த ஏற்பாட்டுக்கு அனுகூலமாகவேயில்லை. ஏனெனில், வசனநடை தேர்ந்து வருவது ஒருநாளைய காரியமல்ல. முதல் வகுப்பிலிருந்து சிறிது சிறிதாக வரவேண்டிய விஷயம. கீழ்வகுப்புகளிலோ வசன நடையில் பயிற்சியென்பது காதிற்கேளாத விஷயம. தவிர, இனியாகிலும் பயிற்சிசெய்விப்போமென்றால், அதற்கு முக்கிய சாதனமாயுள்ளது திருஷ்டாந்தம். அதாவது, செம்மையாயெழுதியிருக்கும் பிரகரணங்களை மாணாக்கர் முன்வைத்து, அதிலுள்ள ரஸங்களையவர்களையேகொண்டு கண்டுபிடிக்கச்செய்து அவ்வாறே தாங்களும் எழுதிப்பயின்று வரும்படி செய்து, துன்பார்க்கங்களைக் கண்டித்து வரவேண்டும. கீழ் வகுப்புகளில இவ்விஷயங்கள் சிரமமில்லை. ஏனெனில் அங்கே வேண்டுவதெல்லாம், சாமான்னிய இலக்கண வழுவில்லாமல், வாக்கியங்களில் எழுவாய், பயனிலை முதலிய கிரமங்களிருக்கும்படி பார்த்து விடுவதே முக்கிய லக்ஷியமாம். மேலே வருமிடத்து வேறுசில புது லக்ஷணங்கள் வேண்டும். எழுதுவதில் விஷயத்தை யேதோ ஒருவாறாக விளக்கினால் மட்டும் போதாது. காரசாரமாகவு மிருக்கவேண்டும். இதற்குக் காரசாரமாகப பெரியோரெழுதியிருப்பதைத் திருஷ்டாந்தமாக எடுத்துக்காட்டுவது அத்தியாவசியம். எதையெடுத்துக்காட்டுவது? இதைபற்றிப பேசி எழுதிய யாராகிலு மிதைக் கவனித்தார்களில்லை. பரிமேலழகரும், சேனாவரையரும, நச்சினார்க்கினியரும் எழுதிய வசன நடையையிவர்களுக்கும் அச்சாக்கி, இம்மாதிரி எழுதுங்கள், என்னலாமா? அம்மாதிரி நடையைப் பிரபலப்படுத்துவதில் யாருக்கனுகூலம்? தவிரக் கவர்ன்மெண்டார் வசன நடை வேண்டுமென்றது இவ்வகைத்தல்லவென்பது நிச்சயம். இப்பெரியோரை நீக்கித் தற்காலம் பத்திரிகை முதலியனவற்றிற் காணும் நடையைத் திருஷ்டாந்தமாக்கலாமா? அல்லது 'நாவல்கள்' என்று ஈசல் புறப்படுவது போலக் குவியும் புஸ்தகப் போலிகளை யெடுக்கலாமா? அல்லது, இதொன்று முதவாதென்றால, காலேஜ்களில் இனியிதைக் கற்பிக்கவேற்படும் உபாத்தியாயர்கள் சுவயம் கர்த்தர்களாகி, அப்போதைக்கப்போது வேண்டியபடி யெழுதிக் காட்டும் திறம் வாய்ந்தவர்களாயிருப்பது நிச்சயமா? இத்தியாதி பலத்த இடையூறுகளைக் கவனித்தவருமில்லை. அவற்றிற்குப் பரிகாரங் கூறுபவருமில்லை.

சரி, காலேஜ்களில்தான் வசனநடை கற்பிப்பது. இதுவரை 'மொழி பெயர்ப்புப்' போன்ற இரண்டோர் விஷயங்களை யெப்படிக் கற்பித்து வந்தார்களோ, அதே சிஷ்டாசாரப்படி நடந்து வருவதாகவைத்துக்கொள்ளுவோம. அதாவது, மாணாக்கரை அந்தந்தக்காலத்தில் யதேச்சையாகத்திரிய விட்டுவிடுவதேயாம்! அது நிற்

கப் பரீக்ஷையென்று ஒரு பெரியகண்டமேற்பட்டிருக்கிறதே, அதற்கென்ன தீர்ப்பென்றுதான் நாமறியவேண்டுவது.

வசனநடையென்றால், விஷயம் இவ்வகைத்தென நிச்சயப்படவேண்டும். தத்துவகோடிகளிலும, சாஸ்திரகோடிகளிலும், நடையெழுதுவதென்றால், பரிபாஷை யுபத்திரவம் வெகுபெரியது. மற்றைய காவியாதி விஷயங்களிலோவென்றால், மாதிரிக்காகக் காணக்கூடிய லக்ஷணங்கள் இன்னும் ஏற்படவில்லை. பரீக்ஷகரென்பவர் மனோதருமத்தை யனுசரித்துப் போகவிடுவது வெகு அபாயகரம். ருசிபேதத்தினால் அனேக அனர்த்தங்கள் விளையும். சிலருக்குப்பதப்பிரயோகத்திலேயேருசியதிகம் சிலருக்குக் கதைக்கூத்துகளில ப்ரியமதிகம். வேறு சிலருக்குப் பழமொழிகளை மாலையாக்கி யெழுதுவதில் குதூகலம். சிலருக்கு வடசொல் லேற்காது. சிலருக்குத திசைச்சொல் ஒத்துவராது. இவை நடையைப் பொறுத்த துக்கங்கள். விஷயத்தைப்பற்றிய துக்கங்கள் இன்னும் வலியன. ஆதலா லிவைகளுக்கெல்லாம் பரிகாரந்தேடுவது முதலாக வேண்டிய காரியம். தேடுபவரைமட்டுந்தான் காணோம்.

எப்படியோ முறைக்கு நடக்கட்டுமென்று விட்டு விடலாமென்றால், ‘மார்க்குச்’ சனியொன்றிருக்கிறது. 100-க்கு 50-வீதம் மார்க்கு வாங்கவேண்டும். இல்லாவிடில் பரீக்ஷை போய்விட்டது. ஆதலாற்றான் பெரும போடாகப் போடும நம்மவர் சிலர், இச்சில்லறை விஷயங்களையுங் கவனித்து, முதல் பரீக்ஷை வருமுன்னமே யிவற்றிற்குப் பரிகாரந் தேடவேரென நம்பி நாமிதை யெழுதலானோம். தூங்குபவர்களுக்குச் சாமான்னியமாய்த் தட்டியெழுப்புதல் போதுமாயினும், சில விஷயங்களில் நம்மவர்களுக்குக் குறடாகினாலும் விழிப்புக்கிடைக்காதது பற்றிய பெயரைமட்டுமாவது வகித்தால என்ன கிடைக்கும, பார்ப்போமென்று பரீக்ஷார்த்தம் எடுத்துக்கொண்டதை யிஷ்டா மன்னித்தல் வேண்டும்.

# சாரித்திரகாண்டம்

## 1. 1901-2-3-ம் ௵த்திய மஹா சாஸனங்கள்

ஸ்ரீ மகாராஜச் சக்கரவர்த்தி யவர்களுடைய மஹா சாஸனங்கள்

1. 1901-ம் ௵ பிப்ரவரி௴ 4-ந்தேதியில் பிரசுரித்தது—

“இந்தியாவிலுள்ள மகுடவர்த்தனருக்கும் மகா ஜனங்களுக்கும், (இதனால் அறிவிப்பது.)

நமதருமைமாதாவாகிய (மகாராணியவர்கள்) காலஞ்சென்று போனதுகொண்டு, நமக்கும், ராச்சியத்திலுள்ள சகலருக்கும, துக்கமுண்டாகி, நாம் அதில மூழ்கியிருப்பதில், அதுகாரணத்தினால், இப்பழைய பரம்பரையான ராஜவம்சத்தில் வெகு காலமாக இடைப்படாது வரும் ஆதிபத்தியத்தை இப்போது நாம்வகிக்கும்படியாகி யிருக்கிறது. ஆதலால இச்சமயத்தில நாம், இந்தியாவில் மகுடவர்த்தனராகி, அரசாண்டு வரும பூபதிகளுக்கும், நமதாளுகைக்குட்பட்ட மகா ஜனங்களுக்கும, ஆசிகள் வழங்கியறிவிப்பது, இவர்களனைவரும் க்ஷேமமாயிருக்கவேண்டுமென்பது நமது அந்தரங்கமான ஆசையென்று உறுதியாயறியவேண்டுவதாம.

இப்போது நாமெல்லோரும் துக்கப்படுவதற்குக் காரணமாகியும், (இதுவரை) குன்றாப் புகழ்பெற்று விளங்கியும, இந்த ராச்சியாதிகாரத்தை நமக்குமுன் வகித்திருந்த (மகாராணியவர்கள்) இந்த (இந்தியா) ராச்சியத்தைத் தாமே யாளுவதாக முதன்முதல் அதிகாரம் பெற்றுக்கொண்டபிறகு, இம்மகா மண்டலத்தின் அரசாட்சியில் தமக்கிருந்த சமீபப் பற்றைக் குறிப்பிட்டுச் “சக்கரவர்த்தினி” யென்னும் பட்டத்தையும் வகித்துக்கொண்டார்கள்.

மகாராணியவர்கள் ராச்சியபாரம் வகித்துப் பரிபாலனம் செய்து வருங்காலமுழுதும், இந்தி

யாவின் க்ஷேமலாபத்தைக் குறித்த விஷயங்களிலெல்லாம், அவர்களுக்கு எல்லாவற்றையும் தாமே ரூபரூபிலறிந்து காரியநிர்வாகம் செய்ய வேண்டு மென்னும ஆக்கிரகம் வலுத்திருந்தது. அது ஒருக்காலும் மாறவேயில்லை. ஆதலால அம்மகாராணியவர்களுடைய ராச்சியாதிகாரத்தரபிலும, மானுஷியமான மற்றைய விஷயங்களிலும, இந்தியாவின் கோடிக்கணக்கான மகாஜனங்கள், எவ்வளவிற்கு அன்பும், ராஜபக்தியும், வைத்து வந்தார்களென்பது நமக்கு நன்றாய்த் தெரியும்.

இப்பெரும பக்தியும், பேரன்பும், பல்லாண்டுகூடிப் பெருமை வாய்ந்தமகாராணி யவர்களுடைய அதிகார தசையில், கடைசி வருஷத்தில் வெகு விசேஷமாகப் பிரத்தியக்ஷமாயின. அக்காலத்தில் தென் ஆபிரிக்காவில நடந்த யுத்தத்தில், இந்தியாவிலுள்ள மகுடவாத்தனாகள் ராஜபக்தி கனிந்து பெருகிச் செய்த வுதவிகளும், நமது தேசியச் (சிப்பாய்ச்)சேனையானது, தமது சுவதேசத்தைவிட்டு வெகு தொலையிற் போய் (மானுபாவர்களாய்த) தங்கள் சௌரியத்தை விளக்கி வந்திருப்பதும், (பிரத்தியக்ஷமே.)

நாம் (முன் 1875-ம் ஷு த்தில்) இந்தியாவிற்கு வந்ததும், அப்புராதன பூமியாகிய மகாமண்டலத்திலுள்ள மகுடவர்த்தனர்கள், மகாஜனங்கள், புராண நகரங்கள், இவைகளை யச்சமயத்தில் ரூபரூபில் பாாத்துப பரிசயஞ்செய்து கொண்டதும்,(அமமகாராணிச்சக்கரவர்த்தினி) யவர்களுடையகற்பனையை யனுசரித்தும், திருவுளத்திற் கிணங்கியுமே தானென்று (அவர்களறிதல வேண்டும்.)

அக்காலத்தில் நமக்கு மனதிலுறைத்துப் பதிந்துளள ஞாபகக்குறிகளை நாம மறப்பதற்காகவே யாகாது. ஆதலால முதன் மகாராணிச் சக்கரவர்த்தினியவர்களுடைய போதிகாா தருமத்தையே நமக்கும் வழிபடவேண்டிய விதியாகக் கொண்டு, நமது இந்தியப் பிரஜைகளில் சமஸ்தமான ஜனங்களுடையவும் க்ஷேமத்தைக்கோறி நடந்து, அதனல் அம்மகாராணியவர்களுக்குக் கிடைத்ததுபோல் நமக்கும் இப்பிரஜைகளுடைய பேரன்பும், குன்றுத ராஜபக்தியும், எப்போதும் கிடைப்பதற்கு வேண்டிய யோக்கியதை சித்திப்பதற்குத் தக்கவண்ணம் நடந்துவரப் பிரயத்தனப்படுவோமாக.

| | |
|---|---|
| விண்ட்ஸர் அரண்மனை<br>1901ஷு பிப்ரவரிமீ<br>4உ | (ஒப்பம்)<br>எட்வார்ட் மகாராஜச்<br>சக்கரவர்த்தியவர்கள்." |

2. டிலெலி தர்பார் ஆரம்பத்தில் படித்தது:—

"மகாராஜச் சக்கரவர்த்தியாகிய எட்வார்ட் மகாப்பிரபு அவர்கள், (இதனல் அறிக்கையிடுவது.)

கி. பி. 1901-ம் ஷு ஜனவரிமீ 22-ம் தேதியில் அதுவரை நம்மெல்லோருக்கும் அதிபதியாகியும், ஆனந்தப் பிரதாாகியும் விளங்கித் தருமபரிபாலனம் செய்து வந்த (மகாராணியவர்கள்) காலஞ்சென்றுவிட நாம் அதுமுதல் அந்த அதிகாரத்தை ஸ்ரீபகவத் பிரசாதபலத்தினல் வகித்துச் சிமமாசன மேறி, ஏழாவது எட்வார்டு, கிரேட்பிரிட்டன், ஐர்லாந்து, ஆகிய இரண்டுங்கூடிய ஐக்கிய ராச்சியத்திற்கு மகாராஜா, மததரும ரக்ஷகர், இந்தியாவிற்குச் சக்கரவாத்தி, யென்னும் இபபட்டங்களைக் கிரமப்படி வகித்திருபபதனுலும்,

கி. பி. 1901-ம்ஷு ஆகிய நமதாசாக்ஷியின் முதல் வருஷத்தில், ஜூன்மீ 26-ம்தேதியிலும், டிம்சபர்மீ 10-ம் தேதியிலும், ஸ்ரீசருவே சுவரனருளையும், அனுக்கிரகத்தையும் முன்னிட்டு, 1902-ம்ஷு ஜூன்மீ 26-ம்தேதியாகியசுபதினத்தில் நமது மகுடாபிஷேக மகோற்சவத்தை நடத்துவதாக எமக்குச் சந்தோஷமிருப்பதைப் பகிரங்கமாகத் தெரிவித்துப் பிரகடனமுஞ் செய்திருந்ததினுலும்,

அப்படியே யதை அனுசரித்தும, ஸ்ரீசருவே சுவரனருளையும், அனுக்கிரகத்தையும் முன்னிட்டு, மேறசொல்லிய மகோற்சவத்தைச் சென்ற ஆகஸ்டுமீ 9-ம் தேதி கொண்டாடி நிறைவேற்

றுவதற்கு நேர்ந்து, அந்தப்படி நாம் நடத்தியி ருப்பதாலும்,

அவ்வாறு மேற்கண்ட மகோற்சவம் நடந்தேறிய சங்கதி, இந்தியாவிலுள்ள நமது அருமைப் பிரஜைகளுக்கெல்லாம் பகிரங்கமாய்த்தெரியவேண்டுமென்பது நமக்கு அபிமதமாயும், திருவுள்ளமாயு மிருப்பதுடன், அம்மகோற்சவ சம்பிரமத்தில், நமது கவர்னர்கள், உபகவர்னர்கள்,டிபார்ட்மெண்டு முக்கியஸ்தர்கள்(ஆகியவர்களும்), நமது அதீனராகியவரவர் ராச்சியத்தைப் பரிபாலித்து வரும், மகுடவர்த்தனர்கள், தலைவர்கள், பிரபுக்கள் (முதலியோரும்), நமது இந்திய மகாமண்டலத்தியபல பிராந்தகளிலுமிருக்கும் மகா ஜனங்களுக்குப் பிரதிநிதிகளாயுள்ளவர்களும, (ஆகிய இவர்களனைவரும் வந்திருந்து) அச்சந்தோஷத்தையடையவேண்டுமென்பதும, நமது திருவுள்ளமாதலாலும்,

இச்சந்தர்ப்பத்தில், ராஜமான்னியமான இக்தமகா சாஸன மூலமாய், நாம் சகலரையும் எச்சரித்து, இப்படி நமக்குள்ளிருக்கும் சந்தோஷத்தைப பகிரங்கமாகப் பிரசாதித்தருளி, நமது பிரதிநிதியும இந்தியா கவர்னர் ஜெனரலுமாகிச், சகல சற்குணங்களும் பொருந்தி, நமக்கு வெகு சிநேக பாத்திரமாயுள்ள, ஜி. என். கர்ஜன் பிரபுவை ஆக்ஞாபித்து, டில்லியில், 1903-ம்௵ ஜனவரிமீ முதல் தேதியில், மேற்குறித்த மகுடாபிஷேக மகோற்சவம் சம்பூரணமானதை யெல்லோருக்கும் விளம்பரப்படுத்து வதற்காகச் சார்வபௌமமாயொருதர்பார் கூட்டும்படிக் கற்பனை செய்தருளியிருக்கிறோம்.

நமதாளுகையின் இரண்டாம் ஆண்டாகிய 1902-ம்௵ அக்டோபர்மீ முதல்தேதி நமதாஸ்தானத்தில் பிரசுரிக்கப் பெற்றது.''

3. டில்லிதர்பாரில் மேற்கண்ட மகா சாஸனத்தைப் படித்தபின், வேறு சந்தர்ப்பத்தில் படிக்கப் பெற்றது.)

" மகாராஜச் சக்கரவர்த்தி யவர்கள் தமது இந்தியப் பிரஜைகளுக்குக் கருணைகூர்ந்து அருளிய க்ஷேம பத்திரிகை.

நமது இந்தியப பிரஜைகள் நமது மகுடாபிஷேக மகோற்சவத்தைக் கொண்டாடிவரும் இச்சுபமுகூர்த்தத்தில், அவர்களுக்குக் குசலப் பிரசின பூர்வமாய் (இப்பத்திரிகையை) அனுப்புவதில் நமக்கு வெகு சந்தோஷமே. லண்டனில் நடந்த மகோற்சவத்தில், இந்திய மகுடவர்த்தனர்கள், மகாஜனப்பிரதிநிதிகள், ஆகிய இவர்களில், சிறிது பெயர்மட்டுமே வந்திருந்து போகும்படி. யானதால், நாம் நமது பிரதிநிதியும் கவர்னா ஜெனரலுமான (கர்ஜன் பிரபுவை) ஆக்ஞாபித்து, இந்திய மகுட வர்த்தனரெல்லோருக்கும், தலைவருக்கும், மகாஜனங்களுக்கும், நமது ராஜாங்கத்திய உத்தியோகஸ்தருக்கும், இச்சுப விசேஷத்தைத தக்கபடி கொண்டாடுவதற்குப் பிரகிருதம் ஒன்று ஏற்படவேண்டி, டில்லியில் ஒரு பெரிய தர்பார் கூட்டவேண்டுமென்று கற்பனை யிட்டருளினோம். 1875-ம் ௵த்தில நாம் இந்தியாவில் வந்து முகாம் செய்து போனதுமுதல், அந்தத் தேசமும, அதிலுள்ள ஜனக்கூட்டமும் நமக்கு வெகு அருமை வாய்ந்தனவாகி விட்டன. நமது வம்சத்தவர்க்கும், நமது அதிகாரத்திற்கும், அவர்கள் மனபூர்வமாய்க் காட்டி வரும் பக்தி யெவ்வளவுதூரம் ஆழ்ந்திருப்பதென்று நமக்குச் செம்மையாய் விளங்கியிருக்கிறது. சமீபகாலத்தில் அதற்கு எத்தனையோ சாக்ஷியங்கள் நமதுகாதிற் கெட்டியிருக்கின்றன. நமது மகாராச்சிய மண்டலத்தில் நடந்த யுத்தங்களிலும, அதில் நமக்குக் கிடைத்த ஜயவிபவங்களிலும், நமது இந்திய சைன்னியத்தார் வெகு முக்கியஸ்தராகவிருந்து வந்திருக்கிறார்கள்.

நமது அருமைக் குமாரராகிய பிரின்ஸ் ஆப் வேல்ஸும், அவரது ராணியும், சீக்கிரத்தில் இந்தியாவிற்கு வந்து முகாம் செய்து நமமைப் போலவே ரூபரூபில் சங்கதியறிவார்களென்று நமக்குப் பூரணநம்பிக்கை. அந்த ராச்சியத்தை யவர்கள் ரூபரூபில் பார்க்கவேண்டுமென்பது நமக்கெக்காலத்திலுமிருந்துவரும் கோரிக்கை. அவர்களுக்கும் அங்கே வரவேண்டுமென்னும் ஆக்கிரகம் அவ்வாறே பலமாகவிருக்கிறது. இப்

பொழுது இப்பெருந்திருவிழா நடக்குஞ் சந்தர்ப்பத்தில், நம்மால் சாத்தியமட்டும் படுமாகில், நாமேநேரில் இந்தியாவுக்கு வந்திருந்து சந்தஷ்டியடையவேண்டுமென்பது நமது ஆக்கிரகம். ஆயினும், (அது சாத்தியமில்லாததுபற்றி,) நம தருமைச் சகோதரராகிய கன்னாட் பிரபுவை அனுப்பியிருக்கிறோம். அவரையோ இந்தியாவில் எல்லோருக்கும் நன்றாய்த்தெரியும். நமது மகுடாபிஷேக மகோற்சவத்தைக் கொண்டாட வேண்டிக் கூடிய மகா சபையத்தில், நமது வம்சத்தவருடையவும் பிரதிநிதியிருக்கவேண்டுமென்பது நமது அபிஷ்டமாம்.

பூஜ்யராகிய நமது மாதாவும், மாஜி மகாராணியும், இந்தியாவின் முதற் சக்கிரவர்த்தினியுமாகிய விக்டோரியா தேவியவர்களுடைய அதிகாரத்தை நாம் வகித்தது முதல, மேற்படி ராணியவர்களிடத்தில, அவர்களது இந்தியப் பிரஜைகள் இவ்வளவு அபூர்வமான விதமாகப் பக்தியும் பிரேமையும் வைத்து வந்ததற்குக் காரணமாகிய, காருண்ணியமும், நீதியும் நிறைந்த பாலன தருமங்களைச் சிறிதும் கோணாமல், கைப்பற்றி வரவேண்டுமேன்பதே நமக்கும் அபீஷ்டமாகியிருக்கிறது.

ஆகவே, இந்தியாவிலுள்ள நமது சாமந்தர்களான மகுடவர்த்தனருக்கும், மகாஜனங்களுக்கும், நாமிதனால் உறுதிகூறுவது, அவர்களுடைய உரிமைகள் விஷயத்தில் நமக்கிருக்கும் மரியாதையும், அவர்களுடைய பதவிகளுக்குரிய விருதுகள், பதிவுகள் ஆகியவற்றில் நமக்கிருக்கும் கவனமும், அவர்கள் முன்னுக்கு வர வேண்டிய விஷயத்தில் நமக்கிருக்கும் அக்கறையும். மொத்தத்தில் அவ்வர்களனைவருடையவும் க்ஷேமார்த்தமாக நமக்கிருக்கும் சிரத்தையும், சிறிதேனுங் குன்றாமல், பழையபடி மேற்படி ராணியவர்கள் காலத்திலிருந்தாற்போலவே யினியு மிருக்குமென்பதை யறியவேண்டுவதாம். இவைகளே நமது ராச்சிய பரிபாலனக் கிரமத்திற்கு முதன்மையாயுள்ள லக்ஷியங்களாம். சர்வேசுவரனது அருளை நம்பி இவைகள மூலமாகத்தான் நமது இந்திய மகா மண்டலத்திய க்ஷேமம மேலுமேலும் வர்த்திக்குமென்றும், அவ்விராஷ்டிரப் பிரஜைகள மேலுமேலுந் தழைத்தோங்கிப் பெருகுவார்களென்றும் (நமக்குப பூரண நம்பிக்கை.)

## 2. வரதக்ஷிணையும், அதைத் தொலைக்கவுபாயமும்

ஸ்ரீமதி மீனாக்ஷியம்மாள்.

நமதுலகின்கண்ணுள்ள மானிடப பிறவிகளனைத்துள் ஜாதி பலவகைப்பட்டிருப்பதுண்மையே. ஆயினும், ஆதியில் நான்முகன் விதித்தது, பிரம்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர், என நான்கு ஜாதிதானென்று மனுசாஸ்திரம கூறுகின்றது. தற்கால நிலைமையை நோக்குங்கால், மேற்கூறிய ஒவ்வொரு ஜாதியும் பற்பல வகுப்புகளாகப் பிரிவுபட்டிருப்பது யாவரு மறிந்த விஷயம். இப்பிரிவுகள் யாவற்றையும் இங்கு விஸ்தாரமாய்ப் பிரசுரிப்பது அசாத்தியமாதலின், முதல் வகுப்பாகிய பிராம்மணஜாதியைப்பற்றி மாத்திரம் சற்று விளக்குவோம். கலி தொடங்குமுன், பிரம்ம குலத்திற்குள் பலபிரிவுகளும், அதனுட் காணும் வேற்றுமைகளும், தூஷணைகளுமிருந்ததாகத் தெரியவில்லை. பகவதனுக்கிரகத்தால் இப்பூமண்டலத்தில் சில மகான்கள் அவதரித்து, ஸ்ரீமத்-சங்கராசாரிய சுவாமிகள் விசேஷமாய்ச் சிவமதத்தையும், ஸ்ரீமத்-ராமாநுஜாசாரியார் விஷ்ணு அமசத்தைப்பற்றியும், ஸ்ரீமத் - மத்துவாசாரியார் மத்துவமதத்தைப் பற்றியும், அவரவர்களுக்கேற்ற புத்தி கோசரததாலும், கல்விப் பயிற்சியினாலும், ஜனங்களின் தாரணசத்திக்குத் தக்கபடி, வித்தை, பக்தி, தருமம், ஞானம், முதலிய நற்கொள்கைகளை உலகத்தில் போதித்ததாகத் தெரிகிறது. ஏற்கெனவே ஜனங்களின் மனது மதசம்பந்தமாய் வேறுபாடடைந்திருந்ததின் காரணம் பற்றி ஒரேமாதிரியாக உபதேசிக்காது, அவரவர் மனதிற்கிசைந்தவாறு சிவனையும், விஷ்ணுவையும், தனித்தனியாய்ச் சிலாகித்துப் பேசினதுண்மையே. ஆனால் "சிவன் வேறு" "விஷ்ணு வேறு" என்ற கொள்கையினாலும், மதபேதத்தையும், மனவேற்றுமையையும், ஜன

னகளுக் குண்டாகவேண்டுமென்று கருதியும் இவ்வாறு பேசியிருப்பார்களென்று நினைக்க இடமில்லை.

பரம்பொருள் "ஒன்று" தானென்பது அவர்களறியாத விஷயமல்ல. எந்தவிதமாயாவது, பகவானை யாராதித்து, எப்படியாகிலும், கடவுளிடம் ஜனங்களுக்கு விசேஷப் பற்றுண்டாக்கவேண்டுமென்ற கருத்து ஒன்றைக்கொண்டே அவர்கள் பேசியிருப்பார்கள். இக்காலத்திலேற்பட்டிருக்கும் நூற்றுக் கணக்கான ஜாதிப்பிரிவுகளுக்குக் காரணம் கலிமாகாத்மியமோ, அன்றி, நமக்கு, புத்தி, சக்தி முதலியன குறைவடைந்தது பற்றியோ, தெரியவில்லை. ஒரே வகுப்பினர்க்குள் விஷ்ணு மதம் சிவமதத்தைக் காட்டிலும் சிறந்ததென்றும், சிவமதம் விஷ்ணு மதத்திலும் பதின்மடங்கு சிரேஷ்டமென்றும், வீண்வாதம் செய்யவேண்டுவது அனாவசியம். இதிலும் பிராம்மணர்களுக்குள்ளாகவே பல பிரிவுகளையும், பிரிவுகளுக்குள் பிரிவுகளையுமேற்படுத்திக்கொண்டு வீணாக நாமவஸ்தைப்படுவதற் கவசியமே யில்லை.

பிராம்மணஜாதியார் என்ற ஒரு விஷயத்தை மாத்திரம் நாம் கவனிக்கவேண்டுவது முக்கியமே தவிர, "அவன் சோழதேசத்துக்காரன், நான் மேலதேசத்துக்காரன், அவன் விஷ்ணுமதத்தான், நான் சிவமதத்தான், அவன் பிரஹசரணம், நான் வடமன்," என்கிற இதுபோன்ற அற்ப வித்தியாசங்களைப் பாராட்டவேண்டியதில்லை. இவ்வித வித்தியாசங்களால் நேரும் கஷ்டங்களையும், அவைகளைத் தடுக்க வல்ல மார்க்கங்களையும் பற்றி நாமினிக் கவனிப்போம்.

இந்நாளில் நடந்தேறிவரும் நம்மவர் விவாகமுறையை யெடுத்துக்கொள்வோம். ஒரு பிரம்மகுலப் பெண்ணுக்கு விவாகம் செய்வதில் எவ்வித இடையூறுகளையெல்லாம் பரிகரிக்க வேண்டி வருகிறதென்பதையும், அது மனதிற்கிசைந்தவாறு முடிவுபெறுவது எவ்வளவு கஷ்டமென்பதையும் யாருமறிந்தேயிருக்கிறார்கள். இவைகளுக்கெல்லாம் காரணம் யாதென்றாராயுமிடத்து பிராம்மணர்களுக்குள்ளாகவே பல சிக்கல்கள் ஏற்பட்டு, ஒரு வகுப்பினர், மற்றொரு வகுப்பினருடன் விவாக சம்பந்தம் வைத்துக்கொள்ளக்கூடாத நிபந்தனையேதான். இவ்வித நிபந்தனை, சாஸ்திரத்தையொத்திருப்பதாகக் காணோம். முதலாவது, பிராம்மணஜாதி பலவகைப்பட்டிருப்பதாகவே சாஸ்திர ரீதியாய் நாமறியாமலிருக்குங்கால், ஓரினத்தார் மற்றோரினத்தாருடன் "கொண்டு கொடுத்தல்" கூடாதென ஏற்பாடு செய்துகொள்ளக் காரணமில்லை. பாஷை வித்தியாசப்படுகிற ஒருவருக்கொருவர் சம்பந்தம் தக்கதல்லவென்ற நிபந்தனையை வேண்டுமானால் நாமொருவாறு அங்கீகரித்துக் கொள்ளலாம்.

பாஷை ஒன்றாயிருக்கும் ஒருவருக்கொருவர் விஷயத்திலோ இவ்வாறு விவாக ஒற்றுமையில்லாமலிருப்பது மிக்கபரிதாபம். தமிழ்ப் பாஷையைப் பேசிவரும் பிராம்மணர்களுக்குள், வடமன், பிரஹசரணம், அஷ்டஸஹஸ்ரம், என்று பலவகுப்புகளிருக்கின்றன. இவரனைவர்க்கும் பாஷைமாத்திரம், ஒன்றல்லாது நடை, உடை, ஆசாரம், யாவுமொன்றுதான். ஆயினும், இவர்கள் ஒருவருக்கொருவர் கல்யாணம்செய்துகொள்ளக் கூடாதென்கிற நிபந்தனையினும் கொடுமை வேறுளதோ? உதாரணமாக, ஒரு வடமப்பெண்ணுக்குக் கல்யாணம் செய்ய வேண்டுமென்று வரன் தேடுங்கால், குணம், கல்வி, எழில், செல்வம், யாவும் பொருந்தியிருக்கிறதாவென்று பார்க்கும்போது, வடமப் பிள்ளையல்லாது பிரஹசரணப் பையனுக்கு மேற்சொன்ன லக்ஷணங்கள் யாவும் பொருந்தியிருப்பினும், அவ்விவாகத்தை நடத்தி முடிப்பதற்கு, வகுப்பு, வித்தியாசம் தடையாயிருக்கிறது. இவ்வித்தியாசம் பற்றியே வரதக்ஷிணையுமேற்பட்டுவிட்டது. நல்ல மணமகனை அகப்படவேண்டுமெனில், தக்ஷிணையு மதிகமாய்ச் செலுத்தவேண்டிவரும். அதினும், எவ்வளவுக

கெவ்வளவு படிப்பும், பணமும், அதிகப்பட்டிருக்கிறதோ, அவ்வளவுக்கவ்வளவு வரதக்ஷிணையும் உயருகிறது. ஏதோ ஏழையென்ற காரணத்தைக் கொண்டு வாங்கிறர்களென்ற சமாதானங்கூடக் கிடையாது. பணக்காரர்கள்தான் வரதக்ஷிணைக்கு ஜாஸ்தியாய் ஆசைப்படுகிறார்கள். அருமையாய்ப்பெற்று, நாளொருமேனியும பொழுதொரு வண்ணமுமாய் வளர்த்து வந்த பெண்ணைத் தானம் செய்வது போதாது. தக்ஷிணையும் கொடுக்கவேண்டி வருகிறது.

வரதக்ஷிணைக்குச் சில ரேட்டுகளு மேற்பட்டிருக்கிறதுபோலும. மெட்ரிகுலேஷன் பாஸ் பண்ணினவனுக்குச் சுமார் ரூ. 1000 முதல், ரூ. 2000 வரையிலும், எப்.ஏ. தேறினவனுக்கு ரூ. 2000 முதல் ரூ. 4000 வரையிலுபரும். பி. ஏ. டிக்ரீ பெற்றவனுக்கு ஐந்தாறு பைகள் சாமான்னியமாய்க் கிடைக்கலாம். வக்கீல் பரீட்சை கொடுத்தவர்களுக்கோ வென்றால், பத்திலொரு லக்ஷமும கொடுக்கவேண்டி வரும். கேரள தேசத்தில், கேவலம் பரிசாரகத் தொழில் செய்பவன்கூடச் சாதாரணமாய் ரூ. 300, ரூ. 400 சம்பாதித்து விடுகிறான். இந்தலக்ஷணத்தில் பெண் ஏழைவீட்டில் பிறந்ததாயும், அழகில்லாமலுமிருந்துவிட்டால், மேற்குறித்த ரேட்டுகளை இன்னும் உயர்த்தவேண்டி நேரிடும். ஒருக்கால், பிள்ளை பரீட்சையொன்றும தேறாமல், ஏழையாயுமிருப்பின், ரேட்டுகள் ஒருவாறு குறையும். ஒருவன் ஏழையாயுமிருந்து அவனுக்கு நாலைந்து பெண்ணும் பிறந்துவிட்டால், அவன் உயிருடன் செத்தபிணம் போலாய்விடுகிறான். இவ்வரதக்ஷிணை நிமித்தியமாய், ஸ்திரீக்குத் தான் கர்ப்பமானதாகத் தெரிந்தவுடன், எங்கே பெண்ணைப் பிறந்துவிடுமோ வென்று ஏக்கம் உண்டாய்விடுகிறது. அது வாஸ்தவத்தில் பெண்ணைப் பிறந்துவிட்டாலோ, யாதாவானவள் பிரஸவவேதனையிலும் அதிகமாய்ப் பெண்பிறந்ததைக்குறித்து வருத்தப்படுகிறாள். பிறந்தாலும், இறந்துபோகாதாவென்றுகூட நினைக்க இடம்தரும்போலிருக்கிறது. அது அகஸ்மாததாய் இறந்துவிடின், அதிகமாய்த் துக்கப்படமாட்டார்கள்போலும். என்னசெய்யலாம், இவ்வரதக்ஷிணையின் மகத்துவம் இப்படியிருக்கிறது. நாலைந்து பெண்ணையுடைய எளியவனுக்குப் பெண்கள் பிறந்த தினம முதலே வரதக்ஷிணைக்குப் பணம்சேர்க்கவேண்டுமென்றும, கவலை ஏற்படுகிறது. அப்பெண்களுக்குக் கல்யாண வயது வர, வர, முன்னிலும் அதிக சோகமுறுகிறான். தன் வயிற்றிற்கும் குழந்தைகளுக்கும் சரியானபடி போஷித்துக்கொண்டு வர முடிவதில்லை. வரதக்ஷிணைக்குப் பணம் சேர்ப்பதிலேயே கண்ணாயிருக்கிறான். இவ்வாறு கஷ்டப்பட்டுப் பணம் சேர்த்து, அதுவும் போதாமல, கொஞ்ச நஞ்சம் கிடைத்த வீடு, காணி, முதலியதை விற்றும், கடைசியாய்ப் பெரும் கடன் காரனாகவுமாகிறான்.

நம்மவர் விவாகச்செலவைப்பற்றியோ ஒன்றும் சொல்லவேவேண்டாம். ஏதோசாஸ்திரோக்தமாய் எவ்வளவு செய்யவேண்டுமோ அத்துடன் நிற்கிறதில்லை. அவசியமற்ற, விவரமில்லா விதங்களில் திரவியத்தை இறைக்கிறோம். லக்ஷப்பிரபுவல்லாத ஏதோ மரியாதையாய்க் காலக்ஷேபம செய்துகொண்டு வரும நம்மவர்கள் இம்மாதிரி வரதக்ஷிணையும் கொடுத்து, ஆடம்பரச் செலவுகளையும் செய்யவல்லவர்களா? பிராம்மணர்கள் பாபராவதற்கு இதுவும் ஒரு முக்கிய காரணமென்பதைத் தாராளமாய்ச்

சொல்லலாம். தவிர, வரதக்ஷிணை உபத்திரவத்தால், கல்யாணப் பெண்ணுக்கும் பிள்ளைக்கும், பரஸ்பரம் சம்மதமாவென்றுகூடக் கவனிப்பதற்கு முடியாமல் போகிறது. எப்படியெனில், ஒருபெண்ணிற்கு ஒரு குறித்த பிள்ளையைத்தான் விவாகம் செய்துகொள்ளவேண்டுமென்றெண்ண மிருப்பதாகப் பெற்றோருக்குத் தெரிந்திருந்தாலும், அந்தபிள்ளைக்கு வரதக்ஷிணை ஜாஸ்தியாய்க் கொடுக்கவேண்டிவரின், தக்ஷிணைகொஞ்சம் குறைவுபட்ட வேறொரு பிள்ளையை விவாகம் செய்துகொள்ள அம்மகவிற்குச் சம்மதமில்லாவிடினும், அவனையே தேடிக்கொடுக்க வேண்டியாகிறது. கல்யாணத்தில் முக்கியமாய்ப் பெண், பிள்ளைகளிருவருக்கும் மனம் பொருந்தி யிருக்கிறதாவென்பதைக் கவனிப்பதவசியம். மாதா பிதாக்கள பெண் பிள்ளைகளை நல்ல இடத்தில் சேக்கவேண்டிய கருத்தையுடையவர்களா யிருந்தபோதிலும், பெண் பிள்ளைகளிருவருடையவும் இஷ்டத்தையும் தெரிநது செய்வதேயுசிதம்.

பெண்ணின் கதி யிவ்வாறிருக்கக், கிஞ்சித்துப்பிள்ளை விஷயத்தையுங் கவனிப்போம். குணம், கல்வி, பொறுமை, வனப்பு,முதலியசர்வபாக்கியத்தையும் வகித்த ஓரேழைப்பெண் ஒருவனுக்குச் சாமான்னியமாய்க் கிட்டுவதாயினும் வரதக்ஷிணை யில்லாதேபோனல், அப்பெண்ணை மணந்துகொள்ள அவனுக்கு மனம் வருகிறதில்லை. அப்படியல்லாது, வஞ்சனை, பொறாமை, லோபம், அரூபம், இத்தியாதி லட்சணங்களையுடையதாயும், வித்தையில மாரைப்பிளப்பினும், மருந்துக்கும் ஓரெழுத்து மகப்படாததாயுமுள்ள ஒரு பெண் நிரம்ப வரதக்ஷிணை, சீர்செனுத்தி, முதலானதுகளுடன், கிட்டுவதாயின் அப்பெண்ணையே வேறு காரியங்களை விசாரியாமல் மணக்கிறான்.

" பணமென்றால் பிணமும் வாயைத்திறக்கும் " என்றபடி இது, நியாயமோ, அநியாயமோ, மனதிற்கேற்றதோ, அல்லவோ, உலகம் மெச்சுமோ, பரிகசிக்குமோ, என்கிற ஒன்றையும் பாராட்டாது, காசிலேயே கண்ணாய்த் தன் மனச்சாக்ஷிக்கு விரோதமாய்ச் செய்யத் தலைப்படுவதற்கு வரதக்ஷிணையையன்றி, வேறெதைக் காரணமாகக் கூறலாம். நாம் ரௌரவாதி நரகத்திற்காளாவதற்கு இதனினும் கொடிய பாவம் வேறு செய்யவேண்டுவதில்லையல்லவா ?

ஜாதியில் உல பிரிவுகளின் காரணமபற்றி உற்பவித்த வரதக்ஷிணையினுலுண்டாகும் தீமைகள் மேற்சொன்னவை மாத்திரமல்லாமல் இன்னும பல விருக்கின்றன. முக்கியமானவை அதிபாலிகா விவாகம, பாலியவிதவை ஆகிய இவைகள். எப்படியெனில், பெண் பெரியதாய்விடின், விவாகம் செய்யவேண்டிய அவசரம வருகிறது. பிள்ளைகளும் தக்கவயதையடைந்து பரீக்ஷைகளும தேறி யிருந்தால் அவசர நிமித்தியமாய் வரதக்ஷிணை எங்கு அதிகமாய் விடுமோ என்று பயந்து, குழந்தையாகவிருக்கும்பொழுதே விவாகத்தைச் செய்ய மனம் தூண்டுகிறது. சில சந்தர்ப்பங்களில், ஐந்து அல்லது ஆறு வயது முடிவதற்கு முன்னதாகவே பெண்களுக்கு விவாகம் நடந்திருப்பதைக் கேட்டும், பார்த்து மிருக்கிறோம். இதனல் என்ன கெடுதி என்ற கேள்வி பிறக்கலாம்

அதாவது, பெண்ணிற்கு உலகமே இன்னதென்று தெரியாமலும், இந்தப் புருஷனை மணந்து கொள்வதில் தனக்கு வாழ்நாளில் சுகமோ, கஷ்டமோ என்று பகுத்தறியச் சக்தியற்றிருப்பது ஒன்று. இரண்டாவது, விசேஷமாய் நம்மவர்களில் சென்ற சில வருஷங்களாகப் பாலிய விவாகம் மேன்மேலும அதிகரித்து வருவதாலன்றோ பாலிய விதவைகளும் ஜாஸ்தியாவதற்குக் காரணமாகிறது.

யோசித்துப் பாருங்கள். பதின் மூன்று வயதில் ஒருபெண் மாங்கல்யத்தை இழக்கவேண்டிய தலைவிதி இருப்பின், அவளுக்குச் சொற்ப காலத்திற்குமுன் விவாகமாயிருந்தால், இக்கஷ்டம பெரும்பான்மை குறைவுபடும். அப்படியல்லாது, இதேபெண்ணிற்கு ஐந்து அல்லது, ஆறுவயதில் கல்லியாணமாயிருந்தால், நடுவிலுள்ள ஏழெட்டு வருஷகாலம் இதைக்குறித்து வருத்தப்படவேண்டியிருந்திருக்கும்.

நன்றுயோசிக்குமிடத்து நாமிவ்விதக் கஷ்டங்களையெல்லா மனுபவிக்கக் காரணம் வரதக்ஷிணையென்பதே யென் சிற்றறிவிற்குப் புலப்படுகிறது. வரதக்ஷிணைக்கு மூலாதாரம சாஸ்திரத்திலில்லாக ஜாதிப்பிரிவுகள்தானென ஒருவாறு மேலே கூறப்பட்டிருக்கிறது. போனதுபோகட்டும, இனியாகிலும், நாமும், நமக்குப்பின் னுற்பவிக்கும், பாலர்கள் பாலிகைகளும், இக கொடுமைகளுக காளாகாமல் நீடூழிகாலம் சகல சாமபிராச்சியத்துடன் தங்கள் மக்கள் சுற்றததோர் சகிதமாய் வாழ்ந்துகொண்டிருக்க மார்க்கங்களைத் தேடவேணுமாய் நம் கற்றறிந்த பெரியோர்களை மிக்க பக்தி, சிரத்தையுடன் பிரார்த்தித்துக்கொள்ளுகிறோம்.

---

பலத்தவர்

பலத்தவர் யாரென்று அனேகர் கேட்பதுண்டு. பனைத்துண்டுபோன்ற கைகால்களை யுடையவரென்று பதில்சொல்லுவது சுலபம் ஆனல் அது சரியான பதில் அல்ல.

ஸ்தாவர வர்க்கங்களாகிய செடி கொடிகளையும், பசு பக்ஷி மிருகாதிகளையும் நன்றாகக் கவனித்துவரும் நவீன பண்டிதர்கள, அவற்றிலெல்லாம் குடும்பதருமமும, ஜாதிதருமமும வெகுநன்றாய் முற்றியிருக்கின்றதென்றும், பலததவை, பலங்குறைந்தவைகளுக்குச் சகாயஞ்செய்வது வெகு சாமான்னியமெனறுஞ் சொலலுகிறார்கள். இப்படியிருப்பது வாஸ்தவமானல், பகுத்தறிவுகூடி விளங்குகிற மனிதஜாதியில் பரஸ்பரமிருக்கவேண்டிய தருமம் நாம் சொல்லாமலே யேறபடுகிறது.

3. ஸ்ரீ விசுவாமித்திர மகாரிஷி

எடிட்டர்

(முதற்பாகம்)

சரித்திரமுறைக்கும், புராணமுறைக்கும் ஒரு பெரிய பேதமுண்டு. புராணங்களுக்குக் கர்த்தாவா யிருப்பவர், வியாசபகவான்போல முக்காலமுந் தெரிந்தவராதலால், ஏதாவது ஒரு விஷயத்தை யெடுத்தால், ஆதியோடந்தமாகச் சொல்லி முடிப்பது வழக்கம். நளசரித்திரத்தையாவது, பாண்டவர் சரித்திரத்தையாவது சொல்லவேண்டுமானல், சந்திரனுக்குப் புதன் பிறந்தானென்று ஆரம்பித்துக் கடைசியில சொர்க்காரோகண பருவமவரை கதை சொலலி நிறுத்தலாம்.

சரித்திரமோ, இம்மாதிரி யாரம்பத்திற்கு இடங்கொடுப்பதில்லை. இமமகா புருஷன் இன்னவிடத்திற் பிறந்தானென்றால், அது உமக்கெப்படித் தெரிந்ததென்று கேட்கிறார்கள. அதற்குப் பிரமாணம் சொல்லவேண்டும். ஆதாரம தெரியவேணடும். இப்படியே ஒரு தேசத்திய சரித்திரத்திற்கும்.

ஒவ்வொரு தேசத்திலும், ஒவ்வொரு ஜாதியாரிலும், நாகரீகமதிகரித்து, எழுத்து வாசனை பிரபலித்து வந்தபிறகுதான் சரித்திரத்திற்குதவுமபடியான ரிகார்டுகள் அமைகின்றன. அதற்கு முந்தியகாலத்திற்குக் கர்ணபரம்பரையாக வரும் பாட்டுகள, வேதங்கள், கோயில்கள், கோபுரங்கள் முதலியனவே சாக்ஷியமாக வேண்டிவருகின்றன. இப்படியே இந்தியாவிலும்.

ஆகலால இந்துதேச சரித்திர மாரம்பிப்பதென்றால்,இம்மாதிரி சாக்ஷியமெங்கே யாரம்பமாகிறதோ, அதன் முதலுள்ளதைத் தான் சொல்லி வருவது சாத்தியம். சிருஷ்டி காலந்தொடங்கி யெழுதுவது அசாத்தியம். ஒரு சிறு கதை இதை நன்கு விளக்கும்.

ஐந்து அல்லது ஆறு வயதுக் குழந்தை பெ



ஸ்ரீ விசுவாமித்திர மகாரிஷியும், தசரத மகாராஜாவும்

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY,
TIRUVANMIYUR :: MADRAS-41

ன்றைக் குறும்புக்காக வொருவர், "உன் தாயாரிடம் போய், இப்போது உனக்குத் தங்கையாகப் பிறந்திருக்கும் குழந்தை யெங்கிருந்து வந்ததென்று கேட்டுவா," என்றார். அவன் அப்படியே போய்க் கேட்டதற்கு அவன் தாயார், "அந்தக் குழந்தையை மருத்துவத்திற்கு வந்திருந்த பாட்டியம்மாள் செய்துகொண்டு வந்தாள்," என்று பதில் சொல்ல, அவனும் அந்தப் பதிலை யொப்புவித்தான். பிறகு இரண்டொரு நாள் கழிந்தபின், இவன் தன்னையே வியவரை யிருந்தாற்போலிருந்து, "அந்தப் பாட்டியம்மாளை யார் செய்துவைத்தது?" என்று கேட்க, அவர் ஆச்சரியப்பட்டு "அந்தப் பாட்டியம்மாளை, வேறொருபாட்டியம்மாள் செய்து வைத்தாள்," என்றார். "அப்படியானால், முதன் முதலிருந்த பாட்டியம்மாளை யார் செய்து வைத்தது?" என்னவே யதற்குப் பதில் சொல்லமுடியாமல், "அதுதானப்பா, உலகத்தில் எங்கும் வழக்கிலிருக்கிறது," என்றாராம்.

ஆதலால் சரித்திர முறைப்படி "முதன் முதலிருந்த பாட்டியம்மாளை யார் செய்வித்தது" என்பது தெரியக் கூடாதவிஷயம். இப்பொழுது இரண்டொரு தலைமுறையாக அனேகமாய் நமக்குள் நடந்தவிஷயங்களனைத்தும் தெரியும். பத்துத்தலைமுறைக்கு முன் நடந்தவைகள் அரைகுறையாய்த்தான் தெரியும். அப்படியே மேலே செலலச்செலலக் குறைந்து போய்க் கடைசியில் ஒரு தலைமுறைக்கப்புறம் ஒன்றுந் தெரியாதென்னும்படி வந்துவிடுவது சாதாரணம்.

இந்தியாவில் ஆரியர் என்று பெயர்கொள்ளுமனைவர்க்கும், வேதமே மதமுதலிய முக்கிய விஷயங்களுக்கெல்லாம் பிரமாணமாகிவருவது. ஆதலால அது நமக்குள் எக்காலத்தில் பிரபலமாகி வந்ததோ, அதுமுதல்தான் நமது மூத்தோர்களைபபற்றிய சங்கதி யேதாகிலும் தெரியுமென்னலாம். இந்தக்காலம் இத்தனையாயிரம் வருஷங்களுக்கு முற்பட்டதென்று நிஷ்கரிஷையாய்ச்சொல்ல இப்பொழுது நமக்குத் தெரியாது. ஆதலால் பழைய சம்பிரதாயப்படிப் பேசிவருகிற வைதிகர்கள், வேதம் அனாதி, என்றால், ஆரம்பங்காணாதது, என்கிறார்கள். புதுச்சம்பிரதாயப்படி பேசுபவர்கள், ஏதோ தங்களுக்குக் கிடைத்திருக்கும சாக்ஷியங்களைக்கொண்டு, சிலர் 10,000 வருஷங்களுககு முறபட்டதென்றும், சிலர் 6,000 வருஷங்களுக்கு முற்பட்டதென்றும், மற்றுஞ் சிலர் 3,000 வருஷங்களுக்கு முற்பட்டதென்றும் எல்லை குறித்துப் பேசுகிறாகள்.

காலவிஷயத்தில் நமக்கு நிச்சயம் ஒன்றும் ஏற்படாவிட்டாலும், தேசவிஷயம் நிச்சயமாயிருப்பதில் ஆக்ஷேபமில்லை. வேதங்கள் முதன் முதல் ஸ்வரபூர்வகமாய்க் கோஷித்தது யமுனைக்கும் சிந்துவுக்கும மத்தியிலுள்ள பிரதேசங்களில் தானென்பது நிச்சயம், ஆனால் அதற்குச்சாக்ஷியம் இப்போது எடுத்துக் காட்டுவது சாத்தியமன்று.

வேதங்கள் ருக்கு, சாமம், யஜுஸ், என்று மூன்றுவகை சாமான்னியமாகவும அதர்வணம் ஒன்றைக் கூட்டி நான்கென்றும், மகாபாரதம் ஒன்றையுஞ்சேர்க்க ஐந்தென்றும், இவ்வாறுபல விதமாகச் சொல்லிக்கொண்டாலும் அவைகளில முதன் மூன்றையும் நன்றாகப் பரீக்ஷித்தறிந்த நவீனவித்துவான்கள, அவைகளெல்லாம் 'ருக்கு' என்னும் ஒரு வேதத்தின் திரிபுகளென்றும், வாக்கியங்களெல்லாம் அனேகமாய் அதேவாக்கியங்களென்றும சொல்லுகிறார்கள். ஆதலால் 'ருக்கு' வேதம் மற்றையவைகளைவிடச் சிரேஷ்டமாகக் கொள்ளப்படுகிறது.

இந்த வேதம பத்து மண்டலங்களாகப் பிரிந்திருக்கிறது. ஒவவொன்றும ஒவ்வொரு ரிஷியைப் பிராதான்னியமாகக் கொண்டிருப்பதால், அதற்கு அந்த ரிஷியும் அவர் வம்சஸ்தரும் கர்த்தாககளென்று நாம் ஊகிக்கிறோம. இவர்களிலெலலாம் இரண்டு மகாரிஷிகள் தாம் பிற்

பட்டகாலத்தில் பிரபலமாகிப் புராணம், இதிகாசம் முதலியவற்றில் பலகதைகளுக்கு ஆதாரமாகி யிருப்பவர்கள். அவர்கள் பெயர் முறையே வசிஷ்டர், விசுவாமித்திரர், என்பவைகளேயாம்.

அனேகமாய் இவ்விரண்டு பெயர்களும் இந்தியர்களெல்லோருக்கும் தெரியும். இவர்களிருவரும் ஏதோ காரணம்பற்றி வாதி பிரதிவாதிகளாகி விட்டதாகவும், சுவர்க்கலோகத்தில் இவர்களுடைய தர்க்கத்தினால இப்பூலோகத்தில் பலவித அனர்த்தங்களுக்கு இடமுண்டானதாகவும் நம்மில் அனேகர் இன்னும் நம்பியிருக்கிறார்கள். இவ்விஷயமாய் இரண்டுமூன்று முக்கியக்கதைகளை மட்டும் சுருங்க வுரைபபோம்.

அனேகமாகத் திராவிட ஜனங்களுக்குள் வெகு பிரபலமாகியிருபபது அரிச்சந்திரனும, அவர் மனைவியாகிய சந்திரமதியும. இவ்வரசன் சூரிய வம்சத்திலுதித்து, வாக்குத்தவறாமலிருந்ததற்காக, குலகுருவாகிய வசிஷ்டர் பெருமை பேசிக்கொண்டதும், அதுகாரணம்பற்றி விசுவாமித்திரர் அவரைப் பரீக்ஷித்து, நாடுநகரங்களைப் பிடுங்கிக்கொண்டு, அவரையும் பெண்டு பிள்ளையையும் அடிமையாக்கிப் பிறகு பிள்ளையையும கொன்று, பலவிதமாக இம்சித்தும், அவ்வரசன் மனங்களராமல்,

"பதியிழந்தனம் பாலனை யிழந்தனம் படைத்த
நிதியிழந்தன மினிஎமக் குளதென நினைக்கும்
கதியிழக்கினுங் கட்டுரை யிழக்கிலே மென்றார்
மதியிழந்ததன் வாயிழந் தருந்தவன் மறைந்தான்,"

என்று முடியும் இக்கதையைக் கேட்டு மனமுருகாத ஆணும் பெண்ணும் இல்லையென்றே சொல்லிவிடலாம்.

இரண்டாவது, விசுவாமித்திரர் ராஜரிஷியாகவிருந்து பிரும்மரிஷியான கதை. இது முக்கியமாக ராமாயணத்திலும், பாரதத்திலும் காணுவது விசுவாமித்திரன் சந்திரவம்ச ராஜாவென்றோ, வெறெந்த வம்சமென்றோ தகரார் இருந்தாலும், க்ஷத்திரியனென்பதில் யாரும் சந்தேகப்படுவதில்லை. அப்படி ராஜவம்சத்தில் பிறந்து பூமியாண்டு வருகையில், வசிஷ்ட மகாரிஷியாசிரமத்திற்குப் போக நேர்ந்ததாகவும், அவர் இவருக்கு விருந்து செய்ததாகவும், அந்த விருந்து சம்பிரமத்தைப் பார்த்து அதிசயித்து அதற்குக் காரணமாகக் கண்ட காமதேனுவை வேண்டியதாகவும், வசிஷ்டர் கொடுக்கமாட்டேனென்றதற்கு, பலவத்காரமாக அத்தேனுவைப் பிடிகக முயன்றதாகவும, அது சாதியாமற்போகவே, தபோபலம் அதிகரித்துத் தானும் வசிஷ்டருக்குச் சமதையாவேனென்று சபதங்கூறிபபோய் வெகு கோரமாகத் தபசு செய்து கடைசியில்காரிய சித்தியடைந்ததாகவும் கதை.

மூன்றுவது, இப்படிக் கடைசியாய்ச் சொல்லிய தபோமகிமையினாலுண்டாகிய கதைகள். ஒருமுறை அவர் தபசுசெய்து கொண்டிருக்கையில், அம்பரீஷ மகாராஜா 'நரமேதம்' என்னும மனுஷியயாகம் செய்ய ஆரம்பித்து அதற்கு ஓர் பிராமணப் பிள்ளையைக் கிரயத்துக்கு வாங்கிப்போக, அவன் மகாரிஷியைக்கூவி யென்னைக் காப்பாற்றவேண்டுமெனக் கெஞ்ச, அவரும் அப்படியே செய்தார். மற்றொருமுறை இவருடைய தபோ பலத்தினாலுண்டான உக்கிரத்தைச் சகிக்கமாட்டாமல், அதைக் கெடுப்பதற்காக இந்திரன் ரம்பையையோ, மேனகையையோ, அல்லது இவர் போன்ற வேறியாரையோ ஏவித் தபசைக்கலைத்து விட்டான். இப்படி வேண்டாமல் வந்த சம்பந்தத்தினால, சகுந்தலை முதலிய பெண்மணிகளுண்டாகிப் பின்னிட்டு வந்த பெருங் கதைகளுக்கு நாயகிகளானார்கள்.

பிரும்ம ரிஷியான பின்னிட்டோ, அதற்கு முந்தியோ, இக்ஷ்வாகு வம்சத்திய அரசனை திரிசங்கு வென்பவருக்குத் தேகாபிமானம் அதிகமாகிச் சுவர்க்கத்திற்கும் இவ்வுடலுடன் போகவேண்டித் தமது குருவாகிய வசிஷ்டரையோ அவர் குமாரரையோ கேட்க, அவர் மாட்டேனென்று விடவும், விசுவாமித்திரர்,

நான் செய்விக்கிறேனென்று, மந்திரபலத்தால் திரிசங்குவைச் சுவர்க்கலோக மனுப்பியதாக வும், அவ்விடத்திலுள்ளவர்கள், ரயில்வண்டி யில் கூட்டமா யிருக்கும்பொழுது ஏறப்போ கிறவர்களை உள்ளிருப்பவர்கள் வெட்டுவது போல வெளியே கெட்டித் தள்ளியதாகவும், அவ்வரசனும் முனிவரனைக் கூவிப் புலம்ப, அதற்காக அவரும் கோபாவேசத்தினால் அவ் வரசனை யவ்விடமே அந்தரிக்ஷத்தில் நிறுத்தி, பிரம்ம சிருஷ்டிக்குப் பதிலாக சூரியமண்டல முதலியவற்றைச் சிருஷ்டிக்க வாரம்பம்செய்த தாகவும், பிறகு தேவர்கள் வேண்டுகோளின் படி நிறுத்திவிட்டதாகவும், அப்படிச் சிருஷ்டி த்ததற்குச் சாக்ஷியமாகத் தருப்பைப்புல்லில் ஒருதினுசுக்கு, நாளதுவரை "விசுவாமித்திரம" என்று பெயர் வழங்குவதாகவும் கதை.

முக்கியமாய் வழங்குவன இவ்விரண்டு மூன்று கதைகள் தான். ஆனால் இவைகளைச் சாமான் னியமாய் நாம் கேட்குமுறைக்கு, விசுவாமித் திரருக்காகிலும், வசிஷ்டருக்காகிலும் பெரு மை தருவதாகக் காணோம். ஆதலால் ருக்கு வேதத்தில் அனேக முக்கிய மந்திரங்களுக்குக் கர்த்தர்களாகிய இமமகரிஷிகளுக்குள் விரோத மெப்படியுண்டாயிற்று, என்பதையும், இக் கதைகளுக்கு ஏதாகிலும் காரணமுண்டாவெ ன்பதையும், நாம் விசாரித்து, விசுவாமித்திர ருக்குள்ள மரியாதையைச் சமர்ப்பிப்பது நம க்கு முக்கிய தர்மம். அதை நவீனபண்டிதர் களொருவாறு செய்திருப்பதால் அவ்விஷயத் தைமட்டும் அடுத்த முறை சுருக்கிச்சொல்லி விடுகிறோம். (இன்னும் வரும்)

---

### பரிஹாஸப் பேச்சுகள்

அடே, அடபயலே, தொந்திசுப்பா என்று இப்ப டிப் பேரிட்டு அழைப்பதையும் பரிஹாஸங்களையும் நாம் முற்றிலும் விட்டுவிடவேண்டும்; இவைகளை ஒரு கெட்ட சங்கத்தில் நாம் பழக்கிக்கொண்டு மற் றொரு நற்சகசத்தில உபயோகிப்போமானால், அது நமது யோக்கியதையையே நன்றாய் வெளிப்படுத்தி விடும்.

## 4. விஜயதசமி

ல. அனந்தய்யர்

பராசக்தி என்னும் தேவி கொலுவிருக்கும் நவராத்திரியின் கடைசிதினமாம் இந்த விஜய தசமி என்பது. 'நவராத்திரி' என்றால் ஒன் பது இரவுகள் என்று அர்த்தம். தேவியின் உபாஸனைக்கும் பூஜைக்கும் ராக்காலங்களே விசேஷமாகும். ஆதலின் மேற்சொல்லிய ஒன்பது தினங்களுக்கும் நவராத்திரி என வும், நவராத்திரி உற்சவம், எனவும் பெயர் வந்தது. பராசக்தியின் மூன்று ஸ்வரூபங்க ளான துர்க்கை, லக்ஷ்மி, ஸரஸ்வதி ஆகிய இம்மூன்று சக்திகளுக்கும், சக்தியொன்றுக்கு மும்மூன்று நாள்வீதம், ஒன்பது நாள் பூஜை செய்து பத்தாந் தினத்தில் தேவியின் ஸ்தூல ரூபத்தைப் பூஜிப்பது இப்போது வழக்கமா யிருந்து வருகிறது. சக்தி விசேஷத்தை ஆரா யப் புகுந்தால் அது அபாரமாய் வளரும். ஆயி னும் 'சக்தி' என்பதற்குத் 'தேவி' என்று அர்த்தங்கொண்டு, அந்தத் தேவியின்(சக்தியின்) சகாயத்தை ஒன்றுக்கில்லாவிடில் மற்றொன் றுக்கு நாம விரும்புவதனாலேயும், நமக்கு ஏதே னும் ஒருகாரியம் நிறைவேறவேண்டுமாயின், அதை நிறைவேற்றச் 'சக்தி' யில்லையென்று நாம் முறையிடுவதினாலேயும், அந்த 'சக்தி' என்னும் பதத்திற்கு ஏதோ ஒருவிதமான தெய்வத்தன்மை இருக்க வேண்டுமென்பது இனிது புலப்படுகின்றது. ஒன்றை ஸாதி க்கவேண்டுமானால் தேவியின் (சக்தியின்) ஸகாயத்தை நாடுகின்றோம்; தேவியின் தயவைத் தேடுகின்றோம்; தேவியைநாடித் தொழுகின்றோம். தேவியின் பாத கமல ங்களிற் பணிந்து பிரார்த்திக்கின்றோம். ஆதலால் தேவி என்கிற 'சக்தி'க்கு வல்லமை, வீரம், திறமை, ஊக்கம் என்று ஸாமான்னிய மாய்ப் பொருள் கூறினும் பொருந்தும என் பதற்கு ஆக்ஷேபணையில்லை, இவ்விதமாக இயற்

கையாய் அமைந்திருக்கும் தேவியை (சக்தியைப்) பூஜிப்பது அவசியமென்று நம்முன்னோர் ஏற்படுத்தியிருப்பது மிகவும் மேன்மைகொண்டதாகும். பத்துநாள் உற்சவமாகிய நவராத்திரியின் பத்தாம நாளன்று ஸரஸ்வதி தேவியைப் பூஜிக்கின்றோம். நாமகள் ஜன்மதினமென்று சொல்லப்படுகின்ற மூலம் என்னும நக்ஷத்திரத்தில் ஸரஸ்வதியை ஆவாஹனஞ்செய்து சிரவண நக்ஷத்திரத்தில் பூர்த்தி செய்கின்றோம். இதன் அர்த்தம் என்ன? எந்த விஷயத்திற்காக ஸரஸ்வதியைத்தேடுகின்றோமோ அந்த விஷயமான வித்தையை அதன் மூலத்திலேயே (ஆரம்பத்திலேயே) அப்பியஸித்து, படிப்படியாய் வருஷாந்தவருமல் புதிய புதிய புஸ்தகங்களைப் படிக்க ஆரம்பிப்பதும, வருஷக்கடைசியில ஆரம்பித்த வித்தையில் தேர்ந்து, மறுவருஷத்தில் நவீனவித்தையைக் கற்க முன்வருவதும், ஆகிய இவ்விஷயங்களைக் கவனிக்கவே இப்பூஜையை நம் மூதாதைகள் ஏற்படுத்தியிருக்கின்றனர்போலும். இதன்றிச்சக்தியின் வல்லமையைத் துர்க்கை அல்லது காளி ரூபமாகவும பூஜிக்கின்றோம். வீரசூர பராக்கிரமங்களுக்குத் துர்க்காதேவி அறிகுறியானதன் காரணமாக துர்க்கைக்கு ஸ்தூல அறிகுறியாய் ஆயுதங்களைக்கொண்டு இவ்வுற்சவத்தின் கடைசி தினத்தைக் கொண்டாடுவார்கள். இந்த உற்சவத்தை வங்கதேசத்தவர் துர்க்க பூஜையென்று சொல்லுகிறார்கள். இதற்கே ஆயுத பூஜையென்றும் பெயர். இத்தினத்தில் ஜனங்கள் வெகு உற்சாகமாய்த் தம் தேகபலத்தைப் பிரகடிப்பதும், குஸ்திப்பந்தயங்களும, கஸரத்து விளையாட்டுகளும, வைப்பதும எங்கும் நிரம்பியிருக்கும். ஆகையால் கல்விக்கும் பலத்துக்கும் பக்திக்கும இன்றியமையாச் சாதனமான நவராத்திரி உற்சவத்தைச் சேர்ந்த விஜயதசமியைக்குறித்துச் சுருக்கமாய்க் குறிப்பிடுவோம்.

மதசம்பிரதாயப் பற்றுள்ளோர் இந்த தினத்தை எப்போதும் மறக்கமாட்டார்கள். இதை ஒரு சுபதினமெனக் கொண்டாடுவார்கள். ஆனால் நமது நாட்டில் பஞ்சாங்கங்களைக் கவனிப்பவர் பலர் ஏற்பட்டிருக்கின்றமையால், திதி வார யோக நக்ஷத்திரங்கள் மாறுபட்டுச் சிலர் விஜயதசமியை வெவ்வேறு தினங்களில் வருகிறதாகக் கூறுகின்றனர். அவர் எங்ஙனமேனும கூறிக்கொள்க. ஜனங்கள் கொண்டாடுந் தினம் வேறுபட்டாலும், தசமி திதியின் தினம் வேறுபடாதல்லவா? இத தினத்தை முன்னிட்டு, நம் வித்யாவிஹாரிணி பத்திரிகை தாண்டவமாடும் தமிழ் உலகத்தவர்க்கு உபயோகமாகும்படி அதனை நடத்த இதன் ஆதி கர்த்தர்கள் கங்கணங்கட்டிக் கொண்டிருப்பதனாலே முதன் முதல் விஜயதசமி என்னும் விசேஷ தினத்தின் மகிமையைக் குறித்துப் பேசுவது உசிதமாகுமென்று இதனையீண்டு எழுதத் துணிந்தனம்.

நவராத்திரி உற்சவத்தில் வரும் ஒவ்வொரு திதிக்கும் ஒவ்வொரு விசேஷமுண்டு. ஒவ்வொன்றையும் வைதிக தர்ப்பணத்தின் பிரகாரம் எடுத்து எழுதுவதென்றால முடியாது. இரண்டொரு விசேஷத்தைமட்டும இப்போது கவனிப்போம். சாதாரணமாய் நவராத்திரியில் வருபவைகளுள் அஷ்டமியைத் துர்க்காஷ்டமி என்றும், நவமியை மஹாநவமியென்றும், தசமியை விஜயதசமி யென்றும உலகத்தவா கூறுவதைக்காண்கிறோம. அனேகமாய்த் தென் இந்தியச் சிறுவர்கள் மஹா நவமியன்றுதான் மானம்பூவெனக் கொந்தளித்துப்பாட்டுப்பாடி அலைந்து திரிவார்கள். கஞ்சமலர்க்கண்ணனும், கார்முகில் எழுந்திடில் வண்ணனும் ஸாவலோக சரண்யனுமான ஸ்ரீ கிருஷ்ணபகவானும் நவராத்திரியில் அனுஷ்டிக்கப்படும் தேவி பூஜையைப் பற்றி வெகுவாய்ச் சொல்லியிருக்கிறாரென்று புராணதிக் கிரந்தங்களிலிருந்து தெரியவருகிறது. துரியோதனாதியரான கௌரவர்களுக்கும் பாண்டவர்க்கும் குருக்ஷே

த்திரத்தில் போர் நடப்பதற்கு முன்பாக அர்ச்சுனனது ரதத்தில் ஸாரத்தியம்செய்துகொண்டிருந்த பகவான் அர்ச்சுனனைப் பார்த்துத் துர்க்கா பூஜைசெய்யும்படி சொன்னார்; அதன்பேரில், அவனும் தேரிலிருந்து கீழிறங்கித் தேவியை (சக்தி) பூஜைசெய்து பிரார்த்தித்து அவ்வம்மனனுக்கிரக பலத்தினால் மஹாபாரதப் போரில் வெற்றியுங் கொண்டனன். இதன்றி, இத்தசமி தினக்கு விஜயதசமி என்று பெயர் வந்ததற்கு வேறொரு காரணமும் உண்டு.

துரியோதனனோடு சூதாடிச் சகலத்தையும் தோற்றுவிட்ட பாண்டவர்கள் பன்னிரண்டு வருஷகாலம் வனவாஸமிருந்து பின்னர் ஒரு வருஷம் அஞ்ஞாதவாஸம் இருக்கவேண்டி விராடநகரஞ் சேர்ந்தார்கள். அக்காலத்தில் துரியோதனன் ஊரூராய் உளவாளிகளை அனுப்பிப் பாண்டவர் இருக்குமிடத்தை அறிந்துவரும்படி சொன்னான். இதற்குள் விராட நகரத்தில் பாண்டவர் இருப்பதாய்த் துரியன் சூசனையாய்க் கேள்விப்பட்டு தன் படைவீரர்களை அந்நகரத்தின்மீது போர்க்கோலங்கொண்டு செல்லும்படி ஆக்கியாபித்தான். படையாட்கள், கடல்கரை புரண்டு பொங்கினதுபோலப் புறப்பட்டு வந்து விராடராஜனது பசுக்களைச் சிறைபிடித்துச் சென்றனர். அதுகாறும் அஞ்ஞாத வாஸத்தில் ஒளித்து வைத்திருந்த காண்டீபத்தை நபும்ஸகியாய்ப் பிருகந்நளை என்ற பெயரோடிருந்த அர்ச்சுனன் சமீ (வன்னி) விருக்ஷத்திலிருந்து நவராத்திரி கழிந்த பத்தாம் நாள் எடுத்து நாணேற்றி எதிரிகளின் படை கலங்கப் பாணப்பிரயோகஞ் செய்து விராடராஜனது பசுக்களை அவர்களிடமிருந்து மீட்டு வெற்றிகொண்டு திரும்பினான். இவ்வாறு அர்ச்சுனன் ஜயவீரங்கொண்டு திரும்பினான் என்பதைக் குறிப்பிடுவதற்கேயோ இந்த விஜயதசமிக் கொண்டாட்டம்? அல்லது 'வெற்றி' என்னும் பதத்திற்கு அர்த்தமுள்ள 'விஜயம்' என்று மறுபெயர் கொண்ட அர்ச்சுனனது பெயரை யொட்டி 'விஜயதசமி' என்று தெரிவிப்பதற்கோ? இதைவிட ஏற்றதும் பொருந்தியதுமான வேறு காரணப் பெயரைக்காணோம். இந்து அரசர்கள் அரசாண்டபோது போர்கொண்டு செல்வதற்கும், பட்டாபிஷேகஞ் செய்வதற்கும், அந்த விஜயதசமியைப் பிரதானமாய் அனுஷ்டித்ததை யொப்ப நாமும் காலக்கிரமத்தில் நம்மக்களுக்கு வித்தியாரம்பம் செய்வதற்கும் புதிதாய் சாஸ்திரப் பயிற்சி செய்வதற்கும் உரிய ஸாதனமாக இந்த விஜயதசமியைக் கொண்டாடுவது சான்றாகுமல்லவா? பின்னும் இந்த விஜயதசமியிற் சம்பந்தப்பட்ட சமீ விருக்ஷத்தின் பிரபாவம் அதிகமுண்டு.

'சமீ' என்பது 'ஞானம்' எனும் அக்கினிக்கு அறிகுறியானது. ஒவ்வொரு சிருஷ்டிவர்க்கத்திலும் ஞானாக்கினியை ஸ்தூலவுலகத்திற் குறிப்பிடுவதற்கு ஒவ்வொரு வஸ்துவுண்டு. அந்த மூலவர்க்கத்தில் சமீமரமே அந்த அடையாளமென்று புராணங்களிற்கூறப்பட்டிருக்கின்றது. ஸ்ரீ மகாவிஷ்ணு பத்மாவதியை மணந்த காலத்து வந்திருந்த விருந்தினர்கள் தம் தெய்வமாகிய மகா விஷ்ணுவுக்கு அர்ப்பிதஞ் செய்யாது தாம் புசியோம் என்றனர். விவாக காலத்தில் வதூவரர்கள் மாங்கல்யதாரணமாகுமுன் அன்னம் புசிக்கலாகாதென்று விதி ஏற்பட்டிருப்பதால், இவ்விடத்தில் ஸ்ரீ மஹாவிஷ்ணுவே மாப்பிள்ளை யானமைப்பற்றி அவர் தம் குலதேவதையான சமீமரத்திற்கு (வன்னிமரத்திற்கு)—வன்னி என்றால் நெருப்பு, அதை இவ்விடத்தில் ஞானநெருப்பென்று கொள்க—நிவேதனம்செய்து விட்டு நீங்கள் புசியுங்கள் என்றார். மஹா விஷ்ணுவே இம்மரத்தைத் தம் குலதேவதை என்றால் அதன் மகிமை இத்தன்மையதென்பது நாமகூறாமலே விளங்கும். அதர்வவேதத்தைச் சேர்ந்த கோபத ப்ராஹ்மணத்திலும், தைத்ய ப்ராஹ்மணம், தைத்ரீய ஆரண்யகம், பவிஷ்யபுராணம் ஆகிய இவைகளில் சமீபூஜைக்கு வேண்டிய விவரங்கள் தெளிவாய்க் கூறப்பட்டிருக்கின்றன. இப்படிப்பட்ட பெருமை மிகுந்துள்ள விஜயதசமியைச் செந்தமிழ் நாட்டு வியாபாரிகளும், தொழில் ஆரம்பிக்கக் கருதியுள்ள மற்றோரும் அறிந்து சுபகரமான இந்த தினத்திலேயே தாம் செய்யக் கருதிய காரியத்தை யெடுக்கமுயலுவாராக. இத்தினத்தில் ஆரம்பிக்கப்படும் காரியம் வெகு சிலாக்கியமாய் விளங்குவதோடு அதனால் வரக்கூடிய நற்பயன்களும் பலவுண்டு.

# கலைவகைக் காண்டம்

## 1. பாரதவருஷத்திய ஔஷதங்களும், ஔஷதச் சரக்குகளும்

'' எட்டிக்கோட்டை

ஓ இஷ்டர்களே நாம் சொல்லுவது உங்களுக்கு இரண்டொரு விஷயத்தில் கசப்பாயிருந்தாலு மிருக்கலாம். ஆனால் அதை யனுசரித்து நம்மில் யாராகிலும நடந்தாலோ, அது நம்மவர்களுக்கு ஆரோக்கியத்தை வெகுவாய் உண்டுபண்ணும்.

இப்போது சிலவருஷங்களாக உங்களைச்சுற்றிலும் நடக்கும காரியங்களைப் பார்ப்பீர்களாகில் அவைகளுக்கெல்லாம் பொதுலக்ஷணமொன்று காணும். அதெப்படியென்பீர்களா? சொல்லுகிறேன், கேளுங்கள்.

முதலாவது, வித்தியாப்பியாசத்தை யெடுத்துக்கொள்ளுங்கள். முந்தியிருந்த ஐரோப்பிய நண்பர்கள், இங்கிலீஷிலேயேதான் வித்தை கற்பிததாக வேண்டுமென்றும், தேசியபாஷைகளெல்லாம் தொலைந்தால்ஒரு நஷ்டமுமில்லையென்றும் சொலலி வந்தாகள். தற்காலத்திலோ மகாஜனங்களுக்கு வித்தை யென்பது கிடைகக வேண்டுமானால் இங்கிலீஷை யொழித்துவிட்டுத் தேசியபாஷைகளிலேயே கல்வி கற்பித்து ஆகவேண்டு மென்கிறார்கள். அதாவது இந்நாட்டில் தோன்று தொட்டு வந்திருப்பதை ஆதாரமாகக்கொண்டு, மேல் கட்டிடங் கட்டவேண்டுமென்கிறார்கள்.

இரண்டாவது, தொழில்களி லேதாகிலுமெடுத்துக் கொள்ளுவோம். நீராவி யந்திரங்கள் துணி நெய்வதற்கு நாளுக்கு நாளதிகமாயுபயோகப்பட்டு வருவதால், இனிகைத்தறி முதலியவைகளெல்லாம மூலை சேரவேண்டியதுதானென்று முந்திச் சொல்லி வந்தார்கள். இப்பொழுதோ அதை யாதாரமாகக்கொண்டு, நமது சாலியருக்குப் பரமபரையாக வந்திருக்கும் சாதுரியததையும் விடாமல், எவ்விதமாகவாவது அவர்கள் படும் பாட்டிற்குக் கூலி யதிகமாகவும், பலனதிகமாகவும கிடைக்கச் செய்யவேண்டுமென்று அதற்கு வேண்டிய உபாயங்களைத் தேடி வருகிறாகள். இதுவும் மேற்குறித்தபடியே இருப்பதை யாதாரமாகக் கொண்டு கட்டிடங் கட்டுவதாம். இப்படியே இன்னும் எத்தனை யுதாரணங்கள் வேண்டுமானாலும் எடுக்கலாம். ஆனலது அனாவசியம். சொல்லப் போகிற சங்கதிக்கு இது போதுமென்று காணுகிறது.

இந்தச்சங்கதி ஔஷத விஷயம். இவ்விஷயத்திலும ஆரம்பத்தில் அப்படியேதான் நினைத்திருந்தார்கள். இந்நாட்டில் வைததியமென்பது வெகுமுரட்டுத்தனமானதென்றும், "பட்டினியேபரமஔஷதமென்னும்," வாக்கியத்திற்கிணங்க, எல்லா வியாதிகளுக்கும் ஒரே பக்குவமாகப் பட்டினி கிடத்திக் கொன்றுவிடுகிறார்களென்றும், வியாதிகளை யுள்ளபடி கண்டறிவதற்கும், கண்டபின் அதற்கு வேண்டிய சிகிச்சை செய்வதற்கும்,முறைகளே வெகு சாமான்னியமென்றும், சொல்லிவந்தார்கள். இப்போதும் அரைகுறையாகப் படித்துவிட்டு அகங்கார மேலிட்டிருக்கும் டாக்டர்களனேகமாயப் படித்தான் சொல்லிவருவது. ஆகிலும் இவ்வொரு விஷயத்தில் மட்டும் ஆதிமுதல் ரகசியந் தெரிந்த சிலர் இப்போது நாம் சொல்லுகிறபடி யிந்நாட்டிலுள்ள சாஸ்திர முறைகளை விசாரிக்க வேண்டுமென்றும், பரீக்ஷித்தால் அதனால் இந்நாட்டவருக்கு மட்டுமேயல்லாமல் வேறு நாட்டாருக்கும் பிரயோஜனமிருககலாமென்றும் சொல்லியும, பிரயத்தனப்பட்டும், வந்திருக்கிறார்கள். தவிர மேனாட்டு முறையில் தேர்ந்த நமமவரில் சிலர் நமது பழைய ஆயுர்வேதக்கிரந்தங்களாகிய, 'சரகம்', 'ஸுசுருதம்' முதலிய கிரந்தங்களைப் பரிசோதித்து, அவைகளை யிக்காலத்திற்கேற்க மொழிபெயர்த்து விளககி வந்திருபபதில், அனேக அற்புதங்கள் வெளியாகின்றன. அதுபோலவே, யூனானி, முதலிய சாஸ்திரங்களும் வெளி

யாகிப் புத்திமான்களொப்பும்படி விளங்கி வருகின்றன.

இப்படிப் பலவிதங்களிலு மிந்நாட்டிலிருப்பதை யாதாரமாகக்கொண்டு மேல் நடவடிக்கை நடத்துவது சரியாகக் காணுவதாலும், பிரயத்தனம் நடந்துவருவதாலும், மகாராஜாக்கள் முதல், நாயாடி யீறாகச் சகல ஜனங்களுக்கும், ஆண், பெண், குழந்தை, விருத்தன் ஆகிய எல்லோருக்கும், எக்காலத்தும் அத்தியாவசியமாகிய ஔஷதங்கள் சுலபமாய்க்கிடைக்க வேண்டிய உபாயமென்ன வென்று நாம் யோசிக்க வேண்டும். அதையிதுவரையேன் புத்திமான்கள் விசேஷமாக யோசிக்கவாவது தக்க பிரயத்தனஞ் செய்யவாவது இல்லை யென்பது தான் நமக்கு வெகு ஆச்சரியம்.

'ஔஷதங்கள்' என்று நாம் மொத்தமாய்ச் சொல்லுவதில சிலருக்கு இன்னதென்று விளங்காமலிருக்கலாம் ஆதலால் இவ்விஷயத்தில நமது கருத்தைச்சற்று விஸ்தரித்தெழுதுகிறோம்.

நமது வைத்தியர்கள் சாமான்னியமாய் உபயோகிக்கும் ஔஷதங்கள் மூன்று வகைப்படும். மாத்திரைகள், பஸ்மங்கள், சிந்தூரங்கள் முதலியன தலைமுறை தலைமுறையாயிருக்கவேண்டியவைகள்; லேகியங்கள், தைலங்கள், சூரணங்கள் முதலியன, சில மாசங்களோ, சிலவருஷங்களோ இருப்பவை; கஷாயங்கள், தழைச்சாறுகள், முதலியன அப்போதைக்கப்போது தயார்செய்யவேண்டியவை.

இப்படியிருப்பதில் பல காரணங்களினால் வைத்தியர்கள் வேறாகவும், ஔஷதஞ்செய்து விற்பவர்கள் வேறாகவும் நமது நாட்டிலாகவேயில்லை. ஒருவிஷயத்தில் இது நல்லதுதான். "விலவாதி லேகியம," என்றொருவன் ஒருலேகியத்தைக் காண்பித்தால், அது முறைப்படியாகி யிருக்கிறதாவென்று காண நம்மால் முடியாதிருப்பதுடன், சாமான்னியமான வைத்தியர்களுக்கும் பரீக்ஷை தெரியாது. இப்போது ஒரு பதார்த்தத்தைக் கொடுத்து மதிராசில் கெமிகல் பரீக்ஷகரை இதில் விஷ வஸ்துக்களோ, வேறு ஏதாகிலும் தெரியவேண்டிய வஸ்துக்களோ இருப்பது கண்டறிய வேண்டுமென்றால், அவர் அதைப் பரீக்ஷித்துச் சொல்லிவிடுகிறார். அப்படி நம்மவரில் பரீக்ஷைகள சம்பிரதாயமா யேற்படவில்லை. அல்லது முற்காலத்திலேதாகிலும் ஏற்பட்டிருந்தாலும் நமக்குத் தெரிந்தவரை யிக்காலத்தில் காணோம். ஆதலால் ஔஷதங்களை வைத்தியர்களே செய்வதில் ஒரு அனுகூலமிருப்பது பிரத்தியக்ஷம். கள்ளமொன்றும் விசேஷமாயிருப்பதற்கிடமில்லை. இருந்தால் வைத்தியன் பிழைப்பு கெடுகோலைக்கு நடவாது.

ஆனாலிதில் உபத்திரவமும் பலவிதமாகவிருக்கிறது. ஔஷதம் வேண்டியவர்களுக்கு உடனே கிடைப்பது துர்லபமாகிறது. தயாராவதற்குக் கார்க்கவேண்டியிருப்பதுடன், வேண்டிய பதார்த்தங்கள், தழைகள் முதலியன அகப்படுவதும் துர்லபமாகிவிடுகிறது. தவிரத்தொலைகளிலிருக்கும் வியாதிஸ்தருக்கு மருந்து கொடுப்பது முடியாத காரியமாகிவிடுகிறது. இக்காலத்தில் மேனாட்டு முறையை யனுசரித்துக் கல்கத்தாவில விசேஷித்தும, மற்றவிடங்களில் சிறிது சிறிதாகவும், ஆயுர்வேத மருந்துக் கடைகள் ஏற்பட்டுப் பத்திரிகை வாயிலாகச் 'சரமகவிகள்' பாடிக்கொண்டு ஏதோ ஒருவிதம் பிரபலித்து வருகின்றன. ஆனால் இவ்வௌஷதங்களில் ஜனங்களுக்குப் பக்தியதிகரிப்பது சிரமம். ஏனெனில் மேனாட்டு ஔஷதங்களுக்கு அங்கங்கே யிருக்கும் பிரபலவைத்திய சங்கங்களும, வைத்தியர்களும், யோக்கியதைப் பத்திரங் கொடுத்திருப்பதால் அதில கள்ளம ஒன்றுமிராதென்று நம்பி இதரஜனங்களும், இதரவைத்தியர்களும, தாராளமாக வாங்கி யுபயோகிக்கிறார்கள். அப்படியிங்கே யாரைச் சொல்லலாம்! 'கேசரஞ்சனத்தைலம்' விற்கும் ஸ்ரீயுக்த நகேந்திரநாத

சேனன் என்பவர் தான் நமது பக்கத்தில் தமக்குப் பலமாக அடித்துவந்திருப்பது. இவரிடத்தில் உள்ள சரக்குகள் ஏதோயோக்கியதையிருக்கலாம். இல்லாவிட்டால், இத்தனை நாளாக அவைகளுக்குப் பிரபல்லியமிருந்து வந்திராது. என்றாலும் இவருக்கு நாம மேற்குறித்தபடி 'பரீக்ஷை' யோக்கியதை யொருவருங் கொடுத்தவருமில்லை. கொடுக்கத்தக்க யோக்கியதையைத் தம்மிடததி லடைந்தவருமில்லை.

ஆனலிது பெருத்த விஷயம். நமது பழைய முறைகள் அநேகமாய் ரகசியமாயிருப்பதுபற்றியவைகளைப் பகிரங்கப்படுத்தி, ஔஷதங்களைப் பரீக்ஷிப்பதற்கும சமபிரதாயங்கள் ஏற்பட்டு, ஆங்கிலேய முறைப்படி வைத்தியர்கள் எழுதிக்கொடுபபதும், ஔஷதக் கடைக்காரர் மருந்து கொடுப்பதுமாக ஆவதற்கு வெகுகாலஞ் செல்லவேண்டும். மைசூர் முதலிய சமஸ்தானங்களும், பிரிட்டிஷ் ராஜாங்கத்தி னுதவி பெற்று நம்மில அபிமானிகளனேகரும் சேர்ந்து உழைத்துவந்தால் காலக்கிரமத்தில் ஏதாகிலும் நன்மையடையலாமென்பது நிச்சயம். ஆகவே இப்பொழுது மைலாப்பூரில ஸ்ரீமான் ஆனரெபில் வி. கிருஷ்ண சுவாமி அய்யரவாகளுடைய "வேங்கடரமண வைத்தியசாலை"யை ஒரு நல்ல ஆரமபமாகச் சொலலலாம்.

இந்த ஔஷதங்களைச் செம்மையாய்ச் செய்வதற்கு இடமில்லாம லிருப்பதும, பரீக்ஷையிலலாம லிருப்பதும, ஒரு பெருங் குறையென்பது இப்போது வியக்தமாகும். ஆனல் இதுமட்டுமேயலல. பல ஔஷதங்களுக்கு மகிமைகுறைவதற்கு நமது வைததியர் காரணம். இக்காலத்தில் எவன் வேண்டுமானலும் வைத்தியனுகப் புறபபடலாம. பளளிககூடங்களில்லையாதலால் அனுபவ மூலமாய்த்தான் ஒருவன் தொழிலை கறறுக்கொள்ளவேண்டும். அதற்குத்தக்க குருவில்லாவிட்டால், கறறுக்குட்டி வைத்தியஞ்செய்து ஆயிரம் பெயரைக்கொன்று அரை வைத்தியனுக வேண்டிய வழியொன்றுதான் சுவாதீனத்தி லிருக்கிறது. இதனுல் ஔஷதங்களுக்குள்ள யோக்கியதை தெரியாமல், அதிகமாக உயாத்தியாவது, தாழ்த்தியாவது பேசிவருவது நமது வைத்தியர்களுக்குச் சகஜமாயேற்பட்ட தோஷம். வைத்தியர்களி லொருவர்க்கொருவர் தாழ்ந்தவரென்ருே, உயர்ந்தவரென்ருே, அறிவதற்கு மேனுட்டு டாக்டர்களிட மிருக்கும் அடையாளங்கள் போல வொன்று மில்லாமலும், அபபடி யேற்படுவதற்கு வகையொன்றில்லாமலுமிருப்பதால், ஒவ்வொருவரும தமக்குச்சமதையாகத் தன்வந்திரிகூட ஆகமாட்டாரென்று நமபிப் பேசுவதும சகஜம. ஆகவே தங்களுடைய ரகசிய ஔஷதங்களின் யோக்கியதையைப்பற்றி இஷ்டம்போலப் பேசிக்கொள்ளுவதும் சாதாரணம். இதற்கு அநேக உதாரணங்கள் இஷ்டருக்குத் தெரிந்திருந்தாலும கீழே சொல்லுவது கொஞ்சம் விசித்திரமென்றே நம்புகிருேம.

ஒருகாலத்தில் மகாராஜா வொருவருக்கு வாதமதிகரித்துக் கைகால் பிடிப்பிருந்ததில், அதை சொஸ்தப்படுத்துபவருக்கு வெகுமானம் பெரிதாகக் கிடைக்குமென்று விளம்பரம் செய்தார். நமது வைத்தியரனேகர் வந்து பிரயத்தனஞ் செய்ததில், பரீக்ஷைவேண்டுமென்றிருந்ததனுல், அநேகருக்கு அது செய்வித்து ராஜாவுக்குத் திர்ப்தியுண்டாக்க முடியாமல் போனுர்கள். ஒருவர் மட்டும் ஒரு தைலஞ்செய்வித்து அது பக்குவததிற்கு வருஞ் சமயத்தில கொப்பரையைச் சுற்றிப் பாததிரங்களை வைத்துக்கொண்டு ஆள்கள் தயாராயிருக்க கொப்பரைக்குமேல் பல்லக்கு மூங்கில் ——^——இப்படியிருப்பதைக் கட்டி, வளைவுகொப்பரைக்கு மேலாகத்தொங்கும் தைலத்தின் ஆவிபடும்படி விட்டு, அதை ஜாக்கிரதையாய்ப்பார்த்துக்கொண்டிருக்கும்படிக்கும், அந்த மூங்கில் வளைவு நிமிர்ந்து மூங்கில் நேரான க்ஷணத்தில் தைலத்தைப் பாத்திரங்களில்

எடுத்துவிட வேண்டுமென்றும், அது தான் பரீக்ஷையென்றும் சொன்னாராம். அப்படியே யாயிற்றென்றும், அதனால் ராஜாவுக்கு நம்பிக்கை யுண்டாகி அவரத்தைலத்தை யுபயோகித்தாரென்று கதை. இதனால் சாமான்னியன் தெரிந்துகொள்ளவேண்டியது, மூங்கிலையேகோணல் நேராக்கக்கூடிய தைலம், மனிதனுக் குபயோகமாவதற்குக் கேட்கவும் வேண்டுமோ, வென்பது! இதைப்பற்றி நாமினினும் பேசவேண்டியதென்ன விருக்கிறது? இது வைத்தியமல்ல, இந்திரஜாலமென்று சொல்லிவிட்டு மேலே போகவேண்டியதுதான். இம்மாதிரிச் செப்பிடுவித்தைப் பேச்சுகளைச் சொல்லிக் காலம் கழிப்பதில்தான் நமது ஔஷதங்களுக்கு மகிமை குறைவது.

(இன்னும் வரும்)

---

### கல்விகரையில, கற்பவர் நாட்சில

பாரத்துவாஜர் தனது ஆயுடகாலத்தில் முக்கால் வரிசையும் பிரமசரியஞ் செய்தார், என்றால், கல்வி பயின்று வந்தார். அதனால் அவருக்குக் கைகால்கள் மெலிந்துபோய், சகாச சக்தியற்றவராகப் படுத்திருந்தார். அவரை யிந்திரன் (சருவேசுவரன்) வந்து பார்த்து, "ஓ பாரத்துவாஜரே, உமக்கு இனியுள்ள கால் வரிசை ஆயுளையும் கொடுப்போமாகில், அதைக் கொண்டென்ன செய்வீர்?" என்று கேட்க, அதற்கு அவர், "பிரமசரியமேதான் செய்வேன்" என்றார். இந்திரன் அவரது மனோநிச்சயத்தை வியந்தாரெனினும், அவரது சக்திக் குறைவையும், கல்வியின் மகத்துவத்தையும் விளக்கவேண்டி, "ஓ பாரத்துவாஜரே, கண்ணைத்திறந்து சுற்றிலும் பாரும். உமக்கு மூன்று புறத்திலும் அடி முடி காணாத மூன்று மலை வடிவங்கள் காண்கின்றனவன்றோ? அவைதாம் வேதங்கள், என்றால், கல்வியாம். இதோ இவைகளிலிருந்து மூன்று முஷ்டிகள் எடுத்துவைத்திருக்கிறேன். இம்மூன்று முஷ்டிகள்தானிதுவரை நீர் அத்தியயனஞ் செய்துவந்தது. மீதியிருப்பது உமக்குத் தெரியத்தக்கதன்று. ஆதலாலிதையே நன்றாகத் தெரிந்துகொள்ளப் பிரயத்தனப்படும். ஏனெனில் "வேதங்கள் அனந்தமானவை" இதை நீரறிந்து சாத்தியப்பட்டதைச் செய்வதன்றோ விவேகத்திற்கு லக்ஷணமாவது," என்றார் காடகம்.

## 2. வாகனவகைகள்

ஸ்ரீமான்-டி. எஸ். வெங்கிடரமணையர்,

பீ. ஏ. எல். டி.

இருபதாம் நூற்றாண்டாகிய இக்காலத்தில் இதற்குமுன் நமது பெரியோர்கள் காணாத அநேக அற்புதங்களை நாம் கண்டுவருகிறோமென்றாலும், அவற்றுளெல்லா மிகச் சிறந்தது நாம் ஆகாயத்திற் பறக்கும்படி ஏற்பட்ட இறக்கைகளேயாம். ஆதலால் இதுவரையில் பரிகாசமாய் "நீ என்ன இறக்கை கட்டிக்கொண்டு பறந்துவிடுவாய் போலிருக்கிறது!" என்று சொல்லி வந்தது, இப்பொழுது வாஸ்தவமாகிவிட்டது. ஜர்மனியிலும், பிரான்சிலும், அமெரிக்காவிலும் பலவகைப்பட்ட பறக்கும் யந்திரங்கள் பிரதிதினமும் யோக்கியதை யதிகரித்து வருவதால் இந்த ரகசியந்தெரிந்த ஒருவர் இனிப் பத்துவருஷத்திற்குள் பிரயாணிகளும், தபால்களும், ககன மார்க்கமாகச் சாதாரணமாக எத்தேசத்திலும் போகலாமென்றும், அதுவும் மணிக்கு நூறு மைல் போவது சாத்தியமென்றுஞ் சொல்லுகிறார்.

இந்நாட்டிலோ வெகுகாலமாக ஆகாயத்திற் பறக்கவேண்டுமென்னுமாசை எத்தனையோ பேருக்கிருந்து வந்திருக்கிறது. ஹனுமான் சூரியனைப் பிடிக்கப்போனதும், ஜடாயு, ஸம்பாதி யிருவரும் சூரியனுக்குச் சமீபத்திற் போகப் பிரயத்தனப்பட்டதும், சித்தர்கள் கமன குளிகையை வாயிற்போட்டுக்கொண்டு ஆகாயத்திற் சென்றது முதலிய கதைகளெல்லாம் நமக்குப் பறக்கவேண்டுமென்னும் பேராவலையே குறிப்பிடுகின்றன.

இப்பொழுது மந்திர முதலிய ரகசிய சாதனங்களொன்றும் வேண்டாமல், கடலில் யாத்திரை செய்வது போலவே ஆகாயத்திலும் யாத்திரை போவது சாத்தியமென்று ஏற்பட்டுவிட்டதால், நாம் ஓரிடமிருந்து மற்றோரிடத்திற்குப் போய்வர ஏற்பட்டிருக்கும் வாகன

வகைகளையெல்லாம் காலக்கிரமப்படி பரிசோதித்து, நமக்கிருக்குஞ் சௌகரியங்களைத் தெரிந்துகொள்வதற்கிதுதான் வெகு நன்றாயேற்ற சமயம்.

மொத்தத்தில் பேசுமிடத்து, நாம் போகக் கூடிய மார்க்கங்கள் மூவகைப்படும். அவையாவன, தரை, நீர், ஆகாயம என்பவையாம். இம் மூன்று வகுப்பிலும யாத்திரை போவதற்கு நம்மிலேற்பட்டுள்ள வாகனவகைகள் பலவாகவும், பலவகைப்பட்டனவாகவு மிருப்பது பற்றி, அவற்றை யொவ்வொன்றாயெடுத்து விசாரிப்பதுதான் சுலபம். ஆகவே இச்சந்தர்ப்பத்தில் தரையைப் பொருத்தளவிற்கு நமக்குள்ளிருக்கும் சாதனங்களை விசாரித்து நிறுத்திவிடுகிறோம்.

வாகன வகைகளென்று நாமிதற்குப பெயரிட்டதைச் சற்று விளக்கி விடுதல் நலம். வாகனமென்ப தென்னவென்று ஐஸ்கூல் வகுப்பில் படிக்கும மாணாக்கனொருவனைக் கேட்டாலும் அவன் சுவாமியை பிரவணை செய்விப்பதற்காக உதவும் ரிஷபம, பெருச்சாளி முதலியவைகளில் ஒன்றென்கிறான். ஆனால் இவ்வகை வாகனங்களைக் குறித்து நாமிப்போதொன்றுஞ் சொல்ல வரவில்லை. மனிதர் ஏறிப் போவதற்கும், சரக்குகளை ஏற்றிப் போவதற்கும் உபயோகப் படுவனவாகிய வண்டி வகைகளையே உத்தேசித்துப் பேசுவது.

இப்பொழுது நம்மிலனேகமாய் எல்லோருக்கும் புகைவண்டி சாமான்னியமாகிவிட்டதால் எக்காலத்திலும் ஜனங்களுக்கு இம்மாதிரிச் சௌகரியங்கள் இருந்தேதான் வந்திருக்கவேண்டுமென்று சிலர் நினைத்தாலும் நினைக்கலாம், அப்படியிருக்கவில்லையென்றும், வெகு காலமாய்ப் பல புத்திமான்கள் பல தேசங்களில் தங்களுடைய புத்தியையும யுக்தியையு முபயோகித்துத் தான் வண்டிகள் நமக்கிவ்வளவு சௌகரியமா யேற்பட்டிருக்கின்றனவென்று நாம் நிச்சயமாய்ச் சொல்லலாம். அவை யெல்லாவற்றையும் விவரிக்கப்புகின் பெருகுமாதலால் முக்கியமாயுள்ள இரண்டொரு சங்கதியைமட்டும் விவரித்து விட்டுவிடுகிறோம்.

வண்டிக்கு முக்கியமாயுள்ள லக்ஷணம் இருசும் சக்கரமுமாம். சக்கரம் எவ்வளவு முக்கியமென்பதை, 'வண்டி' என்பதற்குச் 'சக்கரம்' என்ற பொருளிருப்பதைக் கொண்டே யறியலாம். இவையிரண்டும் நமக்குச் சாவசாதாரணமாகி விட்டபடியால் இவைகளைப்பற்றி யறிய வேண்டிய தொன்றுமில்லையென அநேகர் நினைக்க இடமுண்டு. ஆனால், இவைகளெக்காலத்திலுமிப்படியே யிருந்தனவல்ல.

ரோட்டு வெகு நன்றாயமைந்திருப்பதாகவே வைத்துக்கொள்ளுவோம். அதில் ஓர் மரக் கட்டையைக் கயிறு கட்டியிழுததுக் கொண்டு போனால் அதற்கும், சக்கரம் போட்டிருக்கும் சாமான்னிய வண்டியொன்றை யிழுத்துப்போவதற்கும், வித்தியாசம் யார் வேண்டுமானாலும் பரீக்ஷித்தறிந்து கொள்ளலாம். யாது காரணங்கொண்டு இவ்வித்தியாசம் ஏற்படுகிறதென்று விசாரிக்குமிடத்து மரக்கட்டையிலொரு பக்கம் பூமியிற்படிந்து பூராவும் உரைந்து வருகிறதென்றும், சக்கரமோ ஏகதேசந்தான் உரைகிறதென்றும் வியக்தமாகக் காணும். இப்படி வஸ்துக்கள் ஒன்றுடனொன்றுரைந்து அதனால் சலனத்திற்குத் தடையுண்டாகுமானால் அதற்குச் "சங்கர்ஷணம்" * என்று பெயரிடலாம். ஆகவே வண்டி விஷயத்தில் ஆதிமுதல் நாளதுவரை ஜனங்கள் சிரமப்பட்டுத் திருத்தி வருவதற்கு இந்தச் சங்கர்ஷணத்தைக் குறைப்பதே முக்கிய லக்ஷியமாம்.

ஏனெனில், கூடு முதலிய மற்றைய அங்கங்களில் நாம் செய்யக்கூடிய திருத்தமெல்லாம் விசேஷித்து அழகிற்காகவே யொழிய உபயோகத்திற்கல்ல. சக்கரவிஷயத்திலோ நாளதுவரை செய்துவந்திருப்பதெல்லாம உபயோகத்தை யுத்தேசித்தே செய்தது.

* இங்கிலீஷில் Friction என்பது.

அவ்வஸ்துக்களின் இச் 'சங்கர்ஷணம்' பலத்திருப்பதற்கு ஒன்றுடனொன்றுரையும் வடிவமும் கனமும், முக்கியகாரணமாம். உதாரணமாக, பந்துபோன்ற இரண்டு மரத்துண்டுகளை ஒன்றோடொன்றுரைத்துப் பாருங்கள். அவைகள் முற்றிலு முரைவது சாத்தியமேயல்ல, ஆதலால் உரைப்பது சுலபம். அதுபோலவே ஒரு மாக்கட்டையைக் கட்டியிழுப்பதற்கும், அதே பருமனும் வடிவமுங்கூடிய ஒரு இருப்புக்கட்டையை இழுப்பதற்கும் வித்தியாசமுண்டாவில்லையாவென்பதைநாம் சொல்லவும் வேண்டுமா?

இது காரணம்பற்றி வண்டி நமக்குச் சௌகரியமாய் ஏற்படுவதற்கு மூன்று விஷயங்கள் சிறிது சிறிதாக நமக்கனுகூலப்பட்டு வரவேண்டியிருந்திருக்கின்றன. முதலாவது, சக்கரத்தினுடைய வடிவமுங் கனமும்; இரண்டாவது சக்கரத்திற்கும் இருசிற்குமுள்ள சம்மந்தம்; மூன்றாவது, சக்கரத்திற்கும் பூமிக்குமுள்ள சம்மந்தம்.

சக்கரத்தினுடைய வடிவத்தையும், கனத்தையும் விசாரிப்போம். சற்று யோசிப்போமாகில் புராதனச் சக்கரமும், நவீனச் சக்கரமும் அனேகமாய் ஒரே இடத்திற்காணலாம். ஒரு தோசைக்கல்லை நமது வீட்டிற் கெதிராக வண்டியிலிருந்து கீழே இறக்கி அதை வீட்டிற்குள் கொண்டு சேர்ப்பிக்க ஒரு ஒட்டனைக் கூப்பிட்டால், அவன் புராதனச் சக்கரம் நிமிஷத்தி லுண்டுசெய்து விடுகிறான். அதாவது மரவுருளைகள் இரண்டையோ மூன்றையோ கீழேவைத்துக் கல்லையவற்றின்மீதேற்றி உருளைகளை மாறிமாறி வைத்து மெல்லமெல்லக் கொண்டு சேர்த்து விடுகிறான். கல்லை வெறுமனே யிழுத்துப் போவதைவிட இதில் யுக்தி யெத்தனையோ விசேஷித்திருப்பதை யாருங் காணலாம். இம்மாதிரியே பழையகாலத்தில் வெறும் மரவுருளைகளைச் சக்கரமாக உபயோகித்து அதற்குப் பின் இரண்டு உருளைகளுக்கு மத்தியில் ஒரு கோல் சேர்த்துக் கோலும் உருளைகளும் ஒருமிக்கப் புரளும்படி அமைத்து வண்டிகளுக்குபயோகப்படுத்தி வந்தார்கள். பிறகு நமது பெரியோர்கள் வெகுகாலம் இம்முரட்டுச் சக்கரங்களுடன் போராடியபின் சக்கரத்திற்கும் இருசிற்கும் சம்மந்தம் சற்றிளகி இருசு ஸ்திரமாய் நிற்கவும், சக்கரம்மட்டும் உருளவும் வழியாயிற்று. பிறகு கொஞ்சங் கொஞ்சமாகச் சக்கரத்தினது கனம் குறைந்து வருவதற்கு உபாயங்கள் ஏற்பட்டுக் கும்பம், ஆரம், வட்டை, பட்டா முதலிய அங்கங்கள் காலக்கிரமத்திலமைந்தன. இவைகளொன்று மமையாமல் பழையபடியே கனத்திருக்குஞ் சக்கரங்கள் இருசைச்சுற்றி புருளுவதை யாரேனும பார்க்க வேண்டுமானால் அடுத்திருக்கும் கிராமக் கோவில் தேரைப்பார்த்து தெரிந்துகொள்ளலாம்.

ஒருவகை வண்டியில் மட்டும் நாம் மறுபடி புராதனக்கிரமத்தை யனுசரித்து வருகிறோம். ரயில் வண்டியில் பிரயாணம் போகும்போது அவ்வண்டிச் சக்கரங்கள் எப்படி உருண்டுபோகின்றன வென்று கவனித்துப்பார்த்தால் இந்த ரகசியம் தெரியும். அது ஏன் அப்படியிருக்க வேண்டுமென்பதற்கு நியாயங்கள் பலவாதலின், இவ்விடத்திலவைகளை விவரிக்கச் சமயமில்லை.

சக்கரம் எவ்வளவு கனங் குறைந்திருந்தாலும், அதற்கும் இருசிற்குமுள்ள பாந்தவ்வியம் எவ்வளவு இளகியிருந்தாலும், வண்டிபோகவேண்டிய ரோட்டுகள் நமது நாட்டிற்காணும் இட்டேறிகள் போன்றிருந்தால், பிரயாணம் அனேகமாய் மாதங்காத வழிதான். ஏனெனில், மேடுபள்ளங்களிருந்தாலும் மணல், சேறு முதலிய வுபத்திரவங்களிருந்தாலும் நாம் மேற்கூறிய சங்கர்ஷணத்தின் பலமதிகமாய்விடும். ஆதலால் தொன்றுதொட்டு இதைப்பலக்கவொட்டாமல் அனேக வுபாயங்களைப்

புத்திமான்கள் தேடி வந்திருக்கிறார்கள். அவற்றில் பிராசீனமாயுள்ளதும், எங்கும் காணக்கூடுவதும், ரோட்டுகளுக்குக் கல் முதலியவற்றைப் பொடித்துப்போட்டோ அல்லது வேறு விதமாகவோ உபாயஞ்செய்து கெட்டியாக்கிவிட்டுப்பாலமுதலியவை கட்டிச் சமப்படுத்துவதாம். சாமான்னியமாய் எருது, குதிரை முதலியவைபூட்டி இழுக்கும்வண்டி வகைகளெல்லாவற்றிற்கும் நாளதுவரை இம்மாதிரி ரோட்டுகள் தான் ஏற்பட்டிருக்கின்றன. என்றாலும், வண்டிகள் அடுத்தரமான கனமும், பருமனுமிருந்தால்மட்டும், இம்மாதிரி ரோட்டுகளில் போக்குவரவு சாததியம். ரெயில்வண்டிகளைப்போல பிரம்மாண்டமான பருமனுங்கனமுமிருக்குமாகில், அவைகளை இப்பசுக்கள் சாமான்னிய ரோட்டுகளி லிழுத்துப் போவது அசாததியம். ஏனெனில், மேல் நாம் குறிப்பிட்ட சங்கர்ஷணத்தின் உபத்திரவம், ரோட்டுகளுக்கு மண் முதலியன கொட்டிச் சமப்படுத்துவதினால் வேண்டுமளவிற்கு நீங்குவதில்லை. ஆகவே, நெடுநாளைய பரீக்ஷைக்கப்புறம் இருப்புப்பாதையென்று நாமிப்போது சொல்லிக்கொள்ளு முபாயம் ஏற்பட்டது. இதை நாம் புகைவண்டி யோடுவதற்காகவே அமைந்திருக்கப்பார்த்திருக்கிறோமானதுபற்றி, புகைவண்டியுண்டாகிய பிறகுதான் இந்த உபாயங் கண்டுபிடித்ததாக நாம் நினைத்துக்கொள்ளக்கூடாது. குதிரைவண்டிகள் வெகுகாலம இவ்வுபாயத்தினால் பெரும்பாரந்தாங்கி சலீசாயோடியிருக்கின்றன. இருப்பு கெட்டியாயிருப்பது கொண்டும், சக்கரமும் ரயிலும் ஒன்றுடனொன்றுரையும்போது இரண்டும் வழுவழுத்திருப்பது கொண்டும, சங்கர்ஷண பலம எததனையோ மடங்கு குறைந்துபோய், அதனால் வண்டி சலீசாகப் போவதுடன் வேகமாயுமோடுவதற்கிடமுண்டாகிறது. ஆதலால் இப்பொழுது ஒரு மணிக்கு நூறு மைல் வேண்டுமானாலும் போவது சாத்தியமாகி விட்டது.

இப்படி ரெயில் முதலிய உபாயங்களினால் ரோட்டுகளிலிருக்கு முபத்திரவங்களைப் பரிகரிப்பதென்றால அது எல்லாவிடங்களிலும் சாத்தியமல்ல. ஆதலால் சக்கரத்திற்கே வேறு சில யுக்திகள்செய்து, ரயிலில்லாத விடங்களிலும் சங்கர்ஷண வுபத்திரவத்தைக் குறைக்கச் சமீப காலத்தில் வகையேற்பட்டு வருகிறது. அதாவது, இருப்புப் பட்டாவிற்குப் பதிலாக ரப்பர்பட்டா வுபயோகப்பட்டு வருவதாம். இதை நாம் சாதாரணமாய் பைசிகில் என்னும் துவி சக்கரவண்டியிலும், மதிராஸ் முதலிய பெரிய நகரங்களில் மோட்டார் வண்டிகளென்று தலை தெறிக்கவோடும் வண்டிச் சக்கரங்களிலுங் காணலாம்.

இவ்வாறு வண்டிகளையும் ரோட்டுகளையும் பலவிதமாக நாம் நோக்கி வந்தோமென்றாலும, எருது முதலிய மிருகங்களை மட்டுமே வண்டியிழுக்க உபயோகித்து வந்திருப்போமாகில், மணிக்குப் பத்துமயிலுக் கதிகம் போவது அசாத்தியம். ஆதலால் இப்பொழுது நாம் மணி 1-க்கு நூறு மைல் மட்டும் போவதாகப் பேசுவதற்கு வேறிரண்டொரு காரணத்தினாற்றான் யோக்கியதை வந்திருப்பது. அவையாவன, நீராவி பலமும் மின்சாரமென்னும் வைத்தியுத பலமுமேயாம். இவ்விரண்டு சக்திகளையாதாரமாகக்கொண்டு சாதாரணமாய் ரயில் வண்டிகளும, டிராம் வண்டிகளும், மோட்டார் வண்டிகளும வாயுவேகமாய்ப் பறக்க இடமுண்டாயிருக்கிறது. முதல்முதல் இங்கிலாந்திலோடின புகைவண்டியை இப்பொழுது நீங்கள் பிரதிதினமும் பார்க்கும் புகை வண்டிகளுடன் ஒத்துப்பாருங்கள்.

இனிவரும் நம்பரில நீர்மேல் யாத்திரை செய்வதற்குரிய சாதனங்களை யிவ்வாறே விசாரித்து விளக்குவோம்.

# விநோத காண்டம்

## குலதேய்வ வணக்கம்

தஞ்சமென் றடைந்த நன்மா
 தவத்தினர் போற்ற வன்றோர்
சஞ்சல மாற்றி யாண்ட
 தசரத ராம னன்பன்
அஞ்சனை தந்த அதனை
 அருட்டுணைத் தாட்கள் போற்றி
வஞ்சமில் வாம தேவன்
 வளர்கதை வகுத்து ரைப்பாம்.

## அவையடக்கம்

பண்டிதா பரிவோ டேற்றுப்
 பாலிக்க வென்ற வேள்வி
கொண்டொரு சுகுண சீலன்
 கோதில்லா நீதி பாலன்
விண்டதை விபுத ரேற்ற
 விழைவினால் வாம தேவன்
கண்டுறு தமிழ்மாக் காதை
 கனிவுடன் பகர்வல் மாதோ.

ஸ்ரீராமஜெயம்
ஸ்ரீ ஆஞ்சனேயோ ரக்ஷது
வாமதேவன்

## அத்தியாயம் 1

பொன்பதியும் புனிதவேலன்பதியும் போதாவென்னப் புலவர் போற்றுந் தென்பொதிகாபுரத்தில், வேதியர் திலகங்கள் வாழுகின்ற வீதியில், வெகு விசித்திர முகப்புடன் விளங்குமோர் கிருகங் காண்கின்றோம். இந்தக் கிருகத்தினுள் முதற் கட்டில் வெள்ளை சிமிட்டிச சுண்ணாம்புத் தளமிட்டுள்ளதோர் திண்ணையில், மிகுந்த வியாகுலத்தால் வாடிய முகத்தினராயோர் விருத்த வேதியா வீற்றிருக்கின்றார். இவர் முகத்தை நோக்க உதடுகளிரண்டும் ஏதோ தாமே பேசிக்கொள்ளுவதுபோல அசைந்து கொண்டிருக்கக் காண்கின்றோம். ஜாதிப்படிக்குச சுமார் ஆறடி உயரமும் அதற்கேற்ற வுடல் புஷ்டியுமுள்ள இவர் தம் சரீராகிருதி வெகு கம்பீரமாய்த் தோற்றப்படினும், வயதின் முதிர்ச்சியாலும் வேறு பல காரணங்களாலும் சரீரம் மிக மெலிவுற்றுத் தளர்ந்திருக்கின்றது. இவருக்கு வயது சற்றேறக்குறைய அறுபதுககு மேலாகவே மதிப்பிடவேண்டும்.

அன்று சூரியோதயமாகிச சுமார் ஆறுநாழிகைப் பொழுதாகையில் இவர்தம் நெற்றியில் கோபி சந்தனம், கழுத்திலொளிரும் துளபமாலைகள், இடையிற்கட்டியிருக்கும் பழுப்ப வஸ்திரம், கைவிரல்கள் ஏதோ கணக்கிட்டுக் கொண்டிருப்ப திவற்றைநோக்க, இவர் ஏதோ திருநாமங்களை ஜபித்துக்கொண்டிருப்பதாகவே தீர்மானிக்கலாம். இவர் சில காலங்களுக்குமுன் கோண்டூர் ஜில்லா ஜட்ஜியாயிருக்கையில் நாமிவரைப் பார்த்திருப்பதுண்டு. இவர் அப்பொழுதிருந்த நிலையென்ன, இப்பொழுதிப்படி வாடியிருக்கும் காரணமென்ன? ஓ! இப்பொழுது ஞாபகம்வந்தது இவருக்கும் யாகாணத் துரைத்தனத்தாருக்கும் ஏதோவொரு நாவா விஷயமாய அபிப்பிராய பேதந் தோன்றி, அதனால் இவர் வேலையைவிட்டு நீங்கித் தாம கணக்குப்படி முப்பது வருஷம் துரைத்தன வுத்தியோகஞ் செய்தாயவிட்டபடியால் தமக்கு உபகாரசம்பளம் கொடுக்கக் கோரியும, துரைத்தனத்தார் கொடாது மறுத்துவிட்டபடியால், இந்தவுத்தரவை மாற்ற மேலதிகாரிகளுக்கு மனுக்கொடுத்து இந்தத் தென்பொதிகாபுரஞ்சேர்ந்த வாசுதேவ அய்யரன்றோ இவர்? நன்று, நன்று.

இவர் தாமுத்தியோகஞ் செய்திருந்த காலத்தில் இவரது கிருகம் அன்னசசத்திரமாய் விளங்கிய பெருமையென்ன? இவர் எப்பொழுதும் பிரஸன்ன முகத்தோடு வெளித்திண்ணையி லுட்கார்ந்து, தாம் கசசேரிக்குப் போகுமுன் தமமிடம்வரும் அதிதிகளை ஸத்கரித்து அன்னமளித் துபசரித்ததென்ன, இப்பொழுது வீட்டினுள்ளடங்கி வாடிய முகத்தோடு தனியிருப்பதென்ன? இது அந்தச சோமசுந்தரயயரின் வேலைப்பாடன்றோ? ஒருபாபமு மறியாத இந்தப் புண்ணியவானுக்கு ஊக்கு காணயத்தின்பேரில் ஜட்ஜி யுத்தியோகப் பதவியின் மகிமையால் ரூபாய் ஐந்தாயிரம் கடன் கொடுத்திருந்ததாக வழக்கிட்டுக் கோர்ட்டில் போய் பிரமாணஞ்செய்தபடி, தீர்ப்பான தொகையைக் கோர்ட்டுச செலவுடன் இவர் கொடுத்ததாலன்றோ இவர் கொஞ்சம் சாமான்னியமாய சிருதுவைத்திருந்ததும் போயிப்படிப் பரிதபிக்கிறார். இந்த விருத்தா இப்பொழுதடையும் துக்கம் சோமசுந்தரத்தின் குடும்பத்தை வெளியில் விடாது.

இப்புண்ணிய சீலர் இங்ஙனம் தம்முதிர்வயதில் சிறுமை யடைந்ததும் நம்புத்திக்கெட்டாத கடவுளின் மாய்கை யன்றோ? இவருக்கிப்பொழுது இவர் வசித்துவரும் வீடு தவிர வேறு பூஸ்திதி, கைப்பணம் முதலிய யாதுமில்லையே. என்றாலும் இவர் செய்த புண்ணியச் செய்கைகள் இக்கலிகாலத்திலும் பயன் கொடுக்கின்றன. இவரின் மனைவி தம் முதுவயதில் அதுவரையிலும் தம் வீட்டுக்காரியாதிகளை வேலைக்காரர்களைக்கொண்டு நடத்தி வந்தது போய் இப்பொழுது தான் ஒருவரே எல்லா வேலைகளையுஞ் செய்யவேண்டி யிருத்தலாலும், தம் நிலைமை மாறியதாலுண்டான மனச்சோர்வினால் சரீரத்துக்கேற்ற உணவில்லாக் குறைபாலுமுடல் தளர்ந்து கைகால் தள்ளாடினும், தம் நாயகரின் பணிவிடையிலென்றுங் குன்றா ஊக்கத்தோடேயே யிருக்கின்றனர்.

இவ்வுத்தமப் பெற்றோர்க்கு வறுமை சிறிதுந் தோன்றாவண்ணம், பல் வேறு நகரங்களுக்குச் சென்று அங்கங்குத்தியோகங்களிலிருந்து கிடைக்கும் வருவாய்களிற் றமக்கு முற்றிலும் அவசியமான தொகையைமட்டுஞ் செலவிட்டு மீந்ததைத்தம் பெற்றோர்க்கனுப்பி அவர் மகிழ்தலே தம் பிறவியின் பயனென வொழுகும் வாமதேவன், கோவிந்தன், நாராயணன் என மூன்று புதல்வர்களன்றி, நான்காவதாகப் பன்னிரண்டு வயதில் ராஜாமணி யென்ற சிறுவனும் இவரின் மனச் சோர்வை யெல்லாம் தன் முகமலர்ச்சியாலும், புன்சிரிப்பாலும், ஒழுக்கவியல்பாலும், ஒருவிஞுடிமையிற் பறக்கச்செய்யும் வனப்பும், சீலமும் வாய்ந்து இவரோடு இங்கேயே வாழ்கின்றான்.

இவரின் முதல்வனும் வாமதேவனுக்கு வயது இப்பொழுது இருபத்துநான்காகிறது. இவன் வணிஜ நகரில் ஜில்லா கோர்ட்டில் மூன்று வருஷங்களுக்கு முன் மாதம் பதினைந்து ரூபாய்ச் சம்பளத்தி லமர்ந்தவன். தன் ஒழுக்கம் சாமர்த்தியம் முதலிய சிறப்பால் இப்பொழுது முப்பது ரூபாயாகச் சம்பள முயர்த்தப்பட்டிருக்கிறது. அடுத்தவன் கோவிந்தனும் சென்ற வருஷத்திய பரீட்சையிற்றேறி வாமதேவன் சிப்பார்சைக் கொண்டு கொடுங்காலூர் கலெக்டராபீசில் மாதம் பதினைந்து ரூபாய் சம்பளத்தோடு வசித்து வருகின்றான். மூன்றாவது நாராயணனோ, சில மாதங்களுக்கு முன்னரே பிரவேசப் பரீட்சையில் முதல்வனாய்த்தேறி இந்த வணிஜநகர் ஜில்லா கோர்ட்டிலேயே பதினைந்து ரூபாய் சம்பளத்தில் நியமிக்கப் பட்டிருக்கிறான்.

இப்படி யிப்பொழுது இந்த மூன்று புதல்வர்களுமாகச் சிறுகச் செலவிட்டு மிகுக்குந் தொகைகளைத் தென்பொதிகாபுரத்துக் கனுப்ப, முதியவரிருவரும் குழந்தை ராஜா மணியும் ஒருவாறு காலந்தள்ளுகின்றனர். குழந்தையும் பள்ளிக்கூடத்தில் வெகு சுறுசுறுப்பாய தான் படிக்கிறான். இப்படிக் காண நிலைமை நேர்ந்து தம் புதல்வர்கள் பதினைந்தும், முப்பதும மாதச்சம்பளம் பெற்று அதிலும் அவர் வாயை, வயிற்றைக் கட்டி மிகுத்தனுப்பும் பொருளை வைத்துத் தாம் ஜீவனஞ் செய்துகொண்டிருப்பதை யோர்ந்தே, நம் வாசுதேவயயர் முகம் வாடி யுடல்தளர்ந்து வீட்டினுள்ளடங்கித் தெய்வமேயென மனதை யங்குசெலுத்தி அவர் நாமங்களை ஜபித்துட்கார்ந் திருக்கின்றனர் போலும்.

இதனிடையில் வீதியில் சென்றிருந்த சிறுவன் ராஜாமணி வெகு வேகமாயோடிவந்து தன் கையிற் கொண்டு வந்ததபாற் கடிதத்தைத் தந்தை முன்வைத்து, "அப்பா, இதென்ன இந்தக்கடிதத்தின் நான்கு கோடிகளிலும் மஞ்சள் அணிந்திருக்கிறதே. சாதாரணமாய மற்ற கடிதங்களிலிருந்த மாதிரி காணப்படவில்லையே" என, முதியவர் "அங்ஙனமாயின் அது மங்கள சூசகமாகும். அதனைப் பிரித்துப படிப்பாய, கேட்போம்" என்றனர். அகத்து அடுக்களையில் அடுசிற் றயாராக்கிக்கொண்டிருந்த அம்மணி காதுகளிலிது விழவே, உடனே ஓடிவந்து தம் கணவர் முன்னின்று "நேற்று நம வாமதேவனிடமிருந்து வந்த கடிதத்திலே, மாதவ புரத்துச சேஷய்யர் நம்ப நாராயணனுக்கு அவருடைய குழந்தையைக் கன்னியாதானஞ் செய்ய வொப்பினதாக எழுதியிருந்ததோயில்லையோ, அதைத்தான் சேஷய்யரும் நமக்கெழுதியிருப்பார். அதைப்பிரித்து வாசியேன், எத்தனை நாழி" என்றான்.



ராஜாமணி தன் தந்தைமுன் கடிதத்தைப் படித்தல்

குழந்தையும் பிரித்தான் கடிதத்தை, அறிந்தான் விஷயத்தை உடனே "அம்மா இது நீ சொன்னதன்று. குன்னத்தூரிலே எங்கண்ணி புஷ்பவதியானளாம். நாளை மூனும்நாள் புட்டு. நாமெல்லோரும் இஷ்டபந்துக்களோடே அங்கே வரணுமாம். அப்பா! நாம் எப்போபுறப்படுவோம். அண்ணாவுக் கெழுத வேண்டாமோ. எனக்கு நல்ல பட்டுக் கரைச் சோமனுயிரண்டு வாங்கித் தந்துடணம். போன தீவாளிக்கே வாங்கித் தரேன் இன்னிமே, இப்போ அசலூருக்குப் போறதுக்கு இந்தக் கம்பிச் சோமனேயுடுத்திண்டு வரமாட்டேன்" என்று சொல்லிக் கடிதத்தைத் தன் றந்தை முன்வைத்தான்.

இதற்குள் முதியவர் கைகளிரண்டையும் சிரசின் மேற்கூப்பி "மங்களாளிபவந்து, தீர்க்க சுமங்கலியமாய் வாழட்டும். இனி நாம் வாமதேவனுக்கும் நாராயணனுக்கும் வணிஜ நகரில் சமையல் அல்லல் ஒழிந்தது. குழந்தைகள் ஹோட்டலில் சாப்பிட்டால் அதிகப் பணஞ் செலவாவதோடு, ஹிதமான ஆகாரம் வாய்க்குவேண்டியபடி இடையாதேயெனத் தானே சமையல்செய்து சாப்பிட்டுப் பணம் மிகுத்து,நம் வயிற்றுக்கனுப்பிக்கொண்டிருப்பதுபோய், இனிச் சுகமாய்க் குழந்தை மங்களம் அடிசிலாக்க அவருண்டு களிப்பர். இப்படியே வெகுவாய் மெலிந்து வாடுமிக் குடும்பத்தின் அல்லலொழிந்து குழந்தைகள் தழைக்க நம்மங்களம் ருதுவான காலம் நற்சுகமாகட்டும்" என்றுரைத்தசையாதுட்கார்ந்திரு

ந்தனர். அம்மாளும் "எழுந்து வந்தவுடனேயே மங்கள சூசகமின்னிலேன்னே, அப்படியே உத்தமர் வாக்கு மங்களம் குழந்தை மங்களாம்பிகையையே குறிப்பிச்சுட்டுது" என்று சொல்லி நெக்கிழுக்கித் தட்டித்தன்னாடித் தெருவாசலை மெழுகிச் சித்ரக் கோலந் தீட்டி முக்கிய பந்துக்களை மஞ்சள் குங்குமத்துக் கழைக்கவென்று அடுத்தகத்துச் சிறுமியை யனுப்பியுட்சென்று சகலமும் ஆயத்தப்படுத்திவைத்து, அவரவர் வரவர அவர்களுக்குச் சந்தனம், குங்குமம், மஞ்சள், புஷ்பம், தாம்பூலம் முதலியவை கொடுத்துபசரித்தனுப்பியபின்னர், தம் கணவர் கருத்துப்படியே தாம் தற்காலத்து நிலைமைக் கொப்ப சில முக்கிய பந்துக்களைமாத்திரம் சேர்த்துக் கொண்டு மறுநாட் காலையில் குன்னத்தூருக்குப் போவதெனத் தீர்மானித்து அன்று முழுவதும் அதற்கான முஸ்தீபு செய்துகொண்டிருக்கின்றனர்

---

முன்சிபு கோர்ட்டு வெளித்தாழ்வாரத்தில் உட்கார்ந்திருந்த ஒருவன் கொட்டாவி விட்டது கேட்டு, உள்ளிருந்த முன்சிபு அவனைத் தருவித்துக் கோர்ட்டாரை யவமதித்ததற்காக விசாரணை செய்தாரென்றும், அவன் நமஸ்காரம் செய்து தப்பித்துக்கொண்டானென்றும், சேலம் 'திராவிடாபிமானி' கூறுகிறது. முன்னொருகாலத்தில் பம்பாய் ஐகோர்ட்டில் வெகு சாமர்த்தியமாக வாதஞ்செய்த வக்கீலொருவர், தன் கக்ஷிக்கு விரோதமாகத் தீர்ப்பு சொல்லக்கேட்டு, "ஒரு கூட்டம் கழுதைகளுடன் போராடவேண்டியிருக்கிறது," என்றுசொல்லி உட்கார்ந்தாராம். உடனே, ஜட்ஜி அவரைக் கூப்பிட்டு, "ஓய், நீர் இப்பொழுது சொல்லியது கோர்ட்டாருக்குக் கேட்கிறது," என்ன, வக்கீல், "பிரபு, என்மனத்தில் நினைப்பதற்குக்கூடத் தாங்கள் உத்தரவளிக்க வேண்டுமோ? என்று கேட்டார். "இல்லை," என்று ஜட்ஜிசொல்ல, "நானிப்பொழுதென்ன செய்தேன்? சற்று பலமாக நினைந்தேன், அதை மன்னிக்க வேண்டுமென்ன, அந்த ஜட்ஜியும் சிரித்து, "இனி நீர் பிறர்காதில் கேட்கும்படியாக நினைக்காதீர்," என்றாராம். இது ஐகோர்ட்டுத் தீர்ப்பாதலால், யாராகிலும் இஷ்டர்கள் இதைக் கொட்டாவி விட்டவனுக்கும், அவன்போன்ற இதரருக்கும் சொல்லி, இனிக் கோர்ட்டார் காதில் விழும்படி யொன்றுஞ் செய்யாமலிருப்பதுதான் சட்ட முறையென்றறியச் செய்ய வேண்டும்.

## சமாசாரக் குறிப்புகள்

### ஆனரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் வி. கிருஷ்ணசுவாமி ஐயரவர்கள்.



சென்னை ஐகோர்ட்டில் வேலை மிக அதிகரித்துத் தீர்மானம் ஆகவேண்டிய வழக்குகள் முதலிய மிகுதியாயிருப்பதால், பின்னும் ஒருஜட்ஜி நியமனஞ் செய்யவேண்டும் என்று சென்னைக் கவர்ன்மெண்டார் எழுதினவண்ணமே, இந்திய செக்ரடரியாரும் அவ்வாறே ஒருஜட்ஜ் நியமிக்கலாம் எனச் சிலமாதங்களுக்கு முன்னர் உத்தரவனுப்பினர்கள். அங்ஙனம் புதிதாய் ஏற்படுத்தப்பட்ட ஸ்தானத்துக்கு ஆனரபில் மிஸ்டர். வி. கிருஷ்ணசுவாமி ஐயரவர்களை மாட்சிமைதங்கிய சக்கரவர்த்தியார் ஜட்ஜாக நியமித்தனர். உயர்நீதி சாலையென விளங்காநின்ற ஐகோர்ட்டில் வழக்குகள் நடத்திவரும் வக்கீல்களுக்குள் நடுநாயகமாய் விளங்கினவரும், சென்னை ராஜதானிக்குள் நடுநிலைமை முதலிய நற்குணங்களினிமித்தம் நம்மவர்களால் மிகப் பாராட்டப்பட்டவருமான ஐயரவர்களுக்கு இவ்வுன்னதபதவி கிடைத்தது, ஜனங்கள் யாவருக்கும் பெருமகிழ்ச்சிக்கிடமாம் என்பதிற் சிறிதும் ஐயமில்லை. இத்தகைய பெருமையாளருக்கு

இப்பதவியைக் கவர்ன்மெண்டார் அளித்தது மிக்க நியாயமான செய்கையாம்.

ஸ்ரீமான், கிருஷ்ணசுவாமி ஐயரவர்கள் செல்வமுள்ள ஒரு குடும்பத்தில் பிறந்தவர். இவர் தந்தையார் யாரும் மெச்சும் வண்ணம் டிஸ்டிரிக்ட் முனிசீப் வேலை பார்த்துவந்தவர். இவர் தஞ்சைஜில்லா திருவிடைமருதூர் ஸ்கூலில் மேல்வகுப்புகளில் கல்விகற்று, தஞ்சை செண்ட்பீடர்ஸ் காலேஜில் மிஸ்டர் மார்ஷ் துரையவர்கள் தலைமை உபாத்தியாயராயிருந்த காலத்தும், கும்பகோணம் கவர்ன்மெண்ட் காலேஜில், ராவ்பஹதூர் கோபாலராயரவர்கள் தலைமை உபாத்தியாயராயிருந்த காலத்தும், டிை கலாசாலைகளிற் கல்விகற்றனர். பின்னர் சென்னை பிரஸிடென்ஸி காலேஜில பீ. ஏ. படிக்க வந்து, ஆங்கிலம், சமஸ்கிருதம், தத்துவ நூல் முதலியவைகளில் மிகுந்த நிபுணராய் விளங்கி, ஸ்காலர்ஷிப், மெடல் முதலிய விருதுகள் பெற்று, வக்கீல் பரீக்ஷையிலும் தேறி, 1885-ம் வருஷத்தில் ஹைகோர்ட் வக்கீலாக நியமிக்கப்பட்டனர். 1892-ம் வருஷத்தில் நீதி சாஸ்திரக் கலாசாலையில் ஒரு உபாத்தியாயராக நியமிக்கப்பட்டுத் தமது வக்கீல் வேலைக்கு அது சிறிது இடையூறாய் இருந்தமையால் அவ்வேலையினின்றும் நீங்கினர். 1895-ம் வருஷத்திலிருந்து வக்கீல் வேலையில் மிக்க வருமானம் உடையவராய்க் கீர்த்தியும் பிரபலமும் பெற்று இன்றளவும் நியாயவாதிகளுள் திலகம்போலத் திகழ்ந்து, முதற்றரவருவாயுள்ளவராய் விளங்குகின்றனர். சென்ற 12-வருஷகாலத்தில் பெருந்தொகையைப்பற்றின பெரு வழக்குகள் எவையெவையோ, அவைகளுட் பெரும்பாலனவை நமது ஐயரவர்களை ஏதேனும் ஒரு சார்பில் வக்கீலாகக் கொண்டனவாம். ஸிவில் வழக்காயிருந்தபோதிலும, கிரிமினல் வழக்காயிருந்தபோதிலும், இவரால் நடத்தப்பட்ட ஒவ்வொரு வழக்கிலும், இவரது அரிய சாமர்த்தியமும், உண்மையாய்ப் பெரு முயற்சியுடன் பாடுபடுந் திறமும் பெரிதும் விளங்கிக் கொண்டிருக்கின்றன.

மிக, சென்ற சில வருஷங்களாக ஸ்ரீமான் கிருஷ்ணசுவாமி ஐயரவர்கள் பொது ஜன நன்மையை நாடிப், பொது ஜனக் கூட்டங்களுள் தாமும் பிரவேசித்து, ராஜாங்க விஷயங்களிலும், மற்றும் லௌகிக விஷயங்களிலும் தமக்குள்ள அபிப்பிராயத்தையும் நாட்டி, நன்மை அடைவதற்கு நாடவேண்டிய வழி இது, என்றுங் காட்டியுள்ளனர். சென்ற வருடங்களில் நம்மவர்களுட் சிலர் நன்மை தேடும் வழியிது வென உணராது ராஜாங்கத்தோடு மாறுபட்டு 'புதுக்கட்சியார்' என்னும் பெயரோடு வெளிவந்த சமயத்தில் 'அந்தோ! அவ்வழிச் செல்லாதீர். செல்வீராயின் பெய்ததேரை நீரெனக் கருதிப் பின் தொடர்ந்து பேதுரும் மானினது கதியை அடைவீர். அதிக ஆசை அதிக நஷ்டமாம் அன்றோ?' என முன்னறிந்துணர்ந்து எச்சரிக்கை செய்த கண்ணியவானும் இவரே. நியாய வழியிலேயே நந்நாட்டுக்குச் சிறிது சிறிதாக நன்மை தேடுவதே சரியான வழியெனக் கண்டுணர்ந்த மஹாஜன சபையைச் சார்ந்த அறிஞர் சிலருள் இவர் ஒருவர். சட்டநூல் ஏற்படுத்தும் சென்னை ஆலோசனை சபை அங்கத்தினருள்ளும் ஒருவராயிருந்து பல நன்மைகள் செய்திருக்கின்றனர். அவ்வாலோசனை சபையில் இவர் பிரவேசித்துக் கவனியாத விஷயங்கள் வெகு சிலவே. இப்போது வெளிவந்துள்ள 'எஸ்டேட்ஸ் லாண்ட்பில்' என்னும் சட்டம் ஏற்படுத்தப்பட்டபோது அது விஷயமாய் நடந்த ஆலோசனை சபைகளில் இவர் தம் மனதுக்கு எது நியாயம் எனப்பட்டதோ அதையே காட்டி, நடுநிலைமை குன்றாது வாதித்தனர். சென்னை யூனிவர்ஸிடியைச் சார்ந்த அங்கத்தினருள்ளும் இவர் ஒருவர். அவ்வேலை சம்பந்தமாகவும் இவர் கணக்கிலாப பிரசங்கங்கள் செய்திருக்கின்றனர். அப்பிரசங்கங்களைக் கவனித்தால் இவரது தெள்ளிய உணர்வும், விரிந்த கல்வியும், நுண்ணிய அறிவும், நன்கு புலப்படும். உறுதி உண்மை, தேசாபிமானம் இவை இவரது குண லக்ஷணங்களாம்.

சென்ற வருஷம் சென்னையில் மஹாஜனக்கூட்டம் கூடினபோது, பற்பலர் பலவாறு ராஜாங்க முறையோடு மாறுபட்ட அபிப்பிராயத்தை நாட்டப்புகுந்த சமயத்தில், மிக்க நிதானத்தோடு அவ்வண்ணம மாறுபடாத நியாய வாயிலாகவே நியாயம் பெறவேண்டுமெனத் தமக்குள்ள அபிப்பிராயத்தையே நிலை நிறுத்தி வெற்றிபெற்ற மேன்மையானரும் இவரே. நந்நாட்டார் கல்வி விஷயத்திலும், செல்வ விஷயத்திலும், மற்று எல்லா நல் விஷயத்திலும முன்னுக்கு வர வேண்டும் என்னும் தரும சிந்தையோடு, தமது செல்வத்தையும், திறத்தையும், காலத்தையும், அன்னோர் பொருட்டே உபயோகப்படுத்தின

உத்தம குணத்தரும் இவரே. மைலாப்பூரிலுள்ள சமஸ்கிருத கலாசாலை சரிவர நடந்து வரவேண்டி நிதிக் குவியல் அளித்தவரும், அத்தலத்தில் ஏழையர் பொருட்டுத் தரும வைத்தியசாலை வைத்தவருமான குணசீலரும இவரே. சுதேசியக் கைத்தொழில் எவரேனும் செயயப்புகின், அதற்கு வேண்டிய உதவி புரிவதற்கு முதல்வரும் பெருந்தகையாளரும் இவரே. சென்னை மஹாஜனசபை, இந்தியன் பாங்க், மைலாப்பூர் பண்ட், ஆதிய பொது ஜனசசாலைகள் தத்தம் வேலையை இடையூறின்றி நடத்தப் பேருதவி புரியும் பெருமையாளரும் இவரே.

பொதுஜன நன்மையை இத்துணைக் கருத்துடன் நாடிவந்த ஐயரவர்களை ஜட்ஜாக நியமனஞ் செய்துவிட்டபடியால், இனி அவர் பொதுஜனக் கூட்டங்களுட்போந்து உரைத்தன விஷயத்தில் நமது நுண்ணிய அறிவின் ஆய்ந்து சொல்லும் புத்திமதிகளைக் கேட்டுப்பலன்பெற நமக்கு மார்க்கம இல்லாது போயிறது; எனினும் இந்த ஜட்ஜி ஹோதாவில் இவர் தாம் பெற்ற பெரும்புகழை இவ்வுன்னத நிலையிலிருந்து இன்னும் பெருக்கி நிலைநிறுத்துவர் என்பதற்கு யாதோர் ஐயமும் இலலை.

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலில் தோன்றாமை நன்று."

* * *

'ஹாஸ்டல்கள' என்னும் 'வித்தியார்த்தி சத்திரங்கள்,' ஒவ்வொரு காலேஜிலும் இருக்கவேண்டுமென்றும், சொந்த வீட்டை விட்டுப் போய்ப்படிக்கும் குமாரர்களுடைய தேகரக்ஷணைக்காகவும், ஆசாரரக்ஷணைக்காகவும, இவைகள் அத்தியாவசியமென்றும், எல்லோருமொப்புகிறார்கள். ஆனால் இரண்டொருபெரிய ஹாஸ்டல்களின் அனுபவத்தை விசாரிக்கையில், இக்குமாரர்களுக்கும், இவர்களைப் பாலிக்க முயன்றவருக்தும், வேண்டாததுக்கம் வெகுவாய் வந்திருக்கக்காணுகிறது. எங்கேயோ துர்லக்ஷணமிருக்கவேண்டும். ஒருவொரு புறமுஞ் சூடொரு புறமுமிருப்பது சகசமல்ல வாதலால், விவேகிகளான பெற்றோர் இதன் ரகசியத்தையறியவும் பரிகாரந் தேடவும் பிரயத்தனப்படுவாராக.

* * *

நம்பூத்திரிமாராகிய மலையாளத்திய பூர்வீகப்பிராம்மணர்கள் கிருதயுக ஆசாரங்களை யின்னும் விடாமற் கைப்பற்றியும், தங்களுக்குள் காலக்கிரமத்தில் வந்திருக்கும் வேறு உபத்திரவங்களைத் திருத்த வகை தெரியாமலும் மயங்கியிருப்பது அவர்களைக் குறித்தேதாகிலும் தெரிந்தவரனைவர்க்கும் தெரியும். ஆனால் ஆலப்புழைக்கருகில் சமீபகாலத்தில் அவர்கள பிள்ளைகளுக்கென்று ஓர் இங்கிலீஷ் பள்ளிக்கூடமேற்பட்டு வேலை நடந்து வருவதாகக் கேட்டு மெத்தவும சந்தோஷிக்கிறோம். படிப்பு வாட்டும், மற்றைய சகல சுபங்களும் கிரமமாக வருவதில் தடையில்லை.

* * *

மாக்ஷிமை தங்கிய கவர்னரவர்களும், வேறு இரண்டொரு உத்தியோகஸ்தரும், அக்ரி காலேஜ் இளைப்பாறு மண்டபத்தில் நாலு நாளிருந்தார்கள். கோயமுத்தூரில் பிளேக் மும்முரத்தினால் ஜனங்கள் காலி செய்திருக்கும் தெருக்களைப் பார்த்துப்போனதாகவும், கூடிய சீக்கிரத்தில் அவ்வூர் மறுபடிப் பழைய ஸ்திதிக்குவந்து, ஜனங்களும் தத்தம் காரியங்களைத் தொடங்கி முன்போலச சுகிகளாயிருப்பதற்கு ஏதாகிலும் வழிதேட வேண்டுமென்று டாக்டர் முதலியோரை யெச்சரித்திருப்பதாகவும், கேள்வி. ஈசுவரானுக்கிரகமும் கூடி யிந்த நல்லெண்ணம் நிறைவேற வேண்டுமென்பதே எல்லோருடையவும் பிரார்த்தனை.

இரண்டுவருஷமாக அக்ரி காலேஜில் உத்தியோகதரபிலிருக்கும் கிருகஸ்தர்களுடையவும், கூலிகள் முதலியோருடையவும், ஜீவன விஷயத்தில் சில சில்லரையுபத்திரவங்களிருந்து வந்தன. அவைகளில் முக்கியமானது, உணவிற்கு வேண்டிய பதார்த்தங்கள் சுலபத்திலகப்படாத துக்கமேயாம். சென்ற நாலைந்து மாதமாக ஊரில் பிளேக்முதலிய உபத்திரவங்களினால் கடைத்தெருவில் போவதற்குக்கூடச சிலருக்குப்பயமுண்டாகி, இவவுபத்திரவங்களுக்குப் பரிகாரந்தேட முயன்றதில், ஊரில் சென்ற நாலுவருஷ காலமாகக் கோ ஆபரேடிவ் முறையில் காரியம் நடத்திவந்த 'ஸ்டோர்ஸ்' என்னும் மளிகையை யிவவிடத்திலுமோர் கிளையேற்படுத்தி வேலை நடத்திவர ஏற்பாடு செய்து, செப்டம்பர்மீ 25-ம் தேதி முதல் நடந்து வருகிறது. அதனால் சாங்கார் தோட்டத்திலும் அதையடுத்திருக்கும் இரண்டொரு சிற்றூர்களிலுமிருக்கும் ஜனங்களுக்குக் கூடிய சீக்கிரத்தில பல விதமாகவும் சகாயமாகக் கூடுமென்பதிற் தடையில்லை.

குறிப்பு ! கவனிக்கத்தக்கது லாபம் !!

# வித்யா விஹாரிணி

வித்யா விஹாரிணி சந்தாதாரர்களுக்கு அடியிற்கண்ட புத்தகங்கள் குறைந்த விலைக்குக் கொடுக்கப்படும். சந்தாதாரர்கள் ஆர்டர் செய்யும்போது அவர்கள் நெம்பரைக் குறிப்பிட்டுயெழுதவும். சந்தாதாரராகச் சேராதவர்கள் வருஷ சந்தாத்துகை ரூ. 5 அனுப்பி ஆர்டர் செய்யவும். இன்னும் பலவித அபூர்வ புத்தகங்களும் சந்தாதாரர்களுக்கு குறைந்தவிலைக்குக் கொடுக்கப்படும்.

| | விலை | சந்தாதாரர்களுக்கு |
|---|---|---|
| **காமாக்ஷி** | | |
| ஓர் கைப்பெண்ணின் கதி... | 0 8 0 | 0 6 0 |
| **அநுமான்ஸிங்** | | |
| ஓர் துப்பறியும் கதை ... | 0 12 0 | 0 8 0 |
| **தேசாபிமானிகள் சரித்திரம்** | | |
| பன்னிரு தேசபக்தர்களின் சரிதை .... | 0 12 0 | 0 8 0 |
| **ஆநந்தமடம்** | | |
| தேசபக்தி புகட்டுங் கதை ... | 0 8 0 | 0 4 0 |
| **சந்திரசேகரன்** | | |
| இந்து மாதுகளின் நல்லொழுக்கங்களை விளக்கிக் காட்டுங் கதை | 0 8 0 | 0 4 0 |
| **தமயந்தி** | | |
| ஓர் நவீன நாடகம் ... | 0 9 0 | 0 8 0 |

கணேஷ் அண்டு கம்பெனி,

வித்யா விஹாரிணி பிரசுரர்கள்,

சென்னை.

# அபலா சஞ்சீவினி

## ஸ்திரீ ஜாதியின் நோய்களை கண்டிக்கும் அமிர்தம்

ஸ்திரீ ஜாதியின் மலடு, மார்படபடப்பு, தொண்டைக்கட்டு, வயிற்று நோய் முதலியவை சௌக்யப்படும்.




ஸ்திரீ ஜாதியின் சகல நோயையும் கண்டிக்கும் சஞ்சீவி.

பாட்டில் விலை

**1-8-0.**

## பிளேக் நிவாரணி

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஹைமாதி பானகம் | 6 | அவுன்ஸ் | 1 | 0 | 0 | அடசௌதகிருதம் | 1 | அவுன்ஸ் | 0 | 12 | 0 |
| ஷை | 3 | ,, | 0 | 10 | 0 | ஷை | ½ | ,, | 0 | 8 | 0 |

இன்னும் எல்லாவித சாஸ்திரீகமான ஆயுர்வேத அவுஷதங்களும் எப்போதும்கிடைக்கும். காட்லாக்கு எந்தபாஷையிலும் வேண்டியவர்களுக்கு அனுப்பபடும்.

ஸ்ரீமான். பண்டிதர் கோபாலாசாரியார் அவர்கள்,

ஆயுர்வேத அவுஷதசாலை,

ஆச்சாரப்பன் தெரு, சென்னை.

Printed by G. C. Loganadham Bros., at the Guardian Press, Mount Road, Madras, S. C. and Published by Messrs. Ganesh & Co., Thambu Chetty Street, Madras.